
# உதிர்தலில்லை இனி



ஸ்ரீரஞ்சனி

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.17745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

Purchased Under the
Authors Aid Project 2019 of the
Department of Cultural Affairs

என்னுடைய மனவலிமை, உத்வேகம்
மகிழ்ச்சி என அனைத்துக்கும்
ஆதாரமான என் பிள்ளைகள்
சிவகாமி, அபிராமி, சங்கரிக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தலில்லை இனி

ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN : 978 - 955 - 4041 - 12 - 7

**மகுடம் பதிப்பக வெளியீடு - 18**

● நூல் - உதிர்தலில்லை இனி - சிறுகதைத் தொகுதி ● ஆசிரியர் - ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா (கனடா) ● **Sri.vije@gmail.com** ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - செப்டெம்பர் -2018 ● பக்கம்-126 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 400/=

● Book - Uthirthalillai Eni (short stories) ● Author -Sriranjani Vijenthira (Canada) ● **Sri.vije@gmail.com** ● © Author ● First Edition - September 2018 ● Size - 1/8 ● Pages-126 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 400/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் பதினெட்டாவது வெளியீடாக, ஸ்ரீரஞ்சனி விஜேந்திராவின் 'உதிர்தலில்லை இனி' என்ற இச்சிறுகதைத் தொகுப்பினை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இலங்கையில் தெல்லிப்பழையைச் சேர்ந்த ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா தற்போது கனடாவில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார். தமிழ் ஆசிரியராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றும் இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும்.

'நான் நிழலானால்' என்ற தனது முதல் சிறுகதைத் தொகுப்பின் மூலம் இலக்கிய உலகில் பரவலான அறிமுகத்தையும் அவதானத்தையும் பெற்ற இவரின் பதினாறு சிறுகதைகளின் தொகுப்பாக இத்தொகுதி வெளிவருகிறது.

தமிழ் ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் உள்ளதால் இவரது படைப்புக்களில் மொழிக்கையாளுகை உச்ச பட்ச சாத்தியத்தை தன் வயப்படுத்தியுள்ளது.

ஒரு பெண்ணாகவும், அன்பான தாயாகவும் இருப்பதினால் குழந்தைகளின் உளவியலை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கலை வெகு நுட்பமாக தனது கதைகளில் விபரிப்பதோடு அதற்கான முடிச்சுக்களையும் அவிழ்த்துச் செல்கிறார். ஈழத்தின் குறிப்பிடக் கூடிய பெண் எழுத்தாளர்களின் வரிசையில் ஸ்ரீரஞ்சனிக்கும் இடம் உண்டு எனக்கூறி கொள்வதில் எதுவித மாற்றுக் கருத்துக்கும் இடமிருக்க முடியாது.

நன்றி.

வாழ்த்துகளுடன்,
**வி. மைக்கல் கொலின்**
(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியான ஸ்ரீரஞ்சனியின் 'நான் நிழலானால்' என்ற சிறுகதைத் தொகுதி ஏற்கனவே வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்றது.

இத்தொகுப்பில் பதினாறு கதைகள் அடங்கியுள்ளன. புலம்பெயர் தேசத்தில் குடும்பம் என்ற கட்டுமானம் தகர்க்கப்படும் சந்தர்ப்பங்களில் குழந்தைகளுக்கு ஏற்படும் மனஅவசங்களையும் துயரங்களையும் சில கதைகள் சிறப்பாகப் பேசியுள்ளன. "உள்ளங்கால் புல் அழுகை" இவற்றுள் ஒன்றாகும்.

உளவியல் சார்ந்த அணுகு முறையில் இவர் தனது கதைகளை நகர்த்துகிறார். அதற்கு ஏற்ற வகையில் கதைகளின் பெரும்பகுதியை கதாபாத்திரங்களின் உரையாடல்கள் மூலம் கட்டமைக்கிறார். இந்த உத்திமுறை, பாத்திர வார்ப்புக்கும் கதையின் வளர்ச்சிப் போக்குக்கும் காட்சிப்படுத்தலுக்கும் வலுச்சேர்ப்பதாக அமைகிறது.

கதாபாத்திரங்களின் இயல்புகளையும் உணர்வுகளையும் சித்திரிப்பதில் ஸ்ரீரஞ்சனியின் ஆக்கத்திறன் ஆங்காங்கே பளிச்சிடுகிறது. தெளிந்த நீரோட்டம் போன்ற நடையில் அநாயாசமாகக் கதைகளை நகர்த்திச் செல்லும் விதமும் மொழிக்கையாள்கையின் நுட்பமும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன. கதைகளில் அவர் சொல்ல வந்த மனோநிலையை வார்த்தைகளால் காட்டாது கதையை வாசிக்கும் வாசகர்களின் மனதில் ஏற்றிவிடுவதில் அபாரத்திறமை வாய்ந்தவராக ஸ்ரீரஞ்சனி விளங்குகிறார். இத்தொகுப்பில் உள்ள 'பச்சை மிளகாய்', 'சில்வண்டு' போன்ற கதைகள் இதற்குத் தகுந்த உதாரணங்களாகும்.

ஸ்ரீரஞ்சனியின் கதைகளின் சமூகப் பெறுமானம் யாது என்று நோக்கினால், மனித அவல விடுவிப்புத்தான் உண்மையான கலை இலக்கியத்தின் தேடற்பொருளாகும். ஸ்ரீரஞ்சனியின் கதைகள் பலவும் இவற்றையே எமக்கு எடுத்து இயம்புகின்றன. இத்தொகுப்பு தமிழிலக்கியத்திற்கு ஒரு சிறந்த வரவு என்பதில் ஐயமில்லை.

**டாக்டர், தி. ஞானசேகரன்,**

எழுத்தாளர்,

ஞானம் சஞ்சிகை ஆசிரியர், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வணக்கம்.

என் கதைகளுக்குள் உங்களை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இலக்கியம் என்பது வாழ்க்கை பற்றிய ஒரு மொழிவு என்கிறார், W.H. ஹட்சன். அவ்வகையில் என்னைப் பாதிக்கும் விடயங்களைச் சத்தமாகச் சொல்லவேண்டுமென்ற ஒரு வேட்கைதான் என் எழுத்தின் ஆதாரசுருதியாக அமைகின்றது.

சமூகத்தில் நடப்பவற்றில் நல்லவை மட்டுமே எழுதப்படவேண்டுமென்ற நிலையை மாற்றி நிஜ வாழ்க்கை அனுபவங்களைத் தன்னுடைய கதைகளில் காட்டிய புதுமைப்பித்தனின் பாதையைத் தொடர்வதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என் மனதில் ஏற்பட்ட கீறல்கள் அல்லது அசைவுகள் உருவாக்கிய இந்தப் பேசுபொருள்கள் உங்களின் மனங்களிலும் ஏதோ ஒரு அசைவை ஏற்படுத்துமாயின் அதுவே என் எழுத்துக்கான சன்மானமாக இருக்கும்.

இந்தக் கதைகள் பற்றிய குறிப்புகளை வழங்கிய டாக்டர் தி.ஞானசேகரன் அவர்களுக்கும் சுதா குமாரசாமி அவர்களுக்கும் இக் கதைகள் பற்றிய தங்களின் கருத்துரைகளை அவ்வப்போது வழங்கி உற்சாகமும் ஆதரவும் தந்த அனைவர்க்கும், சிறப்பாக உள்ளங்கால் புல் அழுகை என்ற என் கதை பற்றிய தனது கருத்துக்களை ஜீவநதி சஞ்சிகையில் ஒரு கட்டுரையாக எழுதிய டாகடர். எம். முருகானந்தன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

'நான் நிழலானால்' என்ற என்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதி வெளியாகியபோது தங்களின் விமர்சனங்கள் மூலம் என்னைப் பரவலாக இலக்கிய உலகில் அறிமுகப்படுத்திய கார்த்திகாயினி சுரேஸ், மேமன் கவி, கலாநிதி சுல்பிகா இஸ்மெயில், இரா. சம்பந்தன், புதுவை ராமன் ஆகியோரையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். அத்துடன் எனக்கு எப்போதும் ஆதரவாக இருக்கும் கலாநிதி மைதிலி தயாநிதிக்கும் என் இதயம் நிறைந்த நன்றி. நிறைவாக இந்த நூலை வெளியிடும் மகுடம் பதிப்பகத்தினருக்கும் இதனை வாசிக்கப் போகும் உங்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி. உங்கள் அனைவரதும் கருத்துக்களை எதிர்பார்த்து அன்புடன் விடைபெறுகிறேன்.

அன்புடன்,

**ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


| | | |
|---|---|---|
| » | மனக்கோலம் | 07 |
| » | கனவுகள், கற்பனைகள் | 13 |
| » | யதார்த்தம் புரிந்த போது | 19 |
| » | வெளியீட்டுவிழா! | 26 |
| » | தடம் மாறும் தாற்பரியம் | 32 |
| » | உதிர்தலில்லை இனி | 38 |
| » | உள்ளங்கால் புல் அழுகை | 44 |
| » | மனசே மனசே | 49 |
| » | நெறிமுறைப் பிறழ்வா? | 55 |
| » | பேசலின்றிக் கிளியொன்று | 61 |
| » | இலக்கணங்கள் மாறலாம் | 67 |
| » | எதுவரை? | 72 |
| » | இப்போதில்லை | 78 |
| » | பச்சை மிளகாய் | 89 |
| » | நிகண்டுகள் பிழைபடவே | 97 |
| » | சில்வண்டு | 104 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

# மனக்கோலம்

"அம்மா என்னது?" என மகன் அருண் கேட்டபோது, மிகுந்த பெருமிதத்துடனும், மகிழ்வுடனும், "அம்மா எழுதின கதைக்குப் பரிசு கிடைச்சிருக்கடா, கண்ணா," என்றாள் அவள். "கெட்டிக்கார அம்மா!" மழலைப் பாராட்டுடன் அவள் கையிலிருந்த கடிதத்தைப் பறித்துக் கொண்டு அவனிடம் ஓடினான் அருண்.

"அப்பா, அம்மாக்குப் பரிசு கிடைச்சிருக்கு," எனச் சந்தோஷமாகச் சொன்ன மகனுக்கு "இதென்ன பரிசடா, போயும் போயும் ஒரு 100 டொலர்," என்று அவன் சொன்னபோது அவளுக்கு உள்ளம் ஒரு லட்சம் துண்டுகளாய் உடைந்து சிதறிப்போன மாதிரியிருந்தது.

பணத்தைப் பெரிதாக நினைக்கும் அளவிற்கு அவன் மாறிப் போய்விட்டான் என்ற நிதர்சனத்தை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

உன்னுடைய மனைவியின் கவிதையில் நெகிழ்ந்தோம், கதையில் நிதர்சனத்தைத் தரிசித்தோம், கட்டுரையில் நம்மை நாமே பார்த்தோமென மற்றவர்கள் பாராட்டும் பொழுதுகளில் நான் எவ்வளவுதூரம் மகிழ்வில் நிறைந்து போகிறேன் தெரியுமாவென ஊக்கம் தந்தவனுக்கு இன்று மனவுளைச்சலில் பாராட்டத்தான் முடியவில்லை என்றாலும் பரவாயில்லை, குழந்தையிடம் இப்படிச் சொல்லுமளவிற்கு இலக்கியம் கசந்து விட்டதா? அல்லது என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்து விட்டாதா? கண்களில் திரையிட்ட நீர்த்திவலைகளை அவளால் தடுக்க முடியவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முதல் அவனுடைய சிநேகிதன் பிரகாஷ் வீட்டிற்குப் போய்வந்த போது, "சீதனப் பணத்தில் வளமாக, வசதியாக வாழ்கிறவர்கள் கொடுத்து வைத்தவர்கள்," என்று அவன் சொன்னபோது அவளுக்கு என்ன சொல்வதெனப் புரியவில்லை, கண்ணீரைத்தான் பொலபொலவெனக் கொட்ட முடிந்தது.

"சீ, இப்ப நீ என்னத்துக்கு அழுகிறாய், மீனா? முதல் எண்டு ஒண்டில்லாமல் வாழ ஆரம்பிக்கேக்கை வாற கஷ்டங்களைச் சொன்னன்" என அவள் கண்ணீரைத் துடைத்துத் தலையை ஆதரவாக அவன் வருடிவிட்டபோது அவள் சமாதானப்பட்டுப் போனாள்.

இருந்தாலும் பின்தொடர்ந்த நிகழ்வுகளிலும், உணர்ந்தோ உணராமலோ சீதனம் வாங்காததைப் பற்றி அவன் அலட்டிக்கொள்வதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"உங்களின் கதைகள் எனக்குள் புதிய ஆரம்பங்களை ஏற்படுத்துகின்றன," என அவன் பாராட்டியது அவள் உள்ளத்தைத் தொட்டு, அவன் ஆர்வம் அவள் இதயத்தை மீட்டி அவன் பண்பு அவளுள் இனிய கீதம் இசைத்து... பின் அந்த ரசனையும் இந்தச் சிந்தனையும் மொட்டவிழ்ந்து காதலாக மலர்ந்தது... நினைக்க நினைக்க இனிக்கும் நிகழ்வுகள்.

ஒரு கலைஞனுக்கு, படைப்பாளிக்கு இலக்கிய நாட்டமுள்ள ரசிகன் வாழ்க்கைத் துணையாக அமையாவிட்டால் இலக்கிய தாபத்துக்கு வழிதேடுவது மிகக் கடினம். அவ்வகையில் உனக்கு நல்லதொரு துணை கிடைக்கிறது, உனது இலக்கியப் பயணம் சீரானதாக, சிறப்பானதாக இருக்கும், எனச் சிநேகிதிகள் வாழ்த்தியபோது மனம், காற்றின் வேகத்தில் உயர உயரப் பறந்த பொழுதுகள் எண்ணற்றவை.

பழகிய வீணையைத் தொட்டு மீட்ட ஆரம்பிக்கும் முன்பே, "உனக்கு வேறவேலையில்லையோ? பிள்ளையைப் பார் என்னசெய்யுதெண்டு, குசினி ஏன் இப்பிடி ஒரே குப்பையாகக் கிடக்கு," எனச் சித்தி மீது சிடுசிடுக்கும் சித்தப்பாவைப் பார்த்து மனம் கசந்தவளுக்கு அவன் ஒரு ரசிகன் மட்டுமல்ல, வீணையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நரம்பிலும் சுருதி கூட்டி உயிரை ஊடுருவும் இசை எழுப்பும் ஒரு கலைஞனும்தான் என்ற உணர்வைத்தான் அவனது ஒவ்வொரு செயல்களும் இதுவரை கொடுத்திருந்தன.

இலக்கிய ரசனையும், தமிழ் ஆர்வமும், அவர்களை இணைத்த ஆரம்பத்திலேயே, "என்ரை அப்பா, அம்மாவிட்டைக் காசும் இல்லை, சீதனம் வாங்கிச் செய்யிரவரைக் கட்டுவதில் எனக்கு விருப்பமும் இல்லை", என்று சீதனம் பற்றிய தன்பார்வையும் தன்னுடைய குடும்ப நிலையையும் அவனுக்கு அவள் தெளிவாகச் சொல்லியிருந்தாள்.

"என்னடா கணேஷ், காதல், லட்சியம், அப்பிடி, இப்படி எண்டு ஏதோவெல்லாம் பெரிதாகக் கதைப்பாய், இப்ப உன்ரை வாழ்க்கை எப்பிடியிருக்கு..." எனக் கேட்போருக்கு, "ஒராள் நல்லா இருக்கிறாரா, இல்லையா எண்டது வெளியிலை தெரிகிற வசதியிலும் டாம்பீகத்திலும் இல்லையடா, மனநிம்மதியும் நிறைவும்தான் வாழ்க்கையென நினைக்கிறவன் நான், அந்த வகையிலை மிகவும் நல்லா இருக்கிறன்." என மனதாரச் சொல்பவன் இப்படி மாறிப்போவான் என அவள் கனவுகூடக் காணவில்லை.

இலக்கிய ஆர்வமும், ரசனையும், இலட்சியங்களும் வயதுடனும் வசதியுடனும் தொடர்புடையதாய், அதற்கேற்ப மாறிப் போகின்றனவா?

இரண்டு நாட்களின் பின் ஒரு மாலைப் பொழுதில், பல்கனியிலிருந்த பூஞ்செடிகளுக்குப் பசளையிட்டுக் கொண்டிருந்தவளின் முதுகில் தொங்கியவாறு, "அம்மா நாங்க ஏன் இன்னும் அப்பாட்மென்றிலை இருக்கிறம், எப்ப வீடு வாங்கப்போறம்?" என அருண் கேட்டபோது, "கொஞ்சநாள் பொறுத்து வாங்குவம் ராசா," என்றாள். அவன் விறுவிறு என்று இறங்கி அவள் முகவாயை நிமிர்த்தி, "எப்ப அம்மா" என ஆவலாகக் கேட்டான். "சீக்கிரமாகவே," என்ற அவளது பதிலில் திருப்தியடையாத அவன் பின்னர் அப்பாவிடம் ஓடினான்.

சோபாவில் சாய்ந்திருந்தபடி பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அவனிடம், "அப்பா, எப்ப நாங்க வீடு வாங்கப்போறம்? ஆரூரன் அவையின்ரை வீடு நல்ல வடிவான பெரிய வீடப்பா, ஏன் நாங்க அப்பிடி வாங்கேல்லை?" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆருரனின்ரை அப்பாவுக்கு அவனின்ரை தாத்தா டவுன் போட்டு வீடு வாங்கிக் குடுத்தமாரி உன்ரை அப்பாவுக்கு ஆரும் தரேல்லையே", என்றான் அவன்.

"அதென்னப்பா, டவுன்? ஏன் அவை குடுத்தவை?"

"தங்கடை மகள்மாரைக் கலியாணம் செய்துகுடுக்கும் அப்பாமார், மகள்மார் வசதியாக வாழவேணுமெண்டு அப்படிக் காசு குடுப்பினம்."

"ஏன் அப்ப தாத்தா உங்களுக்குத் தரேல்லை?"

"எனக்கு அவை தரேல்லை."

"ஏனம்மா தாத்தா, அப்பாக்கு காசு குடுக்கேல்லை?"

அவளுக்கு கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு சொன்னாள். "அப்பிடிக் காசு வாங்கிற மூளை அப்ப அப்பாக்கு வரேல்லை."

நான்கு மாதங்கள் கடந்திருக்கும். அவனுடைய தங்கையின் திருமணத்திற்கு ஐம்பது ஆயிரம் டொலர் ஒரு மாதத்துக்குள் தேவை என்ற அறிவித்தலுடன் திடீரென ஒருநாள் அவன் தந்தை அங்கு வந்து நின்றார்.

"தங்கைச்சிக்கு இருபத்தொரு வயதுகூட ஆகேல்லை. கலியாணத்துக்கு இப்ப என்ன அவசரம்? அதைவிட எங்கடை தகுதிக்குத் தக்கமாரியெல்லோ தேடவேணும்?" என அவன் தனது இயலாமையை நியாயத்துடன் இணைத்தான்.

"அவள் உன்ரை தங்கைச்சிதானே, உன்ரை வழியிலை போகேக்கை நாங்க என்ன செய்யேலும்?" பதிலுக்குப் பதிலாக ஒரு கேள்வியை அவன் முன் அவர் வைத்தபோதுதான் அவனுக்குப் புரிந்தது.

"ஓ, காதலோ? எனக்குத் தெரியாதே, என்ன கனடாவிலை இருந்துகொண்டு அவ்வளவு சீதனம் கேட்கினமோ?" என்றான், அவன் குழப்பத்துடன்.

"உங்கை எல்லா இடத்திலும் இப்பிடித்தான் கேட்கினம், உன்னைப் போலத்தான் எல்லாரும் இருப்பினமெண்டு நீ நினைக்கிறியோ? அதைவிட, இவள் வயித்திலை பிள்ளையை வாங்கிப்போட்டெல்லோ காதலிச்ச கதையைச் சொல்லுறாள்... சும்மா கட்டுறதுக்கு அவன் ரெடியில்லை... ம், ஏதோ ஒப்பேத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சாகோணும், கிரெடிற் காட் எல்லாத்திலும் பிரட்டினாலும் ஒரு 20தான் எனக்குத் தேறும், மிச்சத்துக்கு நீதான் ஒரு வழிபாக்க வேணும்."

அவன் தலையில் பாறங்கல்லை ஏற்றிவிட்டு அவர் போய்விட்டார்.

ஒரு வாரமாகப் பல வகைகளில் முயன்றும் பயன் கிடைப்பதாக இல்லை. அலைச்சலும் விரக்தியுமே அவனுக்கு மிஞ்சியது. அதற்குள் சிலர், "சீதன ஒழிப்பு என்பது ஒரு சமுதாயப் பிரச்சினை கணேஷ், பாத்தியா, தனியொருவனா நீ அதை ஒழிக்க நினைப்பது சாத்தியமான ஒரு விஷயமில்லை. ஒரு பத்தாயிரம்கூட எப்படியெல்லாமோ சுழன்று எத்தனையோ பேரை வாழவைக்கும்," எனத் தத்துவம் சொல்லவந்தபோது அவனுக்குப் ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"என்னப்பா செய்யப் போறியள்?" அவன் மேல் பரிதாபப்பட்டாள் அவள்.

"உன்னைப் பெத்தவை ஒரு ஐந்து, பத்து தந்திருந்தால்கூட, அது இண்டைக்கு எவ்வளவாக பெருகியிருக்கும் சொல்லு பார்ப்போம். படிச்ச கடனோடை இருந்த உன்னை ஒருத்தன் வந்து சும்மா கொத்திக்கொண்டு போவான் எண்டு காவல் இருந்திருக்கினம்." பொரிந்துதள்ளினான் அவன்.

அவளுக்கு ஆத்திரம் வந்தாலும்கூட, பிரச்சினையை எப்படியும் தீர்க்கவேண்டுமே என்ற நினைப்பில், இருக்கிற நகை எல்லாத்தையும் விற்றால் எவ்வளவு வருமென்று முதலில் பார்ப்போம் என அவள் சொன்னபோது, ஓ, இதுதான் நம் காதலின் சிறப்பு என வரைவிலக்கணப்படுத்தப் போகிறாயோ என அவளில் எரிந்துவிழுந்தான் அவன்.

அவளுக்குப் பிரபஞ்சமே இருண்ட மாதிரியிருந்தது.

இருப்பினும், இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு வந்துவிட்டால் போதும், பின் தன்வாழ்வு அமைதியுடன் நகரும் என்ற நம்பிக்கையில் அவள் காத்திருக்கிறாள்.

"பாலைவனத்திலுள்ள வெம்மை அங்குள்ள செடி, கொடி, புல், பூண்டு யாவற்றையும் அழித்துவிட்டாலும் அங்குள்ள கழுகுக் குடும்பத்தை ஒன்றும் செய்ய முடிவதில்லையே. அதுபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டமும், வறுமையும் அழகு, சுகம், செழுமை போன்றவற்றை அழித்துவிட்டாலும் உள்ளன்பை மட்டும் அழிக்க முடிவதில்லை" என எங்கோ ஒரு நாவலில் டாக்டர்.மு.வ. சொன்னதை ஞாபகப்படுத்தி தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்கிறாள் அவள்.

**ஈழநாடு** (யாழ்ப்பாணம்)
1984 ஏப்ரல் (சிறிய மாற்றங்களுடன்)

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

# கனவுகள், கற்பனைகள்

சிம்கோ கடற்கரையில் வியாபித்திருந்த வெண்மணல் பரப்பிலிருந்து மணலைக் கைகளால் அளைந்து விளையாடிக் கொண்டிருந்தான் அவன். சூரியனது சங்கமத்தில், அவனுடைய நிறக் கதிர்களின் ஆக்கிரமிப்பில் வர்ணஜாலம் காட்டி ஆடிவரும் கடல் அலைகளும், குளிர்மை நிரம்பிய தென்றலின் வருடலும் மனத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டிக் கொண்டிருந்தன. அடுத்த முறை இங்கு வரும்போது ஆனந்தியும் கூட வருவாள் என்ற நினைவே இனித்தது. அவளது மடியில் மெல்லத் தலை வைத்துப் படுத்தபடியோ, இல்லை அவளது தோளில் மென்மையாகச் சாய்ந்தபடியோ, அவள் கரங்களைத் தன் கரங்களுடன் இணைத்துக் கொண்டு வாசித்த கதையைப் பற்றியோ அல்லது பார்த்த ஒரு படத்தைப் பற்றியோ விமர்சிப்பதாக, அவள் தன் தலையை அன்புடன் வருடி, மயிரைக் கோதி விடுவதாக எல்லாம் கற்பனை நீண்டது. ஓ! என்ன சுகானுபவம்!.

திருமணம் பேசப்பட்டபோது டாக்டர் பெண் என்றதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. படித்த பெண் வேண்டுமென்றதற்காக எனக்கு நல்ல தண்டனையோ என்று தகப்பனைக் கேட்டான். டொக்டருக்கு நோயும் அழுதுவடியும் முகங்களும், துன்பச்சூழலும்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துப் பழக்கமாயிருக்கும், எனது கனவுகளுக்கேற்ற மனைவியாய் வாழ அவளால் முடியாது என்று அண்ணனிடமும் மறுத்துவிட்டான். ஆனால், முடிவுகள் எம் கையில் மட்டும் இல்லையே!

அன்று ரொறன்ரோத் துர்க்கை அம்மன் கோயிலில் ஆனந்தியைச் தற்செயலாகச் சந்திக்கவேண்டி வந்ததன் விளைவுதான் மனமாற்றத்துக்குக் காரணமானது. அந்த அலைபாயாத நேர்கொண்ட பார்வையில், கனிவும், அழகும் நிறைந்த இனிய முகத்தில அவன் சலனப்பட்டுத்தான் போனான். டாக்டர் என்றால் சாதாரண பெண்ணாக இருக்க மாட்டாள் என்று நினைப்பது தப்புக் கணக்குத்தான் என்று தனக்குத் தானே சமாதானமும் கூறிக்கொண்டான்.

பின்னர் இருவரும் சில தடவைகள் சந்தித்துக்கொண்டார்கள், அதன் பின் அவன் திருமணத்துக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டான், ஆனந்தியின் விருப்பப்படி திருமணம் எளிமையாக, மிக நெருங்கியவர்களுடன் நடந்தது.

அன்றிரவு, "என்ரை லட்சியமெல்லாம் உயிர்த் துடிப்புள்ள என்ரை இனிய அன்பான மனைவியுடன் நான் வாழப்போகும் அமைதியான, மகிழ்ச்சியான வாழ்வில்தான் தங்கியிருக்குது, என்ரை அன்புக்கு அடையாளப் பரிசாக நீர் பெற்றுத் தரப்போகும் குழந்தைகள்தான் என் செல்வம்," என அவளை நெஞ்சோடு அணைத்தபடி அவள் காதுக்குள் கிசுகிசுத்தான் அவன்.

சில நிமிட மௌனத்தின் பின், "சாதாரணமான ஒரு பெண்ணைப் போல ஒரு குறுகிய வட்டத்துக்குள் சுழலாமல், புகழ்பெற்ற ஒரு டொக்டராக வந்து, கஷ்டப்பட்டு என்னைப் படிப்பித்த என் அப்பாவுக்குப் பெருமை தேடிக் கொடுக்கவேண்டும், அதுதான் என்ரை லட்சியம்," என அவள் சொன்னபோது, அவனது அன்பில் நனைந்து, கரைந்து, லயித்து, மகிழ்ந்து பதில் வரும் என எதிர்பார்த்தவனுக்கு அந்தப் பதில் மகிழ்ச்சியைத் தரவில்லைத்தான். இருந்தாலும், அதைப் பெரிதாகக் கருதாமல், "ஆனந்தி பதினொரு மணியாகிறதே," என்றான்.

"நீங்கள் நேரத்துக்கே படுத்திடுவீங்களா? நான் கிரேட் 12 படிக்கத் தொடங்கியதிலிருந்து இரவு 12மணிக்கு முதல் படுத்ததே கிடையாது. விடியவும் ஆறு மணிக்கெல்லாம் எழும்பியிடுவன். பிறகு என்ரை நோயாளருக்கு வேண்டிய குறிப்புகளைத் தயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டிருக்கும்போது அம்மா சாப்பாட்டை மேசைக்குக் கொண்டுவருவா," என அவள் சிரித்தபோது, அது தற்புகழ்ச்சியா அல்லது இனியும் இப்படித்தான் என்பதற்கு அத்திவாரமா என்பது அவனுக்குப் புரியவில்லை. நெஞ்சின் எங்கோ ஒரு பகுதியில் பலமாக இடித்ததுபோல வேதனையாக இருந்தது. எனினும், அது சில நிமிட நேரத்தில் இளமை மோகத்தில், அணைப்பின் சுகத்தில், பாதிப்பின் அளவு புரியாதளவுக்கு மறைந்து போய்விட்டது.

நான்காம் நாள், "இண்டைக்கு ஒரு முக்கியமான ஒப்பிறேசன் இருக்கு, கட்டாயமா நான் போகவேணும்", என அவள் வெளிக்கிட்டபோது அவளுடைய தந்தைக்குக்கூட ஒரு மாதிரித்தானிருந்தது. "என்னம்மா இது..." என்ற போது, "டொக்டர் யூ அப்பவே சொன்னாரப்பா, கலியாண அமளியில் இதை மிஸ் பண்ணிப் போடவேண்டாமெண்டு... பிளீஸ் அப்பா", என்றாளே தவிர அவனுக்கு ஆறுதல் சொல்லும் விதமாய் எதுவும் இல்லை. நல்ல பொஸ்தான் என எரிச்சலுடன் நினைக்க மட்டுமே அவனால் முடிந்தது.

வாரங்கள் உருண்டோடி மாதங்கள் ஆயின. அவள் வந்து தேநீர் அருந்தி முடிக்க முன்பே தந்தை கேட்க ஆரம்பித்துவிடுவார். "எப்பிடியம்மா உன்ரை லூக்கேமியா பேசன்ற் இருக்கிறார்? இண்டைக்கு உன்ரை வேர்க் சொப் நல்லாய் நடந்ததா? ... எப்ப அந்த றிசேச் பேப்பர் வருது..."

அவள் சுவாரஸ்யமாக பதில் சொல்லிக் கொண்டிருப்பாள். ஒரு பிள்ளையாக அவள் வளர்ந்த லட்சணம் அவளால் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் தம் பிள்ளையை அவனுக்கு விட்டுக் கொடுப்பதாயும் இல்லை.

சாப்பாட்டு மேசையில் சாப்பிடவென அவள், அவன், அவளுடைய தந்தை இருந்தால் கதை முழுவதும் ஆஸ்பத்திரியைப் பற்றியும், ஒப்பிறேசனைப் பற்றியும், அவளுக்குக் கிடைத்த பாராட்டுகள் பற்றியதாகவும் தானிருக்கும். தந்தை உற்சாகப்படுத்திக் கேட்கக் கேட்க அவள் அளந்து கொண்டிருப்பாள். சில நாட்களில் அவனிடம் கதைக்கக்கூட அவளுக்கு நேரமிராது. தாயோ, சகோதரியரோ இல்லாமல் அன்பு, ஆதரவான உபசாரம் எங்கே கிடைக்கும் என ஏங்கிக் காத்திருந்தவனுக்கு அந்த வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூனியமாகக் காட்சியளித்தது.

அன்று மொன்றியல் வல்முருகனின் தேர்த் திருவிழா. ஒவ்வொரு வருடமும் அதை அவன் தவறவிடுவதில்லை. அழகான அலங்கரிப்புடன் அருள் பிரவாகமாக முருகன் காட்சியளிக்கும் ரம்மியமான காட்சியும், வெளி வீதியில் நிகழும் பொங்கல் கொண்டாட்டமும் என்றுமே அவனுக்குத் தெவிட்டாதவை. அந்த அமைதியான மனதைக் கொள்ளை கொள்ளும் சூழலில் ஒலிபரப்பாகும் பக்திப் பாடல்களைக் கேட்டு மெய்மறக்க வேண்டுமென்ற திட்டத்தை இரு வாரங்களுக்கு முன் அவன் சொன்னபோது அவளும் சம்மதித்திருந்தாள். ஆனால் அன்றோ "ஸொறி டியர், இண்டைக்கு நான் வரேலாது முக்கியமான செமினார் ஒண்டுக்குப் போகவேண்டும். திருவிழா வாற வருடமும் வரும் தானே," என்ற போது அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. அவளோ அதை விளங்கிக் கொள்ளாமல், "இது என்ன சாதாரண ஆட்கள் மாதிரி சின்னச்சின்ன ஆசையெல்லாம்" என்று கேட்ட போது, அவனுக்குக் கோபமே வந்துவிட்டது. "எனது அறிவுக்குத் தான் எஞ்சினியர் பட்டமே தவிர உணர்ச்சிகளில் ஆசைகளில், கற்பனைகளில் நானும் சாதாரண மனிதன்தான். எனக்குச் சின்னச்சின்ன ஆசைதான். உனக்குத்தான் எதுவும் விளங்காதே!" எனக் கத்தத்தான் முடிந்தது.

ஆகாயத்தில் பஞ்சுப் பொதி போல் மிதந்து செல்லும் மேகத்தை ரசிப்பது, இரவில் நிலாவொளியில் அமர்ந்து நட்சத்திரங்களை எண்ணுவது, புற்றரையில் படுத்து உருளுவது, அலையடிக்கும்போது அதில் காலை நனைப்பது, கடலில் குளிப்பது... யாவுமே சின்னச்சின்ன ஆசைகள்தான். ஆனால் அவற்றை மனைவியுடன் பகிர்ந்து கொள்ள நினைப்பதுதான் பெரிய ஆசையா, ஏன் எனக்கு அவை கிடைக்க மாட்டேன் என்கிறது எனத் தன் விதியை நொந்துகொண்டான் அவன்.

பள்ளிக்கூடப் படிப்புப் படித்த அண்ணிக்கு உள்ள புரிந்துணர்வு கூட பல்கலைக்கழகம் வரை படித்த இவளுக்கு இல்லையே என்பதில் அண்ணாவின் அதிர்ஷ்டத்தை எண்ணி அவனுக்குப் பொறாமை கூட வந்தது. அண்ணா வரும்வரை காத்திருந்து, பின் பக்கத்தில் இருந்து பரிமாறி அவர் சாப்பிடுவதைப் பார்த்து ரசித்து, ஏதாவது ஒரு வழியில் எப்போதும் அவரை சந்தோஷப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையும் அண்ணியின் இயல்பை எண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டான்.

நல்லவர்கள் என்பதை மட்டும் தகுதியாகக் கொண்டு திருமணத்தில் இணைபவர்களுக்கு அவர்களுடைய உளப்பாங்குகள் எவ்வளவு தூரம் மாறுபட்டிருக்கின்றன எனப் புரியவா போகிறது. ஆனந்தியும் நல்லவள்தான். உபசாரம் செய்வதில், விருந்தினர்களை வரவேற்பதில், எதிர்வாதம் பேசாது கருத்துக்களைச் செவிமடுப்பதில்... ஆனால், சரி உங்களுக்குப் பிடித்தால் உங்களுடைய நண்பர்களுடன் போகலாம்தானே, எல்லாத்துக்கும் ஏன் என்னை எதிர்பார்க்கிறீர்கள் எனக் கேட்கும் அளவுக்கு அவனின் விருப்பங்கள் அவளின் பார்வையில் அசட்டுத்தனமானவையாக இருந்தன. அவன் ஏதாவது ஆசையாகச் செய்தாலென்ன அல்லது வாங்கிக்கொடுத்தாலென்ன அவளில் ஒரு நெகிழ்சி தெரியாது. அறிவு, அந்தஸ்து, சோடி, சாதகம் எனச் சகல பொருத்தங்களும் இருந்தும்... நாம் தேடிப் பொருத்தம் பார்க்க முடியாத எத்தனையோ விடயங்கள் தாம்பத்திய வாழ்வில் இணைய வேண்டியவர்களுக்கு இருக்கிறதே, இதைத்தான் தாரமும் குருவும் தலைவிதி என்கின்றனரோ!

பிரச்சினை, அகம்பாவத்தாலோ, பொருளாதாரக் கஷ்டத்தாலோ, மாமன் மாமி தொந்தரவாலோ அல்லது வேறு ஏதாவதினாலோ ஏற்பட்டிருந்தால் விட்டுக் கொடுப்பதாலோ அல்லது வீடு மாறுவதாலோ அதைத் தீர்க்கலாம். ஆனால் இதற்கு என்ன செய்யலாம்? அவள் டொக்டரென்ற படியால் அவன் வேலையால் வரும்போது அன்புடன் புன்சிரிப்பால் வரவேற்றுக் களைப்புக்கு ஒத்தடம் தர அவளால் முடியாதுதான். அதற்கு அவன் அனுசரித்துப் போவதுதான் பண்பும்கூட. வீட்டிலிருக்கும் பொழுதுகளிலாவது அப்படி அவள் செயற்பட்டால், அவனை ஆக்கிரமித்தால் அந்த இனிமைக்காக அவன் காத்திருக்க மாட்டானா? அந்த நினைவின் சுகத்தில் இடை நாட்களைக் கடத்தமாட்டானா? அவன் எதிர்பார்ப்பது எல்லாம் செல்லமான சிணுங்கலை, இடையே ஊடலை, இதைப் போடுங்கோ என உரிமையுடன் சொல்லி அவனை அழகு பார்க்கும் துடிப்பை, ஆழமாக எதைப்பற்றியாவது மெல்ல விவாதித்து அறிவு பூர்வமாகக் கதைப்பதை, பகிடி விடுவதை, ஒன்றாக ஒரு படத்தைப் பார்த்த பின் அதை விமர்சிப்பதை... ஆனால்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணியும் அண்ணாவும் சில வேளைகளில் ஆளுக்கு ஆள் தலைக்கு சாம்பு தேய்த்து விடுவதை, தலை துவட்டிவிடுவதைக் கூட அவன் பார்த்திருத்திருக்கிறான். அண்ணா அண்ணியைக் காதலித்து மணம் செய்ததால்தான் இருவருடைய உணர்ச்சிகளும் ஒருவரால் ஒருவர் புரியக்கூடியனவாய் இருக்கின்றனவோ?

ஐந்து வருடங்கள் முழுமையாகக் கழிந்துவிட்டன. சீ, இது என்ன ஆஸ்பத்திரியா, வீடா எனச் சினந்த காலம் போய், யாரை அறையலாம், எதை உடைக்கலாம் என ஏமாற்றங்களின்போது ஏற்படும் படபடப்பு மறைந்து, எதிர்பார்ப்புகள், கனவுகள், கற்பனைகள், அபிலாசைகள், ஆர்வத் துடிப்புகள் யாவும் சூனியமாகிப் போக, ஏதோ கடமை என்ற வாழ்வு வந்து விட்ட வேளையில் அவனது மூன்று வயதுக் குழந்தை காயத்திரியுடன்தான் அவனது பொழுதுகள் கழிந்து கொண்டிருக்கின்றன.

தன் குழந்தையாவது தனது கற்பனையை, கனவை நிஜமாக்க மாட்டாளா என்ற ஆதங்கத்துடன் அவன் காத்திருக்கின்றான். "அப்பா தேத்தா குடி, அப்பா வா, என்ரை அப்பா..," என்றெல்லாம் அவனுடன் ஒட்டிக் கொள்ளும் காயத்திரிக்குக் கதை சொல்வதில் மகிழ்வும், அவளின் மழலைப் பாட்டுக்களைக் கேட்பதில் நிறைவும் அடைகிறான் அவன்.

**ஈழநாடு** (யாழ்ப்பாணம்)
1984 ஜூலை (சிறிய மாற்றங்களுடன்)

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

# யதார்த்தம் புரிந்த போது...

மூன்று நாள் லீவில் நின்றபின் திருமதியாக மீண்டும் வேலைக்குப் போனபோது என்னில் இனம் தெரியாததொரு மாறலை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

எனக்கு வந்திருந்த கடிதங்கள் யாவும் என் மேசையில் எனக்காகக் காத்திருந்தன. அவற்றுக்குள் இருந்த அந்த நீல நிற என்வலப் பளிச்சென என் கண்ணில்பட்டது. மற்றவற்றிலிருந்து அதை விலத்தி எடுக்கும்போது, அது குமாருடையதுதான் என எனக்கு திட்டமாகத் தெரிந்திருந்தது. குற்றவுணர்வு என் மேல் அலைமோத கடிதத்தை நான் உடைக்கிறேன்.

என் அன்பு நிறை ஆனந்தி,

உங்கள் கடிதம் கிடைத்தது. எனது கடிதம் தாமதமாக வருவதற்கு உங்களிடம் முதலில் மன்னிப்புக் கோருகிறேன். இலங்கைக்கு வந்திருந்ததால் தடைப்பட்டிருந்த பல வேலைகளைச் சீர்செய்ய வேண்டியிருந்தது. அத்துடன் வெவ்வேறு statesல் நடைபெற்ற மூன்று கருத்தரங்குகளுக்குப் போகவேண்டியிருந்தது. படித்த உங்களுக்கு இதன் சிரமங்களைப் பற்றியெல்லாம் நான் சொல்லி விளங்கப்படுத்தத் தேவையில்லை. கடிதம்தான் எழுத முடியவில்லையே தவிர மனம் உங்களை மறக்கவில்லை. போன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் கதைக்கக்கூடிய வசதி இருந்தால் மிகவும் நல்லாயிருக்கும், உங்கள் அலுவலகத்துக்கு அழைக்கலாமா என்பதை எனக்கு அறியத்தரவும்.

நான் புதியதொரு ஆய்வினை மேற்கொள்ளவுள்ளேன். அதைப் பற்றி உங்களுக்கு நிறையச் சொல்லவேண்டும். நான் இங்கே செய்வதுபோல் அதை உங்களால் அங்கே செய்யமுடிந்தால் இரண்டு ஆய்வுகளையும் ஒப்பிட்டு உங்கள் பெயரையும் சேர்த்து research paper ஒன்றை வெளியிடலாம்.

இன்னொரு முக்கியமான விடயம் போன கடிதத்தில் மாமி வீட்டில் எனது cardஐப் பார்த்தபோது உங்களுக்கும் அப்படி வந்திருக்கும் என நீங்கள் எழுதியது பற்றி கீதா என்னிடம் ஆயிரம் கேள்விகள் கேட்டா. எனவே தயவு செய்து இனிமேல் நீங்கள் எனக்கு எழுதும் கடிதங்களை கீழுள்ள எனது அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.

அடுத்த ஆறு மாதத்துக்குள் எப்படியும் நான் இலங்கைக்கு வருவேன்!

நிறைந்த அன்புடன்,
குமார்

Professor குமாரும் அந்த ரம்மியமான பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலும் மனதினுள் படமாக விரிகிறது. இதமான காலநிலையும், அழகான மலைசார் சூழலுமாக விபரிக்க முடியாத, அனுபவித்துப் பார்க்க வேண்டிய சுகம் தரும் சூழல் அது. கடைசி நாள் பரீட்சை முடிந்தபோது அப்பாடா என்ற நிம்மதியை விட, பல்கலைக்கழகத்தை விட்டுப் போகப் போகிறோமே என்ற துடிப்பும் கவலையும்தான் பெரிதாகத் தெரிந்தன. நிஜமான உலகத்தில் இறங்கி வேலை தேடவேண்டும் என்ற சுமை வேறு. கடைசித் தடவையாக facultyஐ வலம் வந்து எல்லோருக்கும் bye சொல்லுவோம் என்று சென்றபோதுதான் அந்த நேரத்தின் அந்த இன்ப அதிர்ச்சி எனக்காகக் காத்திருந்தது.

பீரீத்தி என்ற பெயருக்கேற்ற அழகான அந்தச் சிங்களப் பெண் விரிவுரையாளர் ஒரு தமிழ் விரிவுரையாளர் அங்கு வந்திருப்பதாகவும் அவரின் ஆய்வுக்கு உதவியாளர் தேவைப்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் சொன்னபோது உயரமான, கரிக்கட்டிக் கறுப்பு என்றாலும் கவர்ச்சி நிறைந்த, வெறும் பார்வையால் மதிப்பை தனக்கு சம்பாதிக்கக் கூடிய ஆளுமை நிறைந்த ஒரு மனிதர் அங்கு வருகிறார்.

அவரைப் பார்த்ததும், "குமார், இது ஆனந்தி. உங்கடை PhD வேலைகளுக்கு உதவியாளர் ஒருவர் தேவைப்பட்டால், ஆனந்தி அதற்கு நல்ல பொருத்தமான ஒரு ஆள்," என ஆங்கிலத்தில் சொல்கிறார் பீரீத்தி. என்னை ஒருதடவை திரும்பி பார்த்த குமார், "சரி, என்னுடைய அலுவலகத்தில் வந்து சந்தியுங்கள்," என்கிறார்.

மிகுந்த ஆவலுடன் அவரைப் பின்தொடர்ந்து செல்கிறேன் நான். எனது அதிர்ஷ்டத்தை என்னால் நம்ப முடியவில்லை. "நான் ஏற்கனவே சிறில் என்றொரு மாணவனைத் தெரிவு செய்துவிட்டேன், இருந்தாலும் நிறைய வேலை இருக்குது. இரண்டு பேருமாகச் சேர்ந்து செய்யலாம்," என்கிறார், குமார்.

நைதரசன் பதிப்புக்கும், வேறுபட்ட கௌபி வகைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை அறியும் ஆய்வு அது. அந்த ஆய்வு சம்பந்தமான பல கட்டுரைகள், செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பான படிமுறைகள், குறிப்புகள் என்று நான் வாசிக்க வேண்டிய பெரியதொரு கட்டுடன் பீரித்தியிடம் மீண்டும் போய் செய்தியைக் கூறி, என் நன்றியையும் தெரிவித்தபின்னர் என் விடுதியை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறேன். இந்த வேலைபற்றி அறிந்தால் அப்பாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதில் என் மனம் இரட்டை மடங்கு உவகையில் நிறைந்துபோகிறது.

ஆய்வுக்கான பரிசோதனைகளைச் செய்வது, பின் அவை தொடர்பான தரவுகளைப் பதிவு செய்வது, ஆய்வு சம்மந்தமான பிற ஆய்வுகளை வாசிப்பது, அதன்பின் அவற்றைப் பற்றி குமாருடன் கலந்துரையாடுவது எனப் பொழுதுகள் மிகச் சுவாரஸ்யமாக கழியத் தொடங்கின. சிறில் வேலை முடிந்தவுடன் போய்விடுவார். அவர் சென்ற பின்னர் நாம் தமிழிலேயே பேசிக் கொள்வோம். குமாருடைய அறிவும், அவர் கதைக்கும் பாணியும் மிக அலாதியானவை. கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருக்கும். எங்களிடையே மெல்ல மெல்ல ஒரு ஈர்ப்பு ஏற்பட்டு, நல்லதொரு நட்பு மலர்கிறது.

"அவரை இனத் தாவரங்கள் மட்டும்தான் நைதரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்ககூடியவை என நினைத்தேன். அவரை இனமல்லாத Alder கூட நைதரசன் பதிக்குமாம், என்ன," வாசித்ததை ஆர்வமுடன் அவருக்குச் சொல்கிறேன். வைத்தவிழி மூடாமல் அவர் என்னைப் பார்க்கிறார்.

"நீங்கள் இதில் காட்டும் ஆர்வத்தைப் பாக்கும்போது சந்தோஷமாயிருக்கு. பட்டப்படிப்பு முடித்த ஒருவருடன் வாழ்க்கையைப் பகிர்ந்திருந்தால் எனது வாழ்க்கை இயல்பாக, அழகாக இருந்திருக்குமோ எனப் பலதடவைகளில் நான் நினைத்திருக்கிறன்" எனச் சொன்னவர் தொடர்கிறார், "நான் வேலைசெய்து கொண்டிருக்கும் போது என்ரை மனைவி நான் என்ன செய்கிறன் என்றுகூடப் பாக்கமாட்டா, TV பாக்கக் கூப்பிடுவா அல்லது படுக்க வரச்சொல்லுவா. உங்களைப்போல நான் செய்கிறதை விளங்கக்கூடிய ஒருவராக இருந்திருந்தால் அவ எனக்கு ஒத்துழைப்புத் தந்திருக்கக் கூடும்." அதைக் கேட்க எனக்கு கொஞ்சம் பெருமையாக இருக்கிறது.

சில நாள்களின் பின், ஒருநாள், "ஆனந்தி, இண்டைக்கு என்ரை மேலதிகாரிக்கு இதுவரை நான் செய்த வேலைகள் பற்றி அறிக்கையிட வேண்டும். ஆனா, இந்த correlation graphல் ஒரு புள்ளி மிகத் தூரத்தில் போய்நிற்குது. அதற்கு என்ன விளக்கம் குடுக்கிறது எண்டு விளங்கேல்லை. என்ரை கணிப்புகளில் ஏதும் பிழையிருக்கா அல்லது ஏதாவது தகவலைத் தவற விட்டுவிட்டேனா எனப் பாத்துச் சொல்லமுடியுமா?" என்று கேட்கிறார்.

நான் தொடக்கத்திலிருந்து எல்லாம் தேடிப்பார்த்து standard deviationல் இருந்த பிழையைத் திருத்த எல்லாப் புள்ளிகளும் மிக அழகாக நேர்கோட்டில் வந்து நின்றன. "Wow! இன்று முழுவதும் தேடினான் கண்டுபிடிக்கேல்லை" எனறவர், மெல்லக் கதவைச் சாத்திவிட்டு என்னைக் இறுகக் கட்டி முத்தமிடுகிறார்.

அதை நான் எதிர்பார்க்கவில்லை என்றாலும் தடுக்கவுமில்லை. அவர் மேல் எனக்கு இருந்த அபிமானமும் மதிப்பும் என் மேல் அவருக்கு ஏற்பட்ட ஈர்ப்பைப் பெருமையாக நினைக்க வைக்கின்றன. அவர் திருமணமாகி ஒரு பிள்ளைக்குத் தந்தை என்று தெரிந்திருந்தும் அறிவை மீறி மனம் லயிக்கிறது.

குமார் மீண்டும் திரும்பிப் போகும் நாளும் நெருங்கியது. அவரைப் பயணம் அனுப்ப யாழ்ப்பாணத்திலிருந்து அவரின் தங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோவும், மனைவி கீதாவின் அம்மாவும் வந்திருந்தனர். அவர்களை எனது விடுதி அறையிலே பராமரிக்க முடியுமா என அவர் கேட்டபடி அவர்கள் என்னுடன் தங்குகின்றனர்.

"கீதாவும் சரோவும் முந்தி நல்ல சினேகிதிகள். சரோ யாழ்ப்பாணத்திலை எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை தங்கியிருந்துதான் படிச்சவ. அதாலை எங்கடை வீட்டை ஒரே வருவா, கீதாவும் சரோவைப் பாக்க அங்கை போவா. அப்படிப் போன இடத்திலைதான் குமார் கீதாவைக் கண்டவர். பிறகு அவர் pHD செய்யப் போகேக்கே கலியாணம் செய்து கீதாவையும் கூட்டி கொண்டுதான் போனவர். அங்கே தொடந்து படிக்கச் சொல்லித்தான் கீதாவுக்குச் சொன்னவர். ஆனால் அவவுக்குப் படிப்பிலை பெரிய இஷ்டம் இருக்கேல்லை. இப்ப பிள்ளையும் வந்திட்டுது. இனியென்னத்தை அவ படிக்கிறது? அவர் நல்லா உழைக்கிறார், அது போதும் தானே!" என்கிறா கீதாவின் அம்மா.

பின்னர், "தம்பிக்கு இராசவள்ளிக்கிழங்கு நல்ல விருப்பமாம் என்று கீதா எழுதினவ. நான் கொஞ்சம் செய்துதாறன் கொண்டு போய்க் கொடுங்கோ," என்று அவ சொல்லிக் கொண்டிருக்கும் போது தனது சினேகிதிகளைச் சந்திக்கப் போயிருந்த சரோ உள்ளே வந்ததும் வராததுமாய், "மாமி வெளிக்கிடுங்கோ, ஆனந்தியுடன் போய் கொஞ்சம் உடுப்பு வாங்கிக்கொண்டு வருவம். அண்ணா காசு தந்திருக்கிறார்," என்கிறா. "நான் கொஞ்சம் இராசவள்ளிக்கிழங்கு செய்வமெண்டு நினச்சன்," என்ற மாமியை முடிக்கவிடாமல். "அதை வந்து செய்யலாம் தானே," என்று சரோ அவசரப்படுத்த "சரி அப்ப வாறன்" என்று மாமியும் வெளிக்கிடுகிறா.

அறைக்கு மீண்டும் வந்த போது, அழகான ஒரு ஊதா நிறச் சேலையையும், நல்லாயிருக்கு வாங்குங்கோ என நான் சிபாரிசு செய்து வாங்கிய நீலநிறச் சட்டையையும் தூக்கி, "இது உங்களுக்கு எங்கடை அன்பளிப்பு" என சரோ தந்து "சட்டையைப் போடுங்கோ, எப்பிடியிருக்குதெண்டு பாப்பம்" என வற்புறுத்த நான் அதைப்போடுகிறேன். பின் மாமியின் இராசவள்ளிக் கிழங்குடன் வேலைக்குப் போகும்போது எனக்குள் ஏனோ உள்ளூரச் சந்தோஷமாக இருக்கிறது.

எமது facultyக்குப் பின்பக்கமாக உள்ள குறுக்கு வழியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடக்கும் போது திடீரென கொட்டிய மழை என்னை நனைத்து விடுகிறது.

கிட்டப் போனபோது, முன்புற வாசலில் நின்ற குமார் "சட்டை அழகாக இருக்கிறது" எனப் பாராட்டுகிறார். பின்னர் "மாமிக்கும் சரோவுக்கும் உங்களை நல்லாய்ப் பிடித்திருக்கு" என்கிறார். இராசவள்ளிக்கிழங்கை அவரிடம் கொடுத்துவிட்டு என் வேலையிடத்துக்குப் போகிறேன்.

அடுத்த நாள் காலை சரோவையும் மாமியையும் சரசவுயன புகையிரத நிலையத்தில் பயணம் அனுப்பிவிட்டுத் திரும்பும் போது, "இன்று ஆறு மணிவரை இருப்பன்" என்கிறார் குமார். மனம் பதட்டப்படுகிறது, நேரத்தை அடிக்கடி பார்க்கிறேன். இன்றைக்கு அது என்றுமில்லாத வேகத்தில் ஓடுகிறது. இன்னும் ஒரு நாள் ஆவது கூட தங்கமாட்டாரா என்று மனம் ஆதங்கப்படுகிறது. நேரம் 5:30 ஆனதும் சிறில் bye சொல்லிப்போட்டு, "இனி வேலையுமில்லை, காசுமில்லை," என்கிறார். அவர் அப்படிச் சொல்லும் போது என் கண்கள் கலங்குகின்றன. சற்று நேரத்தில் குமார் தனது அறைக் கதவைத் திறந்து என்னைக் கூப்பிடுகிறார்.

ஆய்வு முடிவுகள், சிபாரிசுக் கடிதம் என்று சம்பிரதாயமான கதைகளின் பின், "இந்த மூன்று மாதம் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு பகுதியாகிவிட்டது" என்றபடி கதவை மூடுகிறார். பின் என்னை இறுக அணைத்து ஒரு முத்தம் தந்தபின் கதவை மீண்டும் திறக்கிறார்.

பரிசோதனைகளுக்கு நாங்கள் பாவித்த பெற்றிக்கிண்ணங்கள் எல்லாம் வெறுமையாக இருக்கின்றன.

அடுத்த நாள் வீட்டுக்குப் போகிறேன். கன்னொருவ ஆராய்ச்சி நிலையத்தில் நேர்முகப் பரீட்சைக்கு வரச்சொல்லி வீட்டுக்கு கடிதம் வந்திருக்கிறது. அந்தத் திருப்பம் ஒரு ஆறுதலைத் தருகிறது. குமாருடன் வேலை பார்த்த அனுபவம் இந்த வேலை கிடைக்க உதவும் என மனதுள் ஒரு நம்பிக்கை வருகிறது.

கீதாவின் அம்மா தங்களின் வீட்டுக்கு வரும்படி கேட்டிருந்தபடி அவவிடம் அடுத்த நாள் சென்றபோது அவவுக்கு கதைக்க ஒரு ஆள் கிடைத்ததில் மிகவும் சந்தோஷமாயிருக்கு. சாப்பிட்டு விட்டுத்தான் போகவேண்டும் என்கிறா. அப்படி நின்றபோதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கொக் விமானநிலையத்தில் transitக்குக் குமார் நின்றபோது அங்கிருந்து போட்ட post card வந்தது. அதைப் பார்த்ததும் எனக்கும் அப்படி ஒன்று வந்திருக்கும் என எனக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது.

அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற வீட்டுக்கு வந்திருந்த post card ஐப் பார்த்ததும் மனம் மீண்டும் உவகை கொண்டது. உடனே அதை, அந்த உணர்வைக் கடிதத்தில் எழுதி அவருக்கு அனுப்பியிருந்தேன்.

பின் நம்பமுடியாத வேகத்தில் என் வாழ்வில் நடந்த மாற்றங்களை எண்ணிப் பார்க்கிறேன். வேலை கிடைத்த ஒரு மாதத்துக்குள் திருமணம் பேசிவந்து, அது எல்லாம் சரியாகித் திருமணப்பதிவும் முடிந்து இன்று திருமதியாக நிற்கிறேன். குமாரின் நட்பும், உறவும் என் தொழில் ரீதியாக நான் முன்னேற மிகவும் உதவியாகவிருக்கும் என்றாலும், என் கணவன் இப்படி ஒரு தொடர்பு வைத்திருப்பதை என் மனம் ஏற்றுக்கொள்ளுமா எனச் சிந்திக்கிறேன். மனம் சற்றுத் தெளிவடைய எண்ணத்தைச் செயலாக்குகிறேன்

மதிப்புக்குரிய பேராசிரியர் அவர்களுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. என் வாழ்வில் நடந்த சில மாற்றங்கள் என்னை உங்கள் மனைவியின் இடத்திலிருந்து சிந்திக்க வைத்துள்ளன. நான் இப்போது தனி ஆள் அல்ல. எனது வாழ்வின சுக துக்கங்களில் பங்கு கொள்ள இன்னொரு ஜீவன் என்னுடன் இணைந்துள்ளார். நீங்களும் நானும் எங்கள் உறவை யாருக்கும் தெரியாமல் பேணுவது பெரிய விடயமல்ல. ஆனால் அவரும் நானும் ஒருவருக்கொருவர் உண்மையாக நடக்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன். மனச்சாட்சிக்குச் சரியாக வாழ வேண்டுமென நினைக்கிறேன்.

உங்கள் அறிவுக்கும், ஆளுமைக்கும் எப்போதுமே நான் விசிறி தான். ஆனால் எமது உறவுக்கு முற்றுப்புள்ளியிடுவது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

அன்புடன்,
ஆனந்தி

**ஞானம்** - 2008 மே

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

# வெளியீட்டு விழா!

மண்டபம் நிறைந்த ஆட்கள். விமர்சனம் செய்ய மூன்று பேர், ஆசி வழங்கவும் பாராட்டவும் என்று ஐந்து பேர் என மேடையில் கூடியிருக்கிறோம். தம்பியின் திருமணத்துக்கு வந்த இடத்தில் பங்குகொள்ளும் ஒரு புத்தக வெளியீட்டு விழா என்பதால் அத்தனை செயற்பாடும் எனக்குப் புதுமையாக இருக்கிறது. எழுத்தாளர் ஆனந்தன் மேள தாளங்களுடன் அழைத்து வரப்பட்டு மாப்பிளைக் கோலத்தில் அழகாகக் கொலு வீற்றிருக்கிறார்.

விழா இறைவனை வாழ்த்தும் பூ நடனத்துடன் ஆரம்பமாகிறது. அதைத் தொடர்ந்து ஆனந்தனின் மகளின் கனடாக் கீதமும் தமிழ் வாழ்த்தும், மனைவியின் வரவேற்புரையும் நிகழ்கின்றன. இன்னும் ஆட்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள். மண்டபத்தில் நின்ற சிலர் ஓடிச்சென்று இன்னும் கொஞ்சம் கதிரைகளைக் கொண்டு வந்து போடுகிறார்கள். எனக்கு நம்ப முடியாத அதிசயமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நான் பார்த்த வெளியீட்டு விழாக்களில் ஐம்பது பேர் வருவதே அருமை. இங்கேயுள்ள பல நூற்றுக்கணக்கான மக்களைப் பார்க்கும்போது மனம் குளிர்கிறது. இல்லாத பொருளில் ஆசை அதிகம் வருகிறது (Absence makes the heart grow fonder) என்பதுபோல் தாய் நாட்டை விட்டு வந்ததால் இவர்களின் தமிழ் பற்று, இலக்கிய ஆர்வம் என்பன பெரிதும் வளர்ந்திருக்கிறன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நினைப்பில் உள்ளம் சிலிர்க்கிறது. பரவசத்தில் மனம் நிறைகின்றது.

ஆசியுரைகளையும் பாராட்டு உரைகளையும் தொடர்ந்து புத்தக வெளியீட்டுரையை ஆனந்தனின் மதிப்புக்குரிய ஆசிரியர் துரை நிகழ்த்துகிறார். அத்தனை பேரும் ஆனந்தன் செய்யும் நல்ல விடயங்களைச் சொல்லிப் பாராட்டிய போது எனக்கு ஆனந்தனில் ஒரு மதிப்பு வருகின்றது. பின் தலைமை வகித்தவர் சிறப்புப் பிரதிகள் வாங்கவெனச் சிலரை அழைக்கிறார்.

"ஈழத்துத் தமிழர்கள் அனைவருக்கும் கௌரவம் தேடித் தந்த பெருமனிதன், மாகாண சபை அங்கத்தவர் மாண்புமிகு சபேசனின் அருமை மனைவி, கணவனின் வெற்றிக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் நிற்கும் பெருந்தகையாள் சியாமளா அவர்களை முதல் பிரதி வாங்க அழைக்கிறேன்."

சியாமளாவா, என்னுடன் படித்த சியாமளவா, பத்தாம் வகுப்புடன் படிப்புக்கு முழுக்குப் போட்ட அந்தச் சியாமளவா, இந்தச் சியாமளா என்னால் நம்ப முடியவில்லை. குட்டையாகக் வெட்டப்பட்ட அழகான சுருட்டைத் தலைமயிரும், உடல் முழுவதும் அழகான கைவேலை செய்யப்பட்ட சாறியுமாக மிக அழகாக இருந்தாள் அவள். இலக்கியத்திலும் இவள் முன்னுக்கு வந்துவிட்டாளா என அறிய ஆவலாயிருக்கிறது. பக்கத்தில் இருந்தவரிடம் "இவவும் எழுதுகிறவா?" என்று மெல்லக் கேட்கிறேன். "சிறப்புப் பிரதி வாங்கக் காசுதான் இருக்க வேண்டும்." பக்கத்தில் இருந்தவர் விஷமத்தனமாக என்னைப் பார்த்து சிரிக்கிறார். எனக்குக் குழப்பமாக இருக்கிறது. பின்னர் இன்னும் சிலரின் பெயர்கள் கூப்பிடப்படுகின்றன. அதில் பலர் வர்த்தகர்கள் என்பதும் புரிகிறது. எழுத்தாளன் என்றால் ஏழை என்ற நிலைப்பாடு மாறக்கூடிய காட்சியில் இதயம் நிறைகிறது.

அடுத்ததாக விமர்சன அரங்கு என்ற அறிவிப்பைத் தொடர்ந்து மேடைக்குச் சென்ற முதலாவது விமர்சகர். "ஆனந்தன் பெயருக்கேற்ற மாதிரி ஆனந்தமான மனிதன் எப்போதுமே நேர்முக சிந்தனை உள்ளவர். நல்லதை நினைத்து நல்லதையே செய்பவர். அவரின் மனதைப் போல் அவருடைய பூந்தோட்டமும் எப்போதும் மலர்ந்தேயிருக்கும். எந்த உதவி நாடிச் சென்றாலும் முகம் கோணாமல் உதவுவதில் அவருக்கு நிகர் அவரே. அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உனை நீ அறிந்தால்' என்ற இந்தப் புத்தகம் அவரது சிந்தனையின் வெளிப்பாடு. மனிதன் மனிதனாக வாழ வழி சொல்கிறது..." என்று அதிகமாக ஆனந்தனைப் பற்றிப் புகழ்ந்து பேசினார். ஆனால், ஆனந்தனின் புத்தகம் எப்படி அவரின் சிந்தனை வெளிப்பாட்டைக் காட்டுகிறது என்றோ அல்லது அந்தப் புத்தகம் எமக்கு வாழ வழி காட்டுகிறது என்று அவரை நினைக்க வைத்த விடயங்கள் யாவை என்றோ அவர் எதையும் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

இரண்டாவது விமர்சகர் பேசிக் கொண்டிருக்கும் போது எல்லோருக்கும் சிற்றுண்டிகளும் கோப்பியும் பரிமாறப்பட்டன. அதனால்போலும் சபையில் சற்று இரைச்சலும் கூடவாக இருந்தது. "அமைதியாக இருங்கள்!" என தலைமை வகித்தவர் பல தடவைகள் வேண்டிக் கொண்டார். எனக்கு நல்லூர் தேர்த் திருவிழாவில் நிற்பது போல் ஒரு பிரமையாக இருந்தது.

அந்த விமர்சகர் பாரதியைப் பற்றிப் பேசினார். பின் பாரதிதாசனைக் கொண்டு வந்தார். "அவர்கள் எல்லாம் தங்களை தாமே அறிந்திருந்தனர், அதனால் தான் அவர்கள் வெற்றியைக் கண்டனர்," என்றார். கடைசியில், "அது போல எங்கள் ஆனந்தனும் தன்னை அறிந்தவர். அதனால் உங்களையெல்லாம் நீங்கள் அறிய, உனை நீ அறிந்தால் என்ற இந்த புத்தகத்தைத் தந்திருக்கிறார்" என்று சொல்லிப் பலத்த கரகோஷத்தின் மத்தியில் தன் இருக்கையில் அமர்ந்தார்.

அதைத் தொடர்ந்து மேலும் சிலர் வந்து ஆனந்தனுக்கு மலர் மாலைகள் அணிவித்தனர். பொன்னாடைகள் போர்த்தினர். படங்களுக்கு போஸ் கொடுத்துக் கொண்டனர். நான் பேசும் நேரம் வந்தது.

"அனைவருக்கும் என் பணிவன்பான வணக்கம். இவ்வளவு தொகையான அளவில் நீங்கள் இங்கு ஒரு புத்தக வெளியீட்டு விழாவுக்கு வந்திருப்பது உண்மையிலேயே எனக்கு இன்ப அதிர்ச்சியைத் தருகிறது. அது மட்டுமன்றி ஒரு திருமண விழா போல் ஆனந்தனின் முழுக் குடும்பமுமே சேர்ந்து இந்த விழாவை நடத்துவது மனதுக்கு மிகவும் சந்தோஷத்தைத் தருகிறது. கனடாவுக்கு சொந்தக் காரணத்துக்காக வந்திருக்கும் எனக்கு இந்த விழாவைப் பார்க்கக் கிடைத்தது மிகவும் வித்தியாசமான அனுபவமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. அதற்கு முதலில் ஆனந்தன் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

'உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது தான் இலக்கியம். இந்த உண்மையின் தன்மை நம் வாழ்க்கையின் போக்குக்கு ஏற்ப மாறிக் கொண்டிருக்கிறது. அதை நாம் எப்படி மொழியாக்குகின்றோம் என்பது தான் இலக்கியம். நம் உணர்வுகளின் வெளிப்படை சில சமயங்களிலும் அதன் மறைப்பு சில சமயங்களிலும் இலக்கியமாகிறது' என்கிறார் பிரபல எழுத்தாளர் அம்பை அவர்கள். அந்த வகையில் ஆனந்தனின் உனை நீ அறிந்தால் என்ற இந்த நாவலில் நான் சில யதார்த்தத்தைச் சந்தித்தேன். கனடாவுக்கு வந்தும் சாதி பார்க்கும், சீதனம் கேட்கும் எம்மவர்களை ஆனந்தன் வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறார் என்று சொல்லுவது பொருத்தமில்லை ஏனெனில் அது உங்களுக்கும் எனக்கும் தெரிந்தது தான். ஆனால் அவற்றால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படும் மனத்தாங்கல்களை, உணர்வுகளை, பாதிப்புக்களை அனைவரும் விளங்கும் வண்ணம் அழகாகக் காட்டியுள்ளார். இதில் அவரின் உணர்வுகளின் வெளிப்படைத்தன்மை தெரிகிறது. கதைப் பின்னலும் பாத்திரங்களின் உரையாடல்களும் மிகத் தத்ரூபமாக உள்ளன. ஒரு உதாரணம்: 'நீ சொல்ற மாதிரி கண்ட கிண்ட எல்லாச் சாதிகளோடும் கலக்கிறது நடைமுறை விஷயமில்லை பிள்ளை, ஊரோடை ஒத்துப் போகவேணும், பிறகு நாங்கள் இனம் சனமோடை கொண்டாட வேணுமெல்லே' என்று மகளின் காதலுக்கு எதிர்ப்புக் காட்டும் பழமையில் ஊறிய தாய்க்கு முற்போக்குச் சிந்தனை கொண்ட மகள் சொல்கிறாள் 'உங்களுக்கு ஊரை பற்றித்தான் கவலை. எங்கண்டை மனங்களை யோசித்துப் பாத்தியளோ... ஆசீர்வாதம் வழங்க உங்களுக்கு விருப்பமில்லை எண்டால் தயவு செய்து விலகி நிண்டு வழியை விடுங்கோ'

ஆனால் பல பிரச்சினைகளை உதாரணத்துக்கு ஆண்கள் இரண்டு வேலைகள் செய்வதால் குடும்ப உறவுகளிடையே வரும் பிசிறல்கள், இடைவெளி, மனத்தகைப்பு, மேலும் பிள்ளை வளர்ப்பில், தலைமுறை இடைவெளியில் சூழலின் பாதிப்பு போன்றவற்றை எல்லாம் ஒன்றாகக் காட்ட முயன்றதால் சில அத்தியாயங்களில் கதையமைப்புக் குலைந்து கட்டுரை மாதிரி உள்ளது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலிட வாழ்வில் சந்திக்கும் எதிர் விளைவுகளின் முழு வெட்டு முகத்தோற்றத்தை ஒரு குறு நாவலில் உள்ளடக்க பிரயத்தனப்பட்டதால் அங்கு ஒரு பிறழ்வைப் பார்த்தேன்.

அத்துடன், 'உனை நீ அறிந்தால்' என்ற தலைப்பு எவ்வகையில் கதையுடன் ஒத்துப்போகிறது என்ற கேள்வியும் எனக்குள் எழுந்தது. மற்றவர்களின் மனநிலையைப் புரியாமல், விளங்கிக் கொள்ள முயற்சிக்காமல் வாழும் தன்மையும் சுயநலமும் எங்ஙனம் தன்னைத் தானே அறிவதில் சேர முடியும் என எனக்குப் புரியவில்லை. அதை எழுத்தாளர் புரியவைப்பார் என எதிர்பார்க்கிறேன்.

இது ஆனந்தனின் கன்னி முயற்சி. அவர் மேலும் மேலும் பல யதார்த்தமான, சமூக முன்னேற்றத்துக்கு உதவும் படைப்புக்களை படைக்க வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகிறேன். நன்றி."

பதிலுரைக்காக ஆனந்தன் எழும்பியபோது மீண்டும் பல மலர் மாலைகளும் பொன்னாடைகளும் அவன் கழுத்தில் விழுந்தன. ஆசியுரை சொன்னவர்கள் வாழ்த்தியவர்கள் விமர்சனம் செய்தவர்கள் எல்லோருக்கும் நன்றி சொல்கிறான். நான் உட்பட அங்கு பேசிய எல்லோருக்கும் தனக்கும் உள்ள உறவை விவரித்தவன். "மாலை மரியாதை எல்லாம் நான் எதிர்பாராதது. அதன் மூலம் உங்கள் அன்பைக் காட்டி என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டீர்கள்" என்று சொன்ன போது அவன் குரல் உடைகிறது. சில வினாடிகள் எடுத்து தன்னை ஆசுவாசப்படுத்தி, மீண்டும் நன்றி சொல்லி அமர சபை கலைந்து வரிசையாக வந்து அவனிடம் ஒரு என்வலப்பைக் கொடுத்து விட்டு புத்தகம் வாங்கிச் செல்கிறது. அத்தனையையும் வீடியோக் கமெரா தனக்குள் அடக்கிக் கொள்கிறது.

என்னைத் தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போக வந்த மாமாவைக் கண்டதும் ஒரு வாறாக அவனுக்குக் கிட்டப்போய், "போட்டு வாறன்"என்கிறேன். "கதையின் தலைப்பு பற்றி உங்களோடை தொலைபேசியில் கதைக்கிறன். சாப்பாடு இருக்கிறது. எடுத்துக் கொண்டு போங்கள்." என்கிறான். ஏன் பதிலுரையில் பதிலை எல்லோரும் கேட்கும் படி சொல்லாமல் எனக்கு தனியச் சொல்கிறேன் என்கிறான் என எனக்கு விளங்கவில்லை.

காரில் ஏறினதும் ஏறாமலுமா "அப்பாடா எவ்வளவு சனம். கனடாவிலை ஆட்கள் இலக்கியத்துக்கு கொடுக்கும் மதிப்பிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அசந்துபோனன்" என்று நான் சொன்னபோது மாமா என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். "பிள்ளை இது இலக்கியத்துக்கு கொடுத்த மதிப்பில்லை...எழுதினவருக்கு கொடுத்த மதிப்பு. ஆனந்தன் பல சங்கங்களில் அங்கம் வகிக்கிறான். ஒரு லோயருக்கு உதவியாளராக இருக்கிறான். அது சம்பந்தப்பட்ட அத்தனை பேரையும் அழைத்திருப்பான். இது கடமைக்கு வந்த சனம். உதிலை பாதிப் பேர் உந்தப் புத்தகத்தை வாசித்தால் போதாதே. விமர்சனம் செய்ய வந்தவையே வாசித்தினமோ என்னவோ. அது சரி, பொதுவாக இங்கை எல்லாரும் பாராட்டுரைதான் செய்கிறது வழமை. நீ விமர்சனம் செய்தனியோ, பாராட்டுரை செய்தனியோ?" என்று குறும்பாகக் கேட்டபோது நான் பார்த்து அதிசயப்பட்டதெல்லாம் விபரமாய் விளங்கியது.

கடற்கரையில் நான் ஆசையாய்க் கட்டி விளையாடிய மணல் வீடு திடீரென்று உடைந்த மாதிரி எனக்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்தது.

**ஜூனியர் விகடன்** - 2009 ஜூன்

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

# தடம் மாறும் தாற்பரியங்கள்

விசாலமாக இருந்த அந்தச் செங்கல் கட்டிடத்தினுள் நுழைவதற்கான அழைப்புமணியை அழுத்தியபோது இதயம் கொஞ்சம் சுருதி பிசகிக்கொள்கிறது.

பிள்ளை ஒருவர் ஏதாவதொரு வகையில் துன்புறுத்தப்படுகிறார் அல்லது புறக்கணிக்கப்படுகிறார் எனச் சந்தேகம்வரும் சூழல்களில், குறித்த பிள்ளையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக CAS அந்தப் பிள்ளையின் குடும்பத்தில் இடையீடுசெய்வது வழமை. அதுவும் அவர்களுடைய அலுவலகத்தில் சந்திப்பு என்றால் சற்றுச் சிக்கலான பிரச்சினைதான் என்பது என் அனுபவத்தின் மூலம் தெரிந்திருந்தது.

வரவேற்பறையினுள் புகுந்ததும், "லதா, தமிழ் மொழிபெயர்ப்பாளர். இரண்டு மணிக்கு சில்வியாவுடன் எனக்கொரு சந்திப்பிருக்கிறது," என அந்த வரவேற்பாளருக்கு என்னை ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

"சரி, வருகையாளர்களுக்கான இந்தப் புத்தகத்தில் கையொப்பமிடுங்கள்," என்று சொல்லிவிட்டு அவர்களது விருந்தினர் என அடையாளம்காட்டும் பெயரட்டை ஒன்றைத் தருகின்றார், அந்த இளம் பெண் வரவேற்பாளர்.

கண்களால் அவ்விடத்தை ஒரு முறை வலம் வந்துவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்திருந்த ஒரு கதிரையில் போய் அமர்ந்துகொள்கிறேன், நான். ஏக்கம் நிறைந்த கண்களுடனும், கனமாகத் தெரிந்த ஒரு பெரிய பையுடனும் வாசலருகில் இருந்த அந்தத் தமிழ் பெண்ணைப் பார்த்தபோது அவளுக்குச் சேவைவழங்கத்தான் நான் வந்திருக்கிறேன் என்பது புரிந்தது.

எனது வேலைக்குரிய ஒழுக்கக் கட்டுப்பாட்டை மீறாமலிருக்கவென கைப்பைக்குள் இருந்த 'சிவனே என்று' என்ற அந்தக் கவிதைப் புத்தகத்தை எடுத்து வாசிக்க முயன்றபோது, வாசலில் கேட்ட பலமான காலடிச் சத்தங்கள், என் கவனத்தை வாசலை நோக்கித் திருப்புகின்றன.

ஓடி வந்த வேகத்தில், "மம்மி," என்று மிகக் குதூகலமாகக் கூவியபடி அங்கிருந்த அந்தத் தமிழ்ப் பெண்ணை இறுகக் கட்டிக்கொள்கிறாள் மூன்று வயது மதிக்கக்கூடிய ஒரு சிறுமி. அவளின் பின்னால் இரு சிறுவர்களும் அவர்களின் தந்தை எனச் சொல்லக் கூடிய ஒரு நடுத்தர வயது ஆணும் நின்றனர்.

அதைத் தொடர்ந்து, "நீங்கள்தானா தமிழ் மொழிபெயர்ப்பாளர்?" என ஆங்கிலத்தில் கேட்டபடி என் அருகே வந்த சுருட்டை முடியும், கவர்ச்சியான கண்களும், எடுப்பான மூக்கும் கொண்ட அந்த அழகான பெண்ணை நோக்கி "ஆமாம்," சொல்லும் போது "நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்," எனச் சொல்லவேண்டும் போல வாய் குறுகுறுத்தது. ஆனால் என் வேலைக்குரிய சட்ட திட்டங்கள் மீண்டும் நினைவுக்கு வர, "எனது பெயர் லதா. 'லோலோவின்' ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர். நீங்கள் சொல்கிற எல்லாவற்றையும் முடியுமானளவுக்குச் சரியாக மொழிபெயர்த்துச் சொல்வதுடன் அவற்றை அந்தரங்கமாக வைத்திருப்பேன். எந்தப் பக்கமும் சார்ந்து கதைக்கமாட்டேன்", என என்னை உத்தியோக பூர்வமாக அறிமுகம் செய்து கொள்கிறேன், நான்.

பின்னர் எங்களைப் பார்த்ததும் எழுந்து நின்ற அந்தப் பெண்ணும் அவளது மூன்று பிள்ளைகளும் அந்த மனிதரும் எங்களைப் பின்தொடர, அந்த அலுவலகத்துக்கு அருகில் இருந்த குழந்தைகள் விளையாடும் மைதானத்துக்கு நாங்கள் போகிறோம். போகும் வழியில் அவர்களுக்கும் என்னை நான் அறிமுகம் செய்துகொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாய் தன் பிள்ளைகளுடன் என்ன கதைக்கிறா, பிள்ளைகள் அவருடன் என்ன கதைக்கிறார்கள் என்பதை மட்டும் நீங்கள் மொழிபெயர்த்தால் போதும்", என என்னிடம் சொல்கிறா, சில்வியா.

பின்னர், அவளைப் பார்த்து அந்த விளையாட்டு மைதானத்தின் ஒரு கரையில் போடப்பட்டிருந்த ஒரு வாங்கைக் காட்டி, இதில் இருப்போமா எனச் சில்வியா கேட்ட போது, "இல்லை, வெய்யில் இல்லாத இடமாக வேண்டும்," எனச் சொல்லியபடி நிறம் மாறிக்கொண்டிருந்த மேப்பில் மரமொன்றின் கீழ்ப் போய் அமர்ந்து கொண்ட அவள், அவசரம் அவசரமாக தனது பைக்குள் இருந்த பலாப்பழ ரின்னைத் திறந்து, அதைத் தனது மூன்று பிள்ளைகளுக்கும் மாறிமாறித் தீத்த ஆரம்பித்தாள்.

"அம்மா, உங்கடை லோயரிட்டையிருந்து உங்களுக்குக் கடிதம் வந்ததே?" எனக் கேட்கும் அவளது மூத்த மகனின் கேள்விக்கு எந்தப் பதிலும் சொல்லாமலே, "சாப்பிடு, சாப்பிடு," என்று அந்தப் பலாப்பழத்தைக் கொடுப்பதிலேயே அவள் மிக மும்மரமாக இருந்தாள். ஆனால், அவனோ அதையே திரும்பத் திரும்ப அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்த நிலைமையை மாற்றவோ என்னவோ, என்னையும் சில்வியாவையும் பார்த்து, "உங்களுக்குப் பலாப்பழம் வேண்டுமா?" எனச் சைகையால் கேட்டவள், நாங்கள் எங்களுக்கு வேண்டாம் என்றதும், அவளுக்குத் தெரிந்த ஆங்கிலத்தில், இலங்கையில் அவளுடைய வீட்டில் பலாமரம் நிற்பதை எங்களுக்குக் கஷ்டப்பட்டு விளங்க வைக்க முயன்றாள்.

அதன் பின்னர் பிள்ளைகளும் பெற்றோரும் ஊஞ்சல்களில் ஒருவரை ஒருவர் மாறிமாறி ஆட்டத் தொடங்கினார்கள்.

அவளை ஊஞ்சலில் ஆட்டுவதும், அவளுடன் கொஞ்சலாக் கதைப்பதுமான அவனின் செய்கைகளில் அவளைப் பிரிந்திருக்கும் விரகதாபமும் தவிப்பும் நன்கு தெரிந்தன. பிள்ளைகள் தமக்குள் விளையாடிக் கொண்டிருந்தனர். வேறு சில குடும்பத்தவர்களும் அங்கு நின்றனர்.

மழை வரப்போகிறதா அல்லது அது இடம்மாறும் வெறும் கார்முகில் கூட்டமா எனத் தெரியவில்லை. ஓடிக்கொண்டிருந்த கார்மேக முகில் கூட்டத்தினுள் தான் ஒளிவதும் பின் வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதுமாக சூரியன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தின் பின் சில்வியாவை நோக்கி வந்த அவன், "இன்னும் எத்தனை நாளைக்கு நாங்கள் இப்படிச் சந்திக்கோணும்? எங்கடை பிரச்சனையைக் கொஞ்சமாவது விளங்கிக் கொள்ளுங்கோவன். என்ரை மனிசி இல்லாமல் என்னாலை பிள்ளைகளைத் தனிய வளக்கேலாது. தாயின்ரை இடத்தை என்னாலை நிரப்பவுமேலாது. அதோடை சும்மா தேவையில்லாமல் நான் இரண்டு வீட்டுக்கு வாடகைக் காசு குடுத்துக் கொண்டிருக்கிறன். எப்பதான் உங்கடை அறிக்கையைக் குடுக்கப் போறியள்?" என மூச்சுவிடாமல் ஆங்கிலத்தில் கூறிமுடித்தான்.

"நான் அவதானித்த விடயங்கள் பற்றிய என்னுடைய அறிக்கையை நான் விரைவில் சமர்ப்பிப்பேன். பிறகு உங்களுடைய மனைவி போகும் 'கோபத்தைக் கட்டுப்படுத்தும் வகுப்புக்களின்' இணைப்பாளர் அவவின் முன்னேற்றம் பற்றி விபரிக்கவேண்டும். அவை எல்லாவற்றையும் பார்த்தபின்னர், அவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு தன்னுடைய தீர்மானத்தை அடுத்த கோட்டுத்தவணையின் போது நீதிபதி சொல்வார். அதுவரை கொஞ்சம் பொறுமையாக இருங்கள்...," என அவனுக்கு ஆங்கிலத்தில் சில்வியா விளங்கப்படுத்திக் கொண்டிருந்தபோது அவர்களின் இரண்டாவது மகன், தனது தங்கையின் கன்னத்தில், அவள் அழஅழ மாறி மாறி அறைந்து கொண்டிருந்தான். அவளின் அலறலுக்கு மேலாகத் தாய் சத்தமாகக் கத்திக் கொண்டிருந்தாள்.

"பாத்தீங்களா, பாத்தீங்களா, இவனை! எந்தச் சொல்லும் கேக்காமல் இப்பிடி நடக்கிற இவனை வைச்சுக் கொண்டு நாங்கள் என்ன செய்யிறது? மூண்டு பிள்ளையளோடை தினமும் கஷ்டப்படுகிற என்ரை மனுசிக்கு, அண்டைக்கு அவன்ரை தொந்தரவைத் தாங்க முடியேல்லை. சும்மா ஒருக்கா அவனின்ரை காதை முறுக்கி, சின்னதாக அடிச்சதை, அவன் ரீச்சருக்குச் சொல்ல, பிறகு நீங்கள் அதைப் பெரிசாக்கி, இப்ப எங்கடை வாழ்க்கையைப் பாழாக்கிறியள்....," அவன் உணர்ச்சிபூர்வமான கோபத்துடன் பொழிந்தான்.

அப்படி அவன் சொன்னது, சில்வியாவுக்கு கோபமூட்டியதா இல்லையா என்பதை அவளின் முகத்திலிருந்து என்னால் அறிய முடியவில்லை, ஆனால் அது எனக்கு ஒருவித அசௌகரியத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி என்ன நடக்கப்போகிறதோ என்ற குழப்பத்தையும் எனக்குத் தந்தது.

“சரி, உங்கடை சந்திப்புக்கான நேரத்தை நான் இதோடை முடிக்கப்போறன். இந்தச் சம்பவத்தைப் பற்றி நான் என்ரை மேற்பார்வையாளரோடை கதைக்கோணும். உங்கடை மனைவியின்ரை அந்தச் செயலை இப்பிடி நியாயப்படுத்துகிற உங்களோடை, உங்கடை பிள்ளையள் இருக்கிறது அவைக்குப் பாதுகாப்பா எண்டு நாங்கள் ஆராய வேண்டிய தேவை இப்ப வந்திருக்கு. பிள்ளையளைத் துன்புறுத்துறதும் இந்த ADHDக்கு (கவனக்குறைவும் அதீத செயற்பாடும்) காரணமா இருக்கும், அதை மோசமாக்கிறதா அமையும் எண்டெல்லாம் நாங்க கதைச்சது உங்களுக்கு ஞாபகமிருக்கா? பெற்றோரிட்டை இருந்துதான் பிள்ளையள் வன்முறையைக் கற்றுக் கொள்ளுயினம்,” சொல்லிவிட்டு சில்வியா எழும்பினா.

பூகம்பம் ஒன்று வெடித்து சிதறியது போலவும், பின்னர் பெரியதொரு அலை வந்து அவை எல்லாவற்றையும் அடித்துச் சென்ற மாதிரியும், ....சட்டெனச் சில நிமிடங்கள் பலத்ததொரு அமைதி அங்கு நிலவியது!

“நேரம் முடிஞ்சுதாம்.... சீ, இவன்ரை பழக்கவழக்கத்தாலை சில்வியாவுக்கு கோவம் வந்திட்டுது. இவனாலை எப்பவும் பிரச்சனைதான்,” என்று சொன்ன அவனைப் பரிதாபமாகப் பாத்தாள், அவள். பின்னர், பிள்ளைகளைப் பார்த்து, “பிரியா, சுதன், இந்த பையிக்கை கொஞ்சம் முட்டைமாவும் தொதலும் கிடக்குது. அதோடை அம்மா கொஞ்சம் இறைச்சிக்கறியும் புட்டும் வைச்சிருக்கிறன். எல்லாத்தையும் வடிவாச் சாப்பிடுங்கோ, என்ன.... நாளைக்கு நல்லா எண்ணெய் தேய்ச்சு முழுகுங்கோ... அடுத்தகிழமை வந்து அம்மாவோடை விளையாடலாம், என்ன?” என்றாள் அவள்.

அவளின் கண்கள் ஈரமாக இருந்தன.

மூத்த மகன் வந்து, “ஹக் மீ” என்று சொல்லி தாயைக் கட்டியணைத்து முத்தமிட்டான். மற்றவன் பேசாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். சின்னவளைத் தாய் முத்தமிட்டபோது, அவள் தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, “மம்மி, நோ, நோ, ஐ டோன்ற் வான்ற் ரு கோ, நீங்களும் எங்களோடை வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மம்மி... ஐ வான்ற் மம்மி, ஐ வான்ற் மை மம்மி!" என்று பெரிதாகச் சத்தம்போட்டு அழுதாள்.

அப்படி அவள் அழஅழ அவளைத் தாயிடமிருந்து பறித்தெடுப்பது போலத் தூக்கியெடுத்த அவன், "இந்த வெள்ளையளுக்கு என்ன தெரியும்? பதினெட்டு வயசானதும் இனி உன்ரை வேலையை நீ பார் எண்டு, தங்கடை பிள்ளையளை அவை கலைச்சுவிடுற மாதிரியே நாங்கள் பிள்ளை வளக்கிறனாங்கள்...?" என வெறுப்பாகச் சொல்லிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

எங்கிருந்தோ வந்து என்னில் பட்டுத் தெறித்தது ஒரு மழைத்துளி. வானத்தை அண்ணாந்து பார்க்கிறேன். கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்த சூரியனை அங்கே காணவில்லை, கரும்மேகக் கூட்டங்கள் வானத்தை மறைத்திருந்தன.

"கிளிப்பிள்ளை மாதிரிச் சொன்னதைத் திருப்பிச்சொல்றது மட்டும்தான் எங்கடை வேலை கலந்துரையாடல்கள் எதிலும் நாங்கள் பங்காளர் இல்லை" என்றெல்லாம் மொழிபெயர்ப்பாளருக்கான வகுப்புக்களில் திரும்பத்திரும்பச் சொல்வதை மீளவும் ஒரு தடவை நினைத்துக்கொள்கிறேன்.

என் இதயம் பலமாகக் கனத்தது.

**'முகங்கள்' சர்வதேச**
**எழுத்தாளர்களின் சிறுகதைகள்**
**தொகுப்பு - 2010**

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

# உதிர்தலில்லை இனி

"எப்பதான் இந்த ரோட்டுகளைத் திருத்தப் போறாங்களோ தெரியாது." குழிகளும் பள்ளங்களுமாக இருந்த அந்த ரோட்டிலை பஸ் ஒவ்வொருக்காவும் விழுந்து விழுந்து எழும்பேக்கை டிரைவர் பெரிய குரலிலை அலுத்துக்கொள்கிறார்.

இப்படிக் கஷ்டப்பட்டுப் போறன், பிறகு திரும்பி வரக்கே ஏன் போனன் எண்டு கவலைப்படுறதுதான் இப்பவெல்லாம் ஒரு வழமையாய் போச்சுது. போன முறை ஒரு மனுசி நான் ஆர் எண்டு தெரியாமல் ஆலத்தி எடுக்க வாங்கோ என்று கூப்பிட, ஏதோ நான் ஆலத்தி எடுக்கப் போயிடப்போறன் எண்டு பொம்பிளையின்ரை தாய் அவசரப்பட்டுப் பாய்ந்தோடிவந்து, "ஓ, மலர் நீர் வாரும்," எண்டு இன்னொரு ஆளைக் கூப்பிட்டு விட்டது ஞாபகத்துக்கு வர மனசு லேசாய் வலித்தது.

மங்கலமான ஒரு மனைவியாக, பிள்ளைகளைப் பெற்ற ஒரு மகராசியாக இல்லாத நான் வாழ்த்துவதற்காக ஆலத்தி எடுக்கிறதை ஆரும் விரும்பாயினம் எண்டு எனக்குத் தெரியும். எப்பவும் அந்த நேரங்களைத் தவிர்க்கிறதுக்காக நான் தூரத்திலை போய் நிக்கிறதுதான் வழமை. ஆனால் சில வேளையிலை இப்படி மாட்டுப்பட்டு முகத்திலை அடிச்சமாரி மற்றவை சொல்லுறதைக் கேட்கிறதும் இப்ப என்ரை தலைவிதியாய்ப் போச்சுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்தரிப்பிலிருந்து செல்வம் அக்கா வீட்டை நடந்து போக ஒன்பது மணி தாண்டிட்டுது. கேற்றைத் திறந்த என்னைத் தாண்டிக் குறுக்காலை போனது ஒரு பெரிய கறுப்புப் பூனை. அந்தப் பூனையின்ரை வயித்தைப் பாத்தால் குட்டி போடுற காலம் ரொம்பவும் அண்மித்துவிட்ட மாதிரியிருந்தது.

முன்முற்றம் முழுதுமான பெரிய பந்தலும், வாழைக்குலைகளும், பல நூற்றுக்கணக்கிலை கதிரைகளும், பந்தல் நிறைஞ்ச ஆட்களுமாய் அவவின்ரை வீடு பெரிசாய் அமளிப்படுது. அங்குமிங்கும் நிறையப்பேர் போய் வருகினம். முன்பக்கமாய்ப் போகக் கூச்சப்பட்டு, பந்தலைச் சுற்றிப் பின்பக்கமாய் குசினிப் பக்கம் போன என்ரை மனசு திக்கென்றது.

அவரா அது, நம்பமுடியவில்லை. ஒரு காலத்திலை என்ரை விரல்களாலை மிகவும் உரிமையோடை ஆசையாக நான் கோதிக்கோதி விளையாடிய அந்தச் சுருட்டை முடி போய், அவரின்ரை முன்பக்கத் தலை சற்று வழுக்கையாய் இருந்தது. காத்திருந்து காத்திருந்து பேசிய அந்தக் கண்களை வேகமாகத் தவிர்த்துக்கொண்டாலும் ஆள் கொஞ்சம் நிறத்து, நிறை வேறு போட்டிருந்தது எனக்குத் தெரிந்தது. பக்கத்திலிருந்த ஆளுடன் பேசிக்கொண்டிருந்த அவரின் கையிலிருந்த குழந்தை அவரின் முகவாயைத் தடவித் தடவி "டாட், டாட்," என அவரின் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப முயற்சித்துக் கொண்டிருந்தான்.

மனசிலை வெறுமையும் ஆக்ரோசமும் அதேநேரம் என்னவென்று அறியாத ஒரு படபடப்பும் சூழ்ந்து கொண்டன. எதற்காக, எப்போ இவர் இங்கை வந்தார்?

அவர் கனடாவுக்குப் போட்டார் என்ற செய்தி கேட்ட நாளிலிருந்துதான் வழியிலை எங்கையாவது அவரைச் சந்திச்சுடுவனோ என்ற குழப்பமின்றி, அசௌகரியமின்றி வீட்டை விட்டு என்னாலை வெளியிலை வரமுடிஞ்சுது. ஒரு கோவிலுக்கு, கலியாணத்துக்கு எண்டு தயக்கமின்றிப் போக முடிஞ்சுது. இப்ப, இப்படி, இங்கை திடீரென எதிர்பாராமல் அவரைக் கண்டதிலை என்ன செய்கிறதெண்டே எனக்குத் தெரியேல்லை. வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போய் விடுவமோ என நினைச்சபோது செல்வம் அக்கா என்னைக் கண்டிட்டா.

"விமலா, இப்பத்தான் வாறியோ? வா, வா. சுபா உன்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தவள்," என்று சுபாவின்ரை அறைக்கு கூட்டிக் கொண்டுபோறா, அக்கா.

"எனக்குக் கொஞ்சம் சுகமில்லை. உங்களுக்காண்டித்தான் வந்தனான். நேரத்தோடை வீட்டை போனால் நல்லம் எண்டு நினைக்கிறேன்,"என்கிறேன் நான்.

"நீ என்ன சொல்லுறாய் எண்டு எனக்கு விளங்குது. அவரைச் சத்தியமாய் நாங்க கூப்பிடேல்லை. அவையின்ரை வீட்டிலை இப்ப இருக்கிற பிள்ளை எங்களோடை நல்லமாரி. அவளுக்குத்தான் சாமத்தியத்துக்குச் சொன்னது. அவர் கனடாவிலிருந்து வந்ததும் எனக்குத் தெரியாது. இப்ப கொஞ்சம் முந்தித்தான் அவரைக் கண்டனான். அவருக்குச் சொல்லுற மாதிரிச் சொல்லி அவரை அனுப்பச் சொல்லி நான் இவரிட்டைச் சொல்லுறன். நீ யோசிக்காதை," என அவ என்னை ஆசுவாசப்படுத்துகிறா.

சுபாவைக் கட்டியணைத்து முத்தமிட்டு விட்டு குசினிக்குள்ளை போறன். வாறவைக்குத் தேத்தண்ணி போடுற பொறுப்பை எடுத்த என்ரை மனசிலை பழைய நினைவுகள் வந்து ரீங்காரமிடுகின்றன.

மனைவி திடீரென மாரடைப்பில் இறந்து போக, பிள்ளைகளை வளர்க்கக் கஷ்டப்பட்ட அவருக்காகப் பரிதாபப்பட்டு, விழுந்து கட்டிக்கொண்டு உதவி செய்கிறன், நான்.

அவரின்ரை பிள்ளைகளும் என்னுடன் நல்லா அணைந்து கொள்கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரராக மட்டுமன்றி, சொந்தமாகவும் இருந்ததால். அம்மாவும், "பாவம் அதுகள், என்ன செய்துகள் எண்டு போய்ப்பார்," எண்டு அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கிறா. அவரின்ரை மூத்த மகள் சாமத்தியப்பட்டதுடன் என்ரை பல மணித்தியாலங்கள் அவர் வீட்டிலேயே கழிகின்றன. அப்படியான ஒரு நாளில் அவருக்குக் கடுமையான காய்ச்சல் என மல்லித்தண்ணீர் செய்து கொண்டு போகிறன்.

"நீர் இப்படி எங்களுக்காக கஷ்டப்படுவதற்கு என்ன கைமாறு செய்யப்போறனோ தெரியாது," என அவர் கண்கலங்குகிறார்.

"மனிசருக்கு மனிசர் உதவுறதில்லையோ, எனக்கு இதிலை ஒரு கஷ்டமும் இல்லை. அதைவிட நான் செய்யிறது வேறை ஆராவது மூலம் எனக்குத் திரும்பி வரும்," எனச் சமாதானம் சொல்கிறன் நான்.

"இந்த இரண்டு பொம்பிளைப் பிள்ளையளையும் என்னட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிட்டு அதுவும் என்ரை கையிலை ரதி சீவனை விட்ட காட்சியை என்னாலை மறக்கேலாமலிருக்கு," என அவர் கலங்குகிறார். பிறகு என்ரை கையைப் பிடிச்சு, "என்ரை பிள்ளையளுக்கு ஒத்தாசை யாயிருப்பதற்கு மிகப் பெரிய நன்றி," என்கிறார்.

வெளியிலை தொங்கவிடப்பட்டிருந்த சின்னத் தண்ணித்தொட்டி ஒன்றில் அமைதியாகத் தண்ணி குடித்துக் கொண்டிருந்த குருவி ஒன்றை எங்கிருந்தோ வந்த பருந்தொன்று அலாக்காகத் தூக்கிக் கொண்டு போகிறது.

அப்படிக் கதைத்துக் கொண்டிருக்கும்போது, என்ன நடந்ததோ, எப்படி நடந்ததோ எனத் தெரியாமல், அவரும் நானும் ஒருவரின் அணைப்பில் ஒருவர் இருந்ததை உணர்ந்து என்னை நான் விலத்திக் கொள்கிறேன்.

ஆனால் எப்படியோ அது பிறகும் தொடரத் தொடங்குகிறது. இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்படுவதற்கு நானும் தயாராகிறேன். ஆனால், அதை அவராகச் சொல்லட்டும் எனக் காத்திருந்தபோது ஒரு நாள், "பிள்ளையளுக்காண்டி நான் தனியா வாழவேணும் அல்லது பிள்ளையளின்ரை நன்மைக்காகக் கலியாணம் கட்டுறதெண்டால் அவையின்ரை சித்தியைத்தான் கட்டவேணும்," என்கிறார்.

நான் எதுவும் போசாமலிருக்க அவரே அதை நியாயப் படுத்துகிறார். "பிள்ளையளாலை தங்கடை தாயின்ரை தானத்திலை ஆரையும் ஏற்றுக் கொள்ளேலாதுதானே... சித்தி எண்டால் கொஞ்சம் தாங்கிக் கொள்ளுவினம் எண்டு நான் நினைக்கிறன். பொம்பிளைப் பிள்ளையளுக்கு ஒரு தாய் வேணும் எண்டு ஊரும் அதை ஏற்றுக்கொள்ளும்.... அதோடை உம்மையும் யோசித்துப் பாத்தன். இது உமக்கும் நல்லது. உம்மடை வயசுக்கேத்த இன்னொரு ஆளைக் கலியாணம் கட்டி நீர் சந்தோஷமாக வாழவேணும். உமக்கென ஒரு குடும்பம் அமையவேணும், விமலா. வீணா நனைச்சுச் சுமக்க ஆசைப்படாதையும்.... எனக்கும் வயசாகுது. வளர்ந்த பிள்ளைகள் வேறை... நான் சொல்றதை நீர் விளங்கிக்கொள்வீர் எண்டு நான் எதிர்பாக்கிறேன்...," என்னவெல்லாமோ சொல்லுறார்.

எதிர்கட்சியிலிருந்து விலகி அரசுடன் இணைந்து கொள்ளும் கம்பளை எம். பி. திரு. சுனில் விமலசேகராவுக்கு நிதி அமைச்சர் பதவி வழங்கப்படவிருக்கின்றது எனத் தகவலறிந்த அரச வட்டாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கின்றன என ரீவியிலை நியூஸ் வாசிப்பவர் தன்பாட்டுக்கு வாசிக்கிறார்.

"இதை நான் ஒரு கடமையாகத்தான் செய்யிறன் எண்டதுகூட உமக்கு விளங்குமோ தெரியாது, உம்மை ஆரும் கட்டுவான்கள். ஆனால் குஞ்சு, பாவம், உமக்குத் தெரியும் தானே, உருவமும் நிறமும் அவளுக்கு எதிரா இருக்குது. இந்த வழியிலை அவளுக்கும் ஒரு உதவி செய்ததாகவும் இருக்கும்..."

"உங்களாலை என்னெண்டு இப்படிக் கதைக்கேலுது? இது என்ன நன்மை தீமைகளை கூட்டிக் கணக்குப் பாக்கிற விஷயமா? இப்படி ஒரு நிலைமை வருமெண்டு நான் கனவிலையும் நினைக்கேல்லை," வாய்விட்டு அழுகிறேன்.

என்ரை நெஞ்சை ஆரோ பாறங்கல்லாலை அமுக்குவது மாதிரி பெரிதாக வலிக்கிறது. "உங்கடை உறவை என்னாலை விடேலாது, எனக்கு நீங்கள் வேணும், உங்கடை அன்பு வேணும்," சுயமதிப்பு எண்டு ஒன்றே இல்லாமல் கெஞ்சிக்கெஞ்சி அழுகிறேன்.

அவர் வரும்போது சாத்த மறந்த எங்கடை வீட்டுப் படலை காத்தின்ரை வேகத்திலை அடிபட்டுச் சாத்தப்படும் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் இன்றி என்ரை அழுகையொலி காத்துடன் கலக்கிறது,

என்னுடைய 'நன்மைக்காகவும்' என என்னுடன் கலந்தாலோசிக்காமல் தானாக அவர் எடுத்த முடிவு என்னைச் சுக்கு நூறாக உடைத்து விடுகிறது. இரண்டு வருஷமா எனக்குள்ளை வளர்த்த காதலையும் கரிசனையையும் என்னாலை தூக்கி எறியமுடியேல்லை. நித்திரையற்ற இரவுகளும் வற்றாத கண்ணீருமாக வாழ்க்கை அலுத்துப் போகிறது.

இரண்டாம் கலியாணம் முடிஞ்சு, அவர் இன்னொரு ஆளுக்கு மீண்டும் புருஷனாக வாழ ஆரம்பிச்சாப் பிறகும் நான் எனக்குள் அவருடனேயே வாழ்ந்து என் வாழ்வையே சூனியமாக்கிக் கொள்கிறேன். சம்மந்தங்கள் பேசிவந்த போது என்னால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியேல்லை. காலப்போக்கில் மறந்திடுவன், மனசுக்கு ஒரு திருப்பம் வேணும் எண்டெல்லாம் அம்மா பலதைச் சொன்னா. ஆனால் மனசுக்கை அவரை வைச்சுக்கொண்டு பொய் வாழ்க்கை வாழ என்னாலை முடியேல்லை.

இப்ப அம்மாவும் இல்லாமல் போனாப் பிறகு என்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை ஒருத்தியாக ஓட்டுறதிலை, தன்னந்தனிமையிலை மனசு நொந்துபோய் ரொம்ப அல்லாடுகிறது.

செல்வம் அக்கா வந்து, “அவர் போட்டார். விமலா, நீ வா. சுபாவுக்கு முழுக வாக்கப்போறம்”, என்று சொல்லிப் போட்டுப்போறா. அவர் போனால் என்ன போகாட்டால்தான் என்ன, என்ரை வாழ்க்கையிலை அவரின்ரை உறவு விதைச்ச விசனங்களை நான் ஏன் இன்னும் காவித்திரிகிறன் என மனம் முதல் முதலாக என்னையே கேள்வி கேட்டது. அவரை நம்பினது என்ரை பாவம், என்ரை ஊழ்வினை என்று எனக்கு நானே பச்சாதாபப்படுவதும், பிறகு அதற்குக் காரணகாரியம் தேடித் தேடி இறந்த காலத்திலேயே வாழ்ந்து எனக்குள்ளேயே மீளமீள மடிந்து போவதும்.... இப்ப எனக்கு என்னிலை எரிச்சலும் கோவமும் வந்தன.

ஒரு பச்சோந்தியின்.... வெறும் சந்தர்ப்பவாதியின் அன்பை என்னாலை மறக்கேலாமல் இருக்குது எண்டு என்ரை வாழ்க்கையை நான் அடகு வைச்சிருக்கிறன். என்ரை அன்பின்ரை பெறுமதியை உணராத, என்னைப் பாவிச்ச அந்தச் சுயநலவாதிக்கா உருகிறது எவ்வளவு முட்டாள்தனம் எண்டு தெரியாமல் என்னை நானே வதைச்சிருக்கிறன், நினைக்க நினைக்க வெறுப்பாக இருந்தது.

அவர் ஆம்பிளை, போற வழி நல்லதாய் தெரியேல்லை எண்டு தனக்குச் சாதகமான வழியைத் தேடியிருக்கிறார். சந்தோஷமாக வாழுறார். நான் பொம்பிளை, இனி எனக்கு என்ன வாழ்க்கையெண்டு என்னை நானே அழிச்சுக்கொள்றன், என்னை அறியாமலேயே எனக்குள்ளை ஊறிப்போயிருக்கும் எங்கடை கலாசாரமும் பெண்ணடிமைத்தனமும்தான் இதற்கெல்லாம் காரணமா?

நான் வாழ்ந்து காட்டவேணும், என்னை நான் மாற்றியாக வேண்டும் எனத் திடீரென என்ரை மனசுக்குள்ளை ஒரு வேகம் வர கொஞ்சம் உற்சாகம் பிறந்தது. கண்ணைத் துடைத்துக் கொண்டு குசினி அலுமாரியில் இருந்த கண்ணாடியில் முகத்தைச் சரிசெய்து கொள்கிறேன், நான்.

“விமலா, நீ தான் முதலிலை பிள்ளைக்குப் பால் வைக்க வேணும் வா”, எண்டு செல்வம் அக்கா சத்தமாகக் கூப்பிடுறா.

**தினக்குரல்** 2010 பெப்ரவரி
**தூறல்** 2014 ஒக்ரோ – டிசம்

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# உள்ளங்கால் புல் அழுகை

"மை நேம் ஸ் றோசி, வட்ஸ் யுவர் நேம்?" எனக் கேட்டு விட்டு அவ என்னைப் பாக்கிறா.

எனக்கு அவவைப் பாத்தவுடனை, எங்கடை ரீச்சர் மிசிஸ் ஜோன் ஸ்கூலுக்கு ஒரு நாள் வராமல் நிண்டபோது, வந்த அந்தச் சப்பிளை ரீச்சர்தான் ஞாபகத்துக்கு வந்தா. அந்த ரீச்சரின்ரை குரல் மாதிரி அவவின்ரை குரலும் வலு கடுகடுப்பாக இருந்தது. அந்தச் சப்பிளை ரீச்சரை எனக்குப் பிடிக்கவேயில்லை. அம்மாவுக்கு அதைப் பற்றிச் சொல்லி அழுதபோது, "சரி, நாளைக்கு உங்கடை ரீச்சர் வந்திடுவா,"எண்டு சமாதானம் சொன்னா. ஆனால், அந்தச் சப்பிளை ரீச்சர் பிறகும் கனநாள் வந்ததாலை நான் ஸ்கூலுக்குப் போகமாட்டன் எண்டு அம்மாவோடை அடம் பிடிச்சிருக்கிறன்.

நான் ஒண்டும் பேசாமல் நிற்கிறதைப் பார்த்ததும் அவவே தொடர்ந்து சொல்லுறா, "ஓ, யூ ஆர் நொட் றெடி ரு ரோக் ரு மீ யெற், தற்ஸ் ஓகே."

"திஸ் ஸ் அபர்ணா, அபர்ணா திஸ் ஸ் றோசி," என மாறிமாறி எங்களுக்குச் சொல்லிப்போட்டு என்னைப் பார்த்து, "றோசி வில் ரேக் கேயர் ஒவ் யூ, அன்ரில் திங்ஸ் கெற் செற்ல்டு," என்கிறா, என்னை றோசியிடம் கூட்டிக் கொண்டுவந்த டயானா. அவை சொல்லுற எதுவும் எனக்கு விளங்கேல்லை.

பிறகு டயானா என்னை அந்த வீட்டுக்குள்ளை கூட்டிக் கொண்டு போறா. அங்கை ரண்டு பெரிய பிள்ளைகள் வட்டமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசை ஒண்டிலை இருந்து ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருக்கினம்.

"அபர்ணா, வுட் யூ லைக் ரு ஈற் சம் திங் ரூ?" எண்டு கேட்ட றோசிக்கு, "யேஸ், ஷி டின்ற் ஹாவ் ஹேர் டினர் யெற்," என்று சொல்லிவிட்டு டயானா என்னைப் பார்த்து "ஜொயின் வித் தெம்,"என்கிறா.

நான் ரோபட் போல அசைந்து அசைந்து போய் சாப்பாட்டு மேசையிலை இருந்தாலும் எனக்குப் பசி கொஞ்சமும் வரேல்லை. ஒரே அழுகை, அழுகையாகத்தான் வருகுது. மக்கரோனி அண்ட் சீஸ் எனக்குப் பிடிக்கிறதுமில்லை. அம்மா இடியப்பத்தை சொதியோடை குழைச்சுப் போட்டுத் தீத்த, அதைச் சாப்பிட்டுத்தான் எனக்குப் பழக்கம்.

அந்தச் சாப்பாட்டு மேசையில் இருந்து நான் அழுறதைப் பார்த்த அந்த ரண்டு பிள்ளையளும் தாங்கள் கதைச்சதை நிப்பாட்டிப் போட்டு என்னைப் பரிதாபமாகப் பாக்கினம். கொஞ்ச நேரம் கழிச்சு, 'ஓகே, கம் அண்ட் சிற் வித் மீ' எண்டு றோசி என்னைக் கூப்பிடுறா.

பிறகு டயானாவும் றோசியும் தங்களுக்குள்ளை கதைச்சபடி ஏதோவெல்லாம் எழுதிக் கொண்டினம். பிறகு டயானா போயிட்டா. "அபர்ணா, இற் ஸ் ஓல்மோஸ்ற் ரைம் ரு கோ ரு பெட்" எனச் சொல்லி என்னைக் கூட்டி கொண்டு வந்து ஒரு அறையிலை விட்டிட்டுப் போட்டா றோசி.

அம்மான்ரை சூட்டிலை அம்மாவோடை படுக்கிறதிலை சுகம்கண்ட எனக்கு அந்தத் தனி அறையைப் பாக்க ஏதோ பயங்கரப் பூதத்தைப் பாக்கிறமாரி இருக்குது. அம்மாவுக்கெண்டு ஒரு தனிவாசம் இருக்குது. "அம்மா, யூ ஸ்மெல் சோ குட்," எண்டு அடிக்கடி சொல்லி அம்மாவை இறுகக் கட்டிக்கொள்ளுவன் நான். இப்ப அம்மாவின்ரை சூடுமில்லை, மணமுமில்லை. எல்லாமே வெறுமையாக் கிடக்குது. நான் இங்கை, எங்கடை பேபி ஆற்ரை வீட்டிலையோ தெரியாது. பேபியையும் என்னையும் சேத்துக் கவனிக்க றோசியாலை முடியாது எண்டுதான் என்னை மட்டும் இங்கை கூட்டி வந்ததெண்டு டயானா சொன்னா.

இனி பேபியோடை விளையாடவும் ஏலாது; "அபர்ணாக் குட்டி, பேபிக்கு பவுடர் எடுத்துக் கொண்டு வா. பேபி அழுகுது, பேபியோடை போய் விளையாடு", எண்டெல்லாம் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறதைக் கேக்கவும் ஏலாது. எத்தினை நாளைக்கு இப்பிடியிருக்கப் போறன்? எப்ப அம்மா கதைக்கிறதைக் கேக்கப் போறன்?

பில்லோவைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு விம்மி விம்மி அழுகிறன் நான்.

அப்பாவுக்கு கோவம் வந்தால் அவர் எப்பவும்தான் அம்மாவை அடிக்கிறவர். ஆனா, கடைசியா அப்பா அம்மாவோடை சண்டை பிடிச்சபோது பொலிஸ் வந்திட்டுது. அப்பான்ரை சத்தத்தைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரர் பொலிசைக் கூப்பிட்டினமாம் எண்டு அம்மா ஷெல்ரருக்குப் போகேக்கை சொல்லி அழுதா.

கவலை வாறநேரமெல்லாம் என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டுதான் அம்மா அழுவா. இப்ப தனிய இருந்து அழுவாவோ?

இனி நான் எப்ப பேபியோடை விளையாடலாம்? அம்மாவை எப்ப பாக்கலாம்? பேபி பாவம். என்ன செய்யிறாவோ தெரியாது!

பொலிஸ் வந்து எங்களைக் கொண்டுபோய் ஷெல்ரரிலை விடேக்கை, எங்கடை வீட்டிலை இருக்காட்டிலும் பரவாயில்லை, என்ரை ரொய்ஸ் இல்லாட்டிலும் பரவாயில்லை, அம்மாவோடை இருந்தால் காணும் எண்டுதான் நான் நினைச்சன். பிறகு அம்மாவுக்கு வருத்தமாம். ஏதோ டிப்பிரஷனாம், அதாலை எங்களைப் பாக்க அவவாலை ஏலாது எண்டு எங்களை அவவிட்டையிருந்து பிரிச்சுப் போட்டினம். எங்களுக்கு எங்கடை அம்மா வேணும் எண்டு நாங்கள் எவ்வளவு அழுதும் அவைக்கு விளங்கேல்லை. தன்னாலை எங்களைப் பாக்க ஏலும் எண்டு சொல்லிச் சொல்லி அம்மாவும் அழுதா. ஆனால் ஆரும் அதைக் கேட்கேல்லை. எனக்கு இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை, ஆரிட்டை நான் போய்க் கதைக்கலாம்?

அவை சொல்லுகினம், அம்மாவுக்கு சுகம் வந்தாப் போலைதான் எங்களை அவவிட்டை விடுகிறதைப் பற்றி யோசிக்கலாமாம். அம்மா தனக்கு என்ன வருத்தம் எண்டாலும் ஒருநாள் கூட எங்களைக் கவனிக்காமல் விட்டதில்லை. உடுப்புத் தோய்க்கிறது, சாப்பாடு சமைக்கிறது, சாப்பாடு தாறது, ஸ்கூலுக்குக் கூட்டிக் கொண்டுபோறது எண்டு எங்களுக்கு எல்லாம் அம்மாதானே இவ்வளவு நாளும் செய்தவ. இப்ப அப்பாவை பொலிஸ் பிடிச்சாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலை என்னெண்டு அவவுக்கு அப்படி ஒரு பெரிய வருத்தம் திடீரெண்டு வந்ததெண்டு எனக்குத் தெரியேல்லை. இருந்தாலும், தான் எல்லாம் செய்வன் எண்டு தானே அம்மா சொன்னவ் அம்மா செய்யமாட்டா எண்டு இவைக்கு என்னெண்டு தெரியும்?

எனக்கு அம்மாட்டை போகோணும் போலையிருக்கு இவை எப்ப என்னைக் கூட்டிக் கொண்டு போவினம்? இனி வேறை ஸ்கூலுக்குத்தான் போகவும் வேணுமாம். மிசிஸ் ஜோனையும் இனிக் காணேலாது. புதுரீச்சர் சப்பிளை ரீச்சர் மாதிரி இருப்பாவோ அல்லது மிசிஸ் ஜோன் மாதிரி நல்ல ரீச்சரா இருப்பாவோ, ஆருக்குத் தெரியும்? என்ன இருந்தால்தான் என்ன, என்ரை அம்மாவே இல்லையாம், இனி நல்ல ரீச்சர் வந்தென்ன, விட்டென்ன?

றோசியும் என்னிலை பிழை பிடித்துக் கத்துவாவோ, என்னவோ. நான் ஏதேனும் பிழையாய்ச் செய்தால் அவவுக்குக் கோவம் வரும். பிறகு என்ன செய்வாவோ? இதெல்லாம் அப்பாவாலைதான் வந்தது. எல்லாம் அவற்ரை பிழைதானே!

அம்மாவுக்குப் பைத்தியம் எண்டு பேசிப்பேசி அவவோடை சண்டை பிடிக்கிறதுதான் அவருக்கு வேலை. அண்டைக்கும் அம்மா பேபியோடை சாய்ஞ்சாடம்மா பாடிக்கொண்டு இருக்கேக்கை 'வீடு குப்பையாக் கிடக்குது' எண்டு கத்தினார். தன்னாலை எல்லாம் தனியச் செய்யேலாது எண்டு அம்மா சொன்னது அவருக்குப் பிடிக்கேல்லை.

அவவின்ரை தலைமயிரைப் பிடிச்சு இழுத்து, அவவின்ரை தலையை சுவரிலை மோதி அடிச்சார். அதைப் பாத்து நானும் பேபியும் பெரிசாக் கத்தினதாலைதான் பக்கத்து வீட்டுக்குக் கேட்டிருக்குதாக்கும்.

அவை அப்பிடிப் பொலிசைக் கூப்பிட்டுக் குழப்பாட்டி, அப்பான்ரை கோபம் போனாப் போலை, எப்பவும்மாரி திரும்ப அம்மா அப்பாவோடை கதைச்சிருப்பா. அப்பா கோவமாய் இல்லாத நேரங்களிலை அம்மா அவரோடை சிரிச்சுக் கதைப்பா. அதைப் பாக்க எனக்கு சரியான சந்தோஷமாயிருக்கும். சண்டை பிடிக்காமல் எந்த நேரமும் அப்பாவும் அம்மாவும் அப்படிச் சந்தோசமாக இருக்கவேணும் எண்டு நான் எத்தினை தரம் ஆசைப்பட்டிருக்கிறன்.

இப்ப நான் என்ன செய்யலாம்? எப்பிடி அம்மாவிட்டைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பப் போகலாம்? நான் சரியான குழப்படி செய்தன் எண்டால், றோசி என்ன செய்வா? தன்னாலை என்னைப் பாக்கேலாது எண்டு அம்மாவிட்டைக் கொண்டு போய் விட்டாலும் விடுவாதானே?

அப்பிடித்தான் ஒருக்காச் செய்து பாக்கவேணும்.

நாளைக்கு ஏதாவது சாமனை உடைக்கவேணும். பிலத்துக் கத்தவேணும். இருக்கிற மற்றப் பிள்ளையளோடை சண்டை பிடிக்கவேணும். எப்பிடியாவது அவை என்னை அம்மாவிட்டைக் கொண்டு போறதுக்கு ஒரு வழி பாக்கவேணும்.

ஈரமாப் போன பில்லோவைக் இறுக்கிக் கட்டிப்பிடிச்சபடி கண்ணை மூடுறன்.

**ஜீவநதி** ஆண்டுமலர் - 2010

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08**

# மனசே மனசே...

"எத்தினை தரம் உங்களுக்கு நான் ஃபோன் பண்ணிறது? லேற்றாகும் எண்டால் சொல்லுறேல்லையே...? மற்றவையைப் பற்றின யோசினை இருந்தால் தானே?" கொதிஎண்ணெயில் கடுகு வெடித்தது போல் பொருமி வெடித்தவள், அதே வேகத்தில் என் கையில் இருந்த கார்த்திறப்பைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டாள்.

என்ன நடந்ததெண்டு என்டை கஷ்டத்தைக் கேட்டியாடி...? கன்னத்தைப் பொத்தி அறைய வந்த ஆவேசத்துக்கு வடிகால் இல்லாமல் போக, 'வரட்டும்.... என என் மனம் முறுகிக்கொள்கிறது.'

லேற்றாகுது எண்டு சொல்லியிருந்தால் கிழிச்சிருப்பாள். அவளின்ரை அரிச்சனை வேண்டாம் எண்டுதானே போனை எடுக்காமல் இருந்தனான். உழைக்கிறன் எண்ட திமிர், அவளுக்கு... மனம் வெறுப்புடன் திட்டிக்கொண்டது.

வயிறு வேறு பசியிலை குடைந்தது. ஏதாவது சாப்பாடு சமைத்திருப்பாள் மாதிரித் தெரியவில்லை. சாப்பிடுறதுக்குத் தக்கதா ஃபிறிட்ஜிலும் எதுவும் இல்லை.

வெளியில் இடி இடிக்கும் சத்தம் மேலும் பலமாகக் கேட்டது. காற்றும் மழையும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டிருப்பது யன்னல் கண்ணாடிக்கூடாகத் தெரிந்தது.

பீசாவுக்கு ஓடர் பண்ணிப் போட்டு, விஸ்கியுடன் சோபாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய, தொலைபேசி கீச்சீட்டது.

"நான் கேசவன் கதைக்கிறன். குமரனுடன் கதைக்கலாமோ?"

"நான் குமரன்தான் கதைக்கிறன்"

"ஓ, என்ரை வை∴ப், உங்கடை காரின்ரை பின்னாலை இடிச்சுப் போட்டாவாம்... அதைப் பற்றிக் கதைக்கிறதுக்காகத்தான் எடுத்தனான்."

"அண்ணை, இந்தப் பொம்பிளையளுக்குக் கார் ஓடவும் தெரியாது, ஒரு மண்ணாங்கட்டியும்..,"

"சரி, உங்கடை காரை நாங்கள் திருத்தித்தாறம். அல்லது திருத்துறதுக்கு காசு தாறம். எங்கை வந்தால் நான் உங்கடை காரைப் பாக்கலாம்?"

"காலமை 7 மணிக்கு ∴பின்ஞ் அண்ட் கீல் சந்திப்பிலை இருக்கிற காஸ் ஸ்ரேஷனுக்கு வரேலுமோ? எப்பிடியும் அதைத் திருத்துறதுக்கு ஒரு 400 ரூபா ஆவது செலவாகும்..."

"சரி, சந்திக்கேக்கை அதைப் பற்றிக் கதைப்பமே, அப்ப வைக்கிறன்."

∴போனை வைத்ததும், அந்த விபத்து என் கண்ணுக்குள் வந்தது.

"என்ன... பாத்து ஓடுறேல்லையே? என்ரை புதுக்கார், இது! ஒரு சின்ன அடையாளம் கூட இருக்கேல்லை... எங்கை, உங்கடை லைசன்ஸ், இன்சூரன்ஸ், போன் நம்பர் எல்லாத்தையும் தாங்கோ பாப்பம்." தமிழ் பெண் என்று தெரிந்ததும் இறங்கின வேகத்தில் தமிழில் முழங்கிறன், நான்.

எங்களின் பின்னால் வந்த வாகனங்கள் எல்லாம் அடுத்த லேனுக்குள் மாறுவதற்காக முண்டியடித்துக் கொண்டிருக்கின்றன.

அவற்றை எடுத்து என்னிடம் நீட்டியபடி, "ஸொறி," என்றவள், தனது செல்∴போனில் "சரி, ஓகே," என்று சொல்லிப்போட்டு, "என்ரை ஹஸ்பண்ட் உங்களோடை கதைக்கிறாராம், ஓகேயா..." என்கிறாள்.

"இப்ப, நான் நினைச்சன் எண்டால் பொலிசைக் கூப்பிடலாம்..., தெரியும் தானே! நம்பி, உங்களை விடுறன். என்னைப் பேய்க்காட்டலாம் எண்டு மட்டும் நினைக்காதையுங்கோ! பிறகு வந்து உங்கடை வீட்டிலைதான் நிற்பன், சரியோ?" எண்டு நான் சொன்னதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாகத்தான் இந்தக் கோல் வந்திருக்கிறது.

வீட்டிலைபோய் சாயம் கொட்டி அழுதிருப்பாளாக்கும், அல்லது அவன் அவளை எப்படி இறுக்கினானோ ஆருக்குத் தெரியும்?, மனசுக்குள் நினைத்துக் கொள்கிறேன்.

பீசா வருவதற்கான நேரம் போகப்போக, மனிசியிலை எரிச்சல் எரிச்சலாய் வந்தது. சனியன்... புருஷன் பசியிலை வருவானே, சாப்பாட்டுக்கு என்ன செய்வான் எண்டு நினைச்சுதே... காரைக் குடுத்திருக்கக் கூடாது. எக்கேடாவது கெட்டுப்போகட்டும் எண்டு விட்டிருக்கவேணும். பசியோடை அவசரமாய் வந்து நான் காரைக் குடுக்கிறன், அந்த நன்றியில்லாத நாய், என்னோடை கத்திப்போட்டுப் போகுது... எல்லாம் நான் குடுத்த இடம். வைக்கிற மாதிரி வைச்சிருக்க வேணும்.

வீடு முழுக்க என் கோபத்தால் நிறைந்துபோகிறது.

காலமை வேலையால் வந்து அவள் கதவு திறக்கும் சத்தம், என்னை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தபோதுதான் பீசாவையும் சாப்பிடாமல் போதையின் உச்சத்தில் சோபாவிலையே சயனித்திருக்கிறேன் என்பது புரிகிறது. அத்துடன் கேசவனின் 7 மணிச் சந்திப்பும் நினைவுக்கு வருகிறது.

எழும்பி அவசரம் அவசரமாக உடுப்பு மாத்திக் கொண்டு ஓடினபோது மனதில் ஒரே எரிச்சலாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. போதாதற்கு வயிறு வேறு புகைந்து கொண்டிருந்தது.

ஃபின்ஞ் அண்ட் கீல் காஸ் ஸ்ரேஷனை நோக்கிக் காரைத் திருப்பிய போது, என் காரை இடித்த அந்தச் சிவப்பு நிறக் ஹொண்டா எனக்காகக் காவல் நிற்பது தெரிந்தது. எனது சில்வர் கலர் பிளம்டபிள்யூ ஐக் கொண்டு போய் அந்தக் ஹொண்டாவுக்குப் பக்கத்தில் நிறுத்துகிறேன். அந்தக் காருக்குள் அவளுடன் இருந்து கதைத்துக் கொண்டிருந்த அவன், என்னைப் பார்த்து விட்டு காரை விட்டிறங்கி வெளியே வருகிறான்.

ஓ மை கோட், வாய் என்னை அறியாமல் முணுமுணுக்கிறது. ஆயிரம் பட்டாம்பூச்சிகள் எனக்குள் பறக்கின்றன, பல மின்மினிப் பூச்சிகள் வட்டமடிக்கின்றன. என்னால் நம்பவே முடியவில்லை.

"நீங்க, நீங்க.. எழுத்தாளர் ஆதித்தன் தானே?" ஆச்சரியத்துடன் கேட்ட நான் தொடர்கிறேன். "எப்படியிருக்கிறியள்? வாங்கோவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோப்பி குடித்துக்கொண்டு கதைப்பம்."

பதிலுக்கு சிரிக்கின்றான் அவன். பிறகு என் காரின் பின்பக்கத்தை என் அனுமதியுடன் போட்டோ எடுத்துக் கொள்கிறான். அவள்தான் கோப்பி குடிப்பதில்லை எனக் காருக்குள்ளே இருந்து கொள்கிறாள்.

அந்த ரிம் ஹோட்டன் வழமைக்கு மாறா மிக அமைதியாகவும் வெகு துப்பரவாகவும் இருக்கின்றது. இரண்டு டபிள் டபிளை வாங்கிக் கொண்டு இருந்த கையோடை நான் ஆரம்பிக்கிறன்.

"உங்கடை எழுத்திலை, பேச்சிலை எனக்கு ஒரு பைத்தியம். என்னமாரி எழுதிறியள்! எவ்வளவு தெளிவாய்ப் பேசுறியள்! அப்படியே ஆட்களின்ரை மனசுக்கை போய்ப் பாத்தமாரி! மனிச மனங்களையும் அதிலை ஏற்படுற தாக்கங்களையும் நீங்கள் விளங்கிக் கொண்டதைப்போல எல்லாராலும் விளங்கிக் கொள்ளமுடிந்தால் எங்கடை பாதிப் பிரச்சனை குறைஞ்சிடும்.... ம்.... உங்கடை மனிசிக்கு, அவ எவ்வளவு அதிஷ்டசாலி எண்டு தெரியுமோ!"

"தாங்ஸ், நீங்கள் என்னை அதிகமாய்ப் புகழுறியள். நான் அப்படி ஒண்டும் பெரிய ஆள் இல்லை... சரி, விஷயத்துக்கு வருவம். உங்கடை காரின்ரை பின்பக்கத்தைப் பாத்தனான். நீங்கள் சொன்ன 400 டொலர் அதிகம் எண்டு நான் நினைக்கிறன்."

"அதை விடுங்கோ, அதைப் பற்றி பிறகு யோசிப்பம். உங்களை இப்படித் தனியச் சந்திக்கக் கிடைக்குமெண்டு நான் கனவிலும் நினைக்கேல்லை..."

"எகேன், யூ ஆர் கிவ்விங் மீ ரூ மச் கிறடிற்ஸ்."

"நீங்கள் தன்னடக்கமாகக் கதைக்கிறியள். சரி, ஸ்காபரோவிலைதானே இருக்கிறியள். வீட்டை வந்து ஆறுதலாய்ச் சந்திக்கலாமோ?"

"இல்லை, நான் இருக்கிறது மாக்கத்திலை..."

"என்ன...? அப்ப அவவின்ரை லைசன்ஸிலை ஸ்காபரோ எண்டு.."

"இப்ப அவ என்னோடை இல்லை, வீ ஆர் டிவோர்ஸ்ட்."

"வட்... ரியலி?" ஒருவகைக் கவலையுடனும் ஏமாற்றத்துடனும் சொல்கிறேன் நான்.

"வெல், எங்களுக்குள்ளை ஒத்துப்போகேல்லை" அதாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் புருஷன் பெண்சாதியாக வாழ முடியாமல் போச்சுது. இப்ப நாங்கள் வெறும் நண்பர்களாக இருக்கிறம். அதாலை போராட்டமில்லை. பிரச்சனைகளுமில்லை. ஆளுக்கு ஆள் உதவியாக இருக்கப் பாக்கிறம்."

"ஓ மை கோட்! உங்களை விட்டிட்டுப் போன ஒரு பொம்பிளைக்கு உதவுற உங்கடை நல்ல மனசைப் பாத்து என்ன சொல்றது எண்டே எனக்குத் தெரியேல்லை! இப்படியான பொம்பிளையளைக் கோவிக்காமல், அவதூறு சொல்லாமல் இருக்கிறவையளைக் காணுறதே அருமை. அப்படியிருகேக்கை, நீங்கள் - உங்களிலை எனக்கு இருந்த மரியாதை இப்ப இன்னும் அதிகமாயிட்டுது. யூ ஆர் றியலி கிறேற்!"

"வில்லங்கமாக இழுத்து வைச்சுக் கொண்டு ஆளை ஆள் வருத்துறது பெரிய பாவம் இல்லையோ? பிள்ளைகளுக்காக, சமுதாயத்துக்காக எண்டெல்லாம் காரணம் தேடிக் கொண்டு பொய்க்கு வாழாமல், உண்மையாய் வாழவேணுமெண்டு நாங்கள் நினைச்சம்....அவ்வளவுதான்!"

ஆதித்தனின் குரலில் இருந்த உறுதியையும் வார்த்தைகளில் இருந்த தெளிவையும் பார்த்து அதிசயிக்கிறேன் நான்.

"ஒருத்தருடைய தனித்துவத்தை இழந்து வாழுறதுக்கு அன்பு, காதல், தியாகம் எண்டெல்லாம் பெயரிடுறது சுத்த அபத்தம். பரஸ்பரம் இருவரும் மனமொத்து இருக்காட்டில் காதல் வாழாது, காதல் இல்லாட்டி வாழ்க்கை சுவைக்காது... சரி, அதை விட்டிட்டு விஷயத்துக்கு வருவம். உங்கடை காரை இடிச்சது அவ, அதைத் திருத்தித்தர வேண்டியது எங்கடை பொறுப்பு, எங்காவது கொண்டு போய் மதிப்பீடு செய்துபோட்டுச் சொல்லுங்கோ. மீண்டும் பேசிக் கொள்ளுவம்." எழுந்துநின்று எனக்குக் கைகொடுக்கிறான் கேசவன்.

அவனை அண்ணாந்து பார்க்கிறேன். மிகவும் உயரமாக இருந்தான்.

பின்னர் இரண்டு பேரும் எங்கள் எங்கள் கார்களுக்குள் ஏறிக் கொள்கிறோம். வேலையிடத்தை நோக்கி என் காரைத் திருப்புகிறேன், ஆனால், என் கை வீட்டுக்குப் ஃபோன் பண்ணுகிறது.

"என்ன செய்யிறாய்? படுத்திட்டியா?"

"இப்பத்தான் படுத்தனான், சொல்லுங்கோ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நேற்று நான் வீட்டுக்கு வர நேரம் போகும் எண்டதைப் ஃப்போன் பண்ணிச் சொல்லியிருந்திருக்கலாம்...”

“சரி, அதை விடுங்கோ, ஸொறி படபடப்பிலை நானும் உங்களோடை கத்தியிட்டன். பீசா வாங்கியிருக்கிறியள். ஆனா சாப்பிடேல்லை. பாக்கச் சரியான கவலையாகயிருந்துது. நேற்று எனக்கு பீரியட்டோடை சரியான வயித்துக்குத்து. ஒண்டும் செய்யேலேல்லை. சாப்பிட ஏதாவது வாங்கிக்கொண்டு வாங்கோ எண்டு சொல்லத்தான் கோல் பண்ணினான்... இரவைக்கு வடிவாச் சமைச்சு வைக்கிறன். என்ன?”

“சரி, ஒரு நேரம் சாப்பிடாட்டில் என்ன, செத்தா போகப்போறன்? நீ படு. இரண்டு மணி மட்டிலை நான் சாப்பாடு வாங்கிக் கொண்டு வாறன். சேர்ந்து சாப்பிடுவம்.”

“ஓ!... ஒரு நாளைக்கு நல்லாய் இருப்பியள்... பிறகு, இன்னொரு நாளைக்கு நாய் மாதிரி நிற்பியள்.... என்ன செய்யிறது... சண்டைபிடிக்கிறியள் எண்டு விட்டிடேலுமோ....”

“ஏய், என்ன... என்னடி சொன்னாய்?... சரிதான்... விட்டிட்டுப் போடி..!” செல்லமாய்க் கடிந்து கொள்கிறேன்.... அவள் அதை ரசித்துச் சிரிப்பது காதில் கேட்கிறது.

ஃபோனை வைக்கிறேன். மனம் மிகவும் சாந்தமாகவிருக்கிறது.

**ஜீவநதி கனடாச் சிறப்பிதழ்**
2012 செப்ரெம்பர்

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

# நெறிமுறைப் பிறழ்வா?

உறைமழை தூமித்துக் கொண்டிருந்தது. காரைவிட்டு இறங்கிய எனக்கு வழுக்கி விழுந்துவிடுவேனோ எனப் பயமாக இருந்தது. மெதுமெதுவாகப் பாதங்களைத் தூக்கிவைத்து மிகவும் கவனத்துடன் நடந்துபோன நான், அந்த ஆஸ்பத்திரியின் வாசலிலிருந்த அந்தச் சுழலும் கதவுக்குள் வேகமாக நுழைந்து கொள்கிறேன்.

கை விரல்கள் கிளவுசுக்குள் இருந்தும்கூட சுள் சுள் என வலித்தன. கழுத்தையும் தலையும் சுற்றியிருந்த ஸ்காவ் முற்றாக நனைந்து அதுவும் விறைத்துப் போயிருந்தது. பாதங்கள் சப்பாத்துக்குள் ஜில்லிட்டிருந்தன. நோர்த் யோர்க் ஹொஸ்பிற்றலின் ஜெனரிக்ஸ் பிரிவில்தான் அன்று எனக்கு வேலை. அங்கு வேலைக்குச் செல்லும் நாட்களில் மனதில் இனம்புரியாத ஒரு உணர்வு வந்து கவிந்துகொள்கிறது.

மூன்றாம் மாடியில் உள்ளே போய் இருந்த நான் ஸ்கார்ஃ. வையும் கிளவுசையும் கழற்றிக் கையிலெடுத்தபோது, நேற்றிரவு சரவணபவனுக்குச் சாப்பிடப் போனபோது, எதிர்ப்பட்ட குளிரிலிருந்து எனக்குப் பாதுகாப்புத் தருவதற்காக, தனக்கென ஆசைப்பட்டு வாங்கிய அந்த ஸ்கார்ஃ.பை என் மகள் எனக்குத் தந்திருந்த காட்சி ஒரு தடவை என் கண்ணில் ஓடி மறைந்தது.

கண்களின் ஓரம் கசிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
மக்கள் பிரதேசசபை

நிமிர்ந்தபோது, என்னை அழைக்கத் தயாராக நின்றிருந்தார், அந்தக் கவுன்சிலர்.

அந்தச் சிறிய அறையில் இருந்த ஒரு வட்டமான மேசையைச் சூழப் போடப்பட்டிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்த நான், அங்கிருந்த அனைவருக்கும் என்னை ஒரு மொழிபெயர்ப்பாளரென உத்தியோகரீதியில் அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

"இங்கே வந்ததன் நோக்கம் என்னவென்று உங்களுக்கு விளங்கியதா?" சுருக்கங்கள் நிறைந்த கன்னங்கள், முதுகு வளைந்த உடல், சுளகு போன்ற பெரிய காதுகளில் கேட்பதற்கு உதவிசெய்யும் சிறுகருவிகள் என முதுமையைக் காட்டும் அறிகுறிகளுடனும், மிகுந்த வசீகரத்துடனும், மிடுக்குடனும் இருந்த அந்தப் பெண் டொக்டர் வெவ்வேறு திசைகளைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்த அந்த இளம் தம்பதியினரைப் பார்த்துக் கேட்கிறார்.

"என்ரை இரத்தப் பரிசோதனையிலை ஏதோ பிழையிருக்காம். அது பற்றின விளக்கம் அறியிறதுக்கு நான் இங்கை வரவேணுமெண்டு எங்கடை ஃபமிலி டொக்டர் சொன்னவர்." ஒதுக்க ஒதுக்க, அவளின் முகத்தின் முன் பறந்தபடியிருந்த தலைமயிரை ஒதுக்கியபடி அந்தப் பெண் தயங்கித் தயங்கிச் சொல்கிறாள்.

"ஆமாம், என்னுடைய பெயர் டொக்டர் ஜேம்ஸ், ஜெனரிக்ஸ் கவுன்சிலர். நான் இப்ப உங்களுடைய நிலைமையை விளங்கப்படுத்தப் போறன். பிறகு என்ன செய்யிறது எண்டு முடிவெடுக்கிறது உங்களைப் பொறுத்தது... சரியா?"

தலையை மட்டும் மேலும் கீழும் ஆட்டுகின்றனர், அவர்கள் இருவரும்.

"சில விடயங்கள் வழமைக்கு மாறாக இருப்பதை உங்கடை இரத்தப் பரிசோதனை காட்டுது. நிச்சயமாச் சொல்ல முடியாட்டாலும்கூட 'டவுண் சின்றோம்' என்ற ஒழுங்கீனம் இந்தக் குழந்தைக்கு இருக்கலாமென நாங்கள் எதிர்வுகூறலாம்," குரலில் பிசிறல் எதுவும் இல்லாமல் சொல்கிறார், அந்த டொக்டர்.

அந்தப் பெண்ணின் கண்களில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தோடியது. மேசையில் இருந்த ரிஷூப் பெட்டியை அவளிடம் நீட்டிய டொக்டர், "ஆ யூ ஓகே?" என்ற போது - "அழுது என்ன செய்யிறது, எது நல்லதோ அதைத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேணும்." என்று தனது ஐ.'.போனில் கண்களை வைத்திருந்தபடி தத்துவமொன்றை மொழிவது மாதிரிச் சொன்னான் அவளது கணவன்.

"'டவுண் சின்றோம்' இருக்குதா இல்லையா எண்டு உறுதியாகச் சொல்லுறதுக்கு 'அம்னியோசென்ரிசிஸ்' எண்டு ஒரு ரெஸ்ற் செய்யவேணும். அது பற்றிக் கதைக்கத்தான் உங்கடை டொக்டர் உங்களை இங்கை அனுப்பியிருக்கிறார்."

"இங்கை ஆக்கள் நாப்பது வயசுக்குப் பிறகும் பிள்ளைப் பெறுகினம். ஆனா, தனக்கு இப்ப முப்பது வயசுதானே ஆகுது. எப்பிடி... இது தனக்கு வருமெண்டு இவ கேட்கிறா," அவளில் தன்னுடைய கண்பார்வையை வைத்திருந்தபடி கேட்டான், அவன்.

"அது எவருக்கும், எந்த வயசிலும் வரலாம், ஆனால் வயசு கூடக்கூட அது வருவதற்கான சாத்தியம் கூடுது. உதாரணத்துக்கு முப்பது வயசில ஆயிரத்துக்கு ஒன்றாக இருக்கிற சாத்தியக்கூறு, நாற்பது வயசானதும் நூறுக்கு ஒன்றாகி விடுகிறது... நான் சொல்றது உங்களுக்கு விளங்குதா?"

"அவன் மீண்டும் தலையை மேலும் கீழும் ஆட்டினான். அவள் கண்ணீர் நிறைந்த அதே கண்களுடன் மூக்கைச் சீறிக்கொண்டிருந்தாள்.

"எங்களுடைய உடல் பல கலங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கலத்திலும் இருபத்திமூன்று சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன. அந்த ஒவ்வொரு நிறமூர்த்தத்திலும் பல பரம்பரை அலகுகள் இருக்கின்றன. அவைதான் எங்களுடைய உடம்பு சீராக இயங்குவதற்கு காரணமாக உள்ளன. அதில் இருக்கும் இருபத்திஒராவது சோடி நிறமூர்த்தங்களில் நிகழும் சில பிறழ்வுகளால்தான் 'டவுண் சின்றோம்' எண்ட ஒழுங்கீனம் ஏற்படுகிறது. இந்த ஒழுங்கீனம் இருக்கின்ற ஆட்களில் பல வகையான உடல், உளக் குறைபாடுகள் இருக்கும்."

நோயாளர்களுக்கு விளங்கப்படுத்தவெனத் தயாரிக்கப்பட்ட இலகுவான படங்கள் போட்ட சிறிய பிரசுரம் ஒன்றைக் காட்டி அவர்களுக்கு அதை மேலும் விளங்கப்படுத்தின பின், "இது பற்றி வேறு ஏதாவது கேள்விகள் இருக்கின்றதா?" என்கிறார் டொக்டர்.

பன்னிரெண்டாம் வகுப்பில் நான் ஆசையாக, ஆர்வமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த ஜெனரிக்ஸ் என் மனதில் மீண்டும் நினைவுக்கு வந்து, மனதுக்குள் ஒரு கணநேர ரண வலியையும் ஏற்படுத்தி மறைந்தது.

இல்லை என அவள் தலையை ஆட்டினாலும் அவளின் கண்கள், அவளுக்குள் ஆயிரம் கேள்விகள் துளைத்தெடுக்கின்றன என்ற பிரமையை எனக்குள் ஏற்படுத்தின.

"வயித்துக்குள்ளாலை ஒரு ஊசியைக் குத்தி, கருப்பையிலை உள்ள அமினியன் திரவத்தின் ஒரு சிறிய அளவை எடுத்து அதைப் பரிசோதிக்கிற பரிசோதனைதான், 'அம்னியோசென்ரிசிஸ்'. அந்தத் திரவத்திலை குழந்தையின் சில கலங்களும் இருப்பதால் அதனைப் பயன்படுத்தி குழந்தையின் நிறமூர்த்தங்களை நாங்கள் பரிசோதிக்கலாம். இந்தச் சோதனை மிகவும் பாதுகாப்பானது, வலியற்றது. சிலமணி நேரம்தான் ஹொஸ்பிற்றலில் நிற்கவேண்டும். பிறகு வீட்டிலை போய் ஓய்வாய் இருந்தால் சரி. இதனால் கருச்சேதம் நடக்கிற சாத்தியம் மிகமிகக் குறைவு... அது இருநூற்றில் ஒன்று என்று கூடச் சொல்ல முடியாது.... இது பற்றி வேறு ஏதாவது அறிய வேண்டுமா?"

"எப்ப செய்யவேணும்?" என்றாள் அவள்.

"கர்ப்பம் பத்தொன்பது கிழமையாவதற்கு முதல் அதைச் செய்யவேண்டும். முதலில் அதற்கு ஒத்துக்கொண்டு ஒரு படிவத்தில் நீங்கள் கையொப்பமிட வேண்டும். குழந்தையில் 'டவுண் சின்றோம்' இருக்கிறது எனத் தெரிந்தால் கர்ப்பத்தைத் தொடரப்போகிறீர்களா அல்லது நிறுத்தப் போகிறீர்களா என்று நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அதோடை இன்னொரு முக்கியமான விடயமும் நான் சொல்ல வேண்டும். இரத்தப் பரிசோதனையில் சில அசாதாரண அவதானிப்பு இருந்ததால், 'டவுண் சின்றோம்' இல்லை என்று முடிவுசெய்யப்பட்டாலும் கூட 'அல்ற்றாசவுண்ட்' செய்வது நல்லது. குழந்தைக்கு எந்தவித இதயக் கோளாறுகளும் இல்லை என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள அது உதவும் ... சரியா?"

சரி, என்று மீண்டும் தலையாட்டினார்கள், அவர்கள் இருவரும். "வேறை ஏதும் கேள்விகள் இல்லையென்றால் இந்தப் படிவத்திலை கையொப்பமிடுங்கோ. உங்கடை ரெஸ்ற்க்கான ஒரு நேரத்தை முடிவுசெய்த பின்னர் உங்களை நாங்க அழைத்துச் சொல்வோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தைத் தமிழிலும் தமிழை ஆங்கிலத்திலுமாக மொழிபெயர்த்து, அனைத்தையும் சொன்னபின் நானும் அந்தத் தம்பதியினரும் ஒன்றாக நடந்து கார்நிறுத்துமிடத்துக்குப் போகின்றோம். என் கார் அருகே போனதும் என் கால்கள் என்னையறியாமலே நிற்கின்றன.

அவர்களைத் திரும்பிப் பார்க்கிறேன்.

"சொன்னது எல்லாம்... உங்களுக்கு விளங்கினது தானே?"

கேட்கும்போது மனதில் ஓர் அவசரமும் படபடப்பும் நிலைகொள்கின்றது. இதயம் வேறு வேகமாக அடித்துக் கொள்கிறது.

என்னுடைய மொழிபெயர்ப்பாளர் கடமை, எப்போது அந்தக் கவுன்சிலிங் அறையை விட்டு வெளியேறினேனோ அப்போதே முடிந்திருக்க வேண்டும். அதன்பின் அவர்களுக்கு நான் சொல்பவை எல்லாம் எனது தொழில் நெறிமுறைக்கு மாறானவை என்ற மனஉறுத்தலுடன் ஆரம்பிக்கிறேன்.

"'டவுண் சின்றோம்' இல்லை எண்டு அந்த ரெஸ்ற் சொன்னாலும்கூட, பிறக்கிற பிள்ளை, குறைபாடுள்ள பிள்ளையாக இருக்கச் சந்தர்ப்பமிருக்கு எண்டதும் உங்களுக்கு வடிவா விளங்கினது தானே?"

"ஓம்...விளங்கினது." என்கிறான், அவன்.

"தவறவிடமால் அந்த 'அல்ற்றாசவுண்ட்' ரெஸ்ற்றையும் செய்து போடுங்கோ. என்ன....? பிள்ளை இல்லாமல் இருக்கலாம்.... ஆனா பிள்ளை குறைபாடுள்ள பிள்ளையாக இருக்கக்கூடாது. பிள்ளை வேணும் எண்ட ஆசைக்காய், நல்லா வாழமுடியாத இன்னொரு உயிரை இந்த உலகத்திலை கொண்டு வந்து, அதைத் தினமும் அல்லல்பட வைக்கிறது... பெரிய பாவம். சரி.... நான் வாறன்," என்று சொல்லிவிட்டு காரில் ஏறிக் கொள்கிறேன்.

என் கண்கள் குளமாகின்றன.

வெறுமனவே வார்த்தைகளால்தான் சொல்ல முடிந்தது. ஊரிலை ரெஸ்ற்ஸ் செய்கிற வசதியில்லாததாலை ஒரு பிள்ளைக்கு உயிர் கொடுத்து இப்ப என் பிள்ளை படும் கஷ்டதைப் பார்த்து நான் தினமும் இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன் நானும் அவளும் படும் அந்த அவஸ்தை உங்களுக்கு வேண்டாம் என்று அவர்களுடன் மனம்விட்டுக் கதைக்க முடியவில்லையே என்றதில் மனம் கனத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பது கிழமையானலும் அது உயிர் தானே என யோசியாமல் நிலைமையை நன்கு புரிந்து கொள் என்று அந்தப் பெண்ணை மானசீகமாக வேண்டினபடி எப்படி வீட்டு வந்தேன் என்றே தெரியாமல் வந்து வீட்டுக் கதவைத் திறந்த போது, சக்கரநாற்காலியில் தலைதொங்கியபடி இருந்த என் மகள் என்னைப் பார்த்து கோணலான அவளது வாயால் ஆர்வமாகச் சிரிக்கிறாள்.

அப்போதுதான் எனக்கு அந்த ஸ்கார்.்.ப் பற்றிய நினைவு வந்தது.

"ஓ... மை கோட், எங்கை என்ரை ஸ்கார்.்.ப்?.... என்ரை பிள்ளை ஆசையாய்த் தந்த அந்த ஸ்கார்.்.பை நான் துலைச்சுப் போட்டன்!"

**தூறல்** 2012 ஏப்ரல் – ஜூன்

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# பேசலின்றிக் கிளியொன்று

எழும்பின நேரம் முதல் வீடு ஒரே பரபரப்பாக இருக்கிறது. "பிளீஸ் அம்மா, பிளீஸ், நானும் உங்களோடை ஹொஸ்பிற்றலுக்கு வரட்டே?" என்று 'அம்மா'விடம் கெஞ்சினது பயனளிக்காமல் போய்விட, முகத்தைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய பள்ளிக்கூட பஸ்சுக்கு ஓடுகிறாள் விசாலி. அவளைப் பின்தொடர்ந்து போன 'அப்பா,' "குட்டி, நீ வீட்டை வந்தாப்போலை அக்கான்ரை கையைப் பாக்கலாம் தானே. இப்ப அழாமல் போட்டு வா... என்ன?" என்று முதுகைத் தடவி, அவளின்ரை நெற்றியிலை கொஞ்சிவிடுகிறார்.

இப்படித்தான் என்ரை அம்மாவும்! ஏதாவது வேணுமெண்டு அடம்பிடிக்கிற நாட்களிலை, கட்டிப்பிடித்து, கொஞ்சி, தடவி, எதையாவது சொல்லிச் சமாதானப்படுத்தித்தான் எங்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவா. 'மனம் சந்தோஷமாக இருந்தால்தான் பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கிறது விளங்கும்' என்று அவ அடிக்கடி சொல்வது நினைவுக்குவந்து என்ரை கண்களைக் கசியவைக்கிறது.

"சுமிக் குஞ்சு, கவனமாய்ப் போட்டு வாம்மா, பொம்மர் சுத்தத் தொடங்கினால் உடனை பங்கருக்குள்ளை ஓடிப்போயிட வேணும், என்ன? தற்செயலா, அப்பிடி ஓடேலாமல் போயிட்டால், உடனை நிலத்திலை விழுந்து படுத்திடு ராசாத்தி! ரீச்சர்மார் எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரை எண்டு பாக்கிறது, நீ தான் உன்னிலை கவனமாயிருக்க வேணும், என்ன?" என்ரை நாடியை உயத்தி, என்ரை கண்களைப் பார்த்து அம்மா எனக்குத் தினம் தினம் சொன்ன வாசகங்கள் அவை.

அண்டைக்கும் அப்படித்தான் சொல்லிப்போட்டு போனவ. போனகையோடை, திரும்பி ஓடிவாறா. "உந்தா சுத்தத் தொடங்கியிட்டாங்கள். ஒண்டுக்குப் பின்னாலை ஒண்டாக நாலைஞ்சு வருது. இண்டைக்கு பள்ளிக்கூடம் வேணாம்." என்று என்னையும் தம்பியையும் கையிலை பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடுறா.

"சுமி, ரெடி தானே? வா, 'அப்பா' கீழை காருக்குப் போயிட்டார்." 'அம்மா'வின்ரை குரல் என் நினைவைக் குழப்புகிறது.

அந்த புளோர்வியூ ஆஸ்பத்திரி வழமைபோல வலு சுத்தமாக, எந்தச் சந்தடியுமின்றி, இன்றும் மிகவும் அமைதியாக இருக்கிறது. எங்களைக் கண்டதும் 'அப்பா'விடம் அவர்கள் ஆங்கிலத்தில் ஏதோ சொல்கிறார்கள். பிறகு அந்தப் பொய்க்கையைக் கொண்டு வந்து எனக்குப் போட்டுவிடுகிறார் ஒருவர். என் பெருவிரல் மட்டும் வெளியில் தெரியக்கூடியதாய், மீதி நாலு பொய் விரல்களுடனும் இருந்த அந்த உறை எனது புதுக்கை ஆகி விடுகின்றது.

என்ரை நிறத்திலிருந்து பெரிதும் வேறுபடாமல், எனது உடலின் ஒரு பகுதியாகி விட்ட என்ரை அந்த வலக்கையைத் தொட்டுப் பார்த்த 'அப்பா' என்னைப் பார்த்து ஒருவித ஆறுதலுடன் சிரிக்கிறார்.

"ஹப்பி?" எனக் கேட்ட அவர்களுக்குப் பதிலாக என் தலையைக் கொஞ்சம் மேலும் கீழுமாய் ஆட்டுகிறேன் நான்.

"சிரிச்சுக் கொண்டெல்லோ சொல்லோணும்! என்ன, பிள்ளை? ஹப்பி தானே?" என்கிறா, 'அம்மா'.

அந்த உறையைக் கழட்டுறது எப்பிடி? பிறகு திருப்பி என்னெண்டு போடுறது? என்றெல்லாம் அவர்கள் விளங்கப்படுத்துறதை எனக்கு விளங்கக் கூடியதாய் தமிழிலை 'அப்பா' திருப்பிச் சொல்றார். "ஊத்தையாய்ப் போனால் சவுக்காரம் போட்டுக் கழுவலாமாம். இது ஊத்தையாய்ப் போயிடும் எண்டு நீ பயப்படத் தேவையில்லை. சரியே?" எனச் சொன்ன 'அப்பா'வைப் பார்த்து, "சரி," எனத் தலையாட்டுகிறேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்குக் கை சும்மாயிருக்காது. இந்தச் செம்பாட்டு மண் முழுக்க உன்ரை உடம்பிலைதான். மண்ணிலை விளையாடுறதிலை உனக்கு என்னதான் புளுகமோ...! சரி, எழும்பு, போய்க் கையைக் கழுவிப்போட்டு, சாப்பிட வா." அம்மா பக்கத்திலை வந்து நிண்டு நச்சரிப்பது காதிலை வந்து போகிறது.

"இந்தக் கையாலை, இப்ப கொஞ்சம் சின்னச் சின்ன வேலைகள் செய்து பார்ப்போம், என்ன? இந்தப் பந்தை உங்கடை இரண்டு கைகளாலையும் வடிவாய்ப் பிடித்து எனக்கு எறியுங்கோ பாப்பம்".

"குட்".

"இப்ப, இந்தக் கரண்டியை வலக்கையாலை இறுக்கிப் பிடியுங்கோ, குட்..."

அவற்றைச் செய்யும்போது, "என்ன இருந்தாலும் அந்தக் கையாலை கஷ்டமான வேலைகள் செய்யக்கூடாதாம்," என்று 'அப்பா' எனக்கு எச்சரிக்கையும் செய்கிறார்.

"சுமி, இனி இந்தக் கையை ஒளிக்கத் தேவையில்லை! வெட்கப்படாமல் வடிவாய்க் காட்டாலாம்", 'அம்மா' மகிழ்வுடன் சிரிக்கின்றா.

"இந்தக் கை, சுமியின்ரை கையோடை சேருற இடத்தை மறைக்கிறதுக்கு காப்பு மாதிரி ஏதாவது வாங்கிப் போடலாமாம்." 'அம்மா' வுக்குச் சொல்லுகிறார், 'அப்பா'.

"ஓம், பிள்ளைக்கு நான் வடிவான காப்பு வாங்கித்தாறன்." சொன்ன 'அம்மா' என் தலையைக் கோதிவிடுகிறா.

"சரி, சுமி, இப்ப, கையைக் குலுக்கி இவைக்குத் தாங்ஸ் சொல்லு பாப்பம்... உந்தக் கையாலை இல்லை... மற்றக் கையாலை. உன்ரை வலது கையாலை... கெட்டிக்காரி!" என்று சொன்ன 'அப்பா' தொடர்கிறார், "இனிப் பிள்ளை சந்தோஷமாக இருக்கவேணும், என்ன!"

வீட்டுக்குப் போனதும் என்ரை புதுக்கையைப் பார்க்க என்று வந்த பக்கத்து வீட்டு மாமி, "செயற்கைக் கை எண்டே சொல்லேலாது. அந்தமாரி நல்லாயிருக்குது!" என்று அதன் அச்சொட்டான நிறத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் போகிறா.

"அங்கை நேரத்துக்கு வைத்தியம் செய்திருந்தால் மற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரலுகளையும் பாதுகாத்திருக்கலாம். என்ன செய்யிறது? என்ரை சினேகிதன், அந்த இன்ஸ்பெக்டர் பெரேரா இருந்ததாலை இப்படியாவது பிள்ளையைக் காப்பாத்த முடிஞ்சுது." பெருமூச்சு விட்டுக் கொள்கிறார், 'அப்பா'.

"செல் அடிபட்டதாலை, பிஞ்சுபோன துடையையும் பிளாஸ்ரிக் சேஜரியாலை திருத்தலாமாம்... அதையும் செய்யவேணும்" என்ற 'அப்பா' வை, "எத்தனை பேர் அங்கை இருந்து கஷ்டப்படுதுகள். என்னவோ, சுமியின்ரை நல்ல காலம், இங்கை வரக் கூடியதாய் இருந்திட்டுது. அதை விட உங்களுக்கு நல்ல மனசிருக்குது.... இப்படி எல்லாரும் உதவி செய்யாயினம்!" என வாயாராப் பாராட்டுகிறா, பக்கத்து வீட்டு மாமி.

"கடவுளே, தலைக்கு மேலை பொம்மர் சுத்துது!... சுமி, சுமன் விழுந்து படுங்கோ.... படுங்..கோ!" அவசரப்படுத்தின அம்மா நாங்கள் படுக்கமுதல், எங்களைக் கீழே விழுத்திப்போட்டு எங்களுக்கு மேலே படுத்துக் கொள்கிறா.

நிலத்திலை பரவிக்கிடந்திருந்த கூரான அந்தச் சல்லிக்கற்கள் உடம்பை விறாண்டுகின்றன. அதையும் மீறிய பயம் உடம்பைச் சில்லிடச்செய்கிறது.

"குஞ்சு, பயப்பிடாதை அப்பன், அம்மா இருக்கிறனெல்லே." வீரிட்டலறும் தம்பியைச் சமாதானப்படுத்தும் அம்மாவின் குரல் நடுங்குகிறது. அவன் நிலைமை விளங்காமல் திமிறிக் கொண்டிருக்கிறான். எனக்கு அழுகை அழுகையாய் வருகுது. உடம்பு கிடுகிடுவெண்டு நடுங்குது. செத்துப்போகப்போறம் மாதிரிப் பயமாகக் கிடக்குது!

வட்டம்போடுற பருந்திட்டையிருந்து குஞ்சுகளைக் காப்பாத்த, தன்ரை செட்டைகளை விரித்து, அவற்றை மூடுற ஒரு தாய்க்கோழி மாதிரி... எங்களைத் தன்னால் மூட அம்மா முயற்சிக்கின்றா. ஆனால் அவவிட்டை செட்டை இருந்தால் தானே...

திடீரென்று காது வெடித்துவிடும் போல ஒரு பலத்த சத்தம் கேட்கிறது. என்னில் ஏதோ ஒன்று பட்டுச் சிதறுகிறது. வலக்கையின் நாலு கை விரல்களும் கீழே தொங்க, இரத்தம் பாய்ந்து ஓடுகிறது. அந்த வலி... தாங்கமுடியாத அந்த வலியில், 'அம்மா!' என ஓலமிட்டுக் கதறுகிறேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருந்த இடத்திலிருந்து நான் மிகவும் தூரத்தில் வீசப்பட்டு இருப்பது அந்தக் கரிய புகைக்குள்ளும் மெலிதாகத் தெரிகிறது. கண்ணுக்குத் தெரிந்த இடமெல்லாம் ஒரே இரத்தம்.

காதுநிறைந்த முனகல்களும், கூக்குரல்களும் வேறு மனதைப் பிளக்கின்றன. மெல்ல எழும்ப முயன்ற போது, தலைக்கு மேலை வந்த இன்னொரு பொம்பர் பிறகும் ஒரு குண்டைப் போட்டு விட்டுச் செல்ல - பக்கத்திலிருந்த வேப்ப மரம் பெருத்த ஒலியுடன் சடாரென விழுகிறது. தொடர்ந்து என்னுடைய இரண்டு கால்களுக்கும் இடையில் ஏதோ ஒன்று விழுந்து காலை எரிக்கிறது.

வவுனியா ஆஸ்பத்திரியிலை நான் கண் முழித்த போது, அம்மா வேறை வாட்டிலை, தம்பி வேறை வாட்டிலை இருக்கினம். இப்ப ஒருத்தரும் ஒருத்தரையும் பாக்கேலாது. சுகம் வந்ததும் பார்க்கலாம் என்றார்கள்.

தலையிடி, காய்ச்சல் எண்டாலே, 'வைரவரே என்ரை பிள்ளையைக் காப்பாத்து,' எண்டு ஒரு பழந்துணியிலை 25 சதம் காசும், திருநீறும் கொஞ்சம் போட்டுக் கையிலை கட்டிவிட்டு, அடிக்கடி நெத்தியிலை பச்சைத் தண்ணிச்சீலை போட்டு விட்டபடி, பக்கத்திலை இருந்து தடவிக்கொண்டிருக்கிற என்ரை அம்மா, இந்த வலியின்போது எனக்குப் பக்கத்தில் இல்லாததில் என மனசு பலமாக வலிச்சது. எங்களுக்கு மேலே படுத்த அம்மாவின்ரை முதுகிலை செல் விழுந்திருக்குமோ அல்லது அவவின்ரை தலையிலை விழுந்திருக்குமோ, என்னவோ ஏதோவொன்று ஒரே யோசனையாகவும் மிகுந்த கவலையாகவும் இருந்தது. அம்மாவைப் பாக்க வேணும், அவவின்ரை மடியிலை படுக்கவேணும் எனத் துடியாய்த் துடித்தேன்.

நாட்கள், வாரங்கள் ஆயின. என்னுடைய வாட் நேர்ஸ் என்னைப் பார்க்க வரும் போதெல்லாம் அழுதா.

கடைசியா ஆஸ்பத்திரியில் துண்டு வெட்டி, என்னை முகாமுக்கு அனுப்பின போதுதான் அம்மாவும் தம்பியும் என்னிடமிருந்து நிரந்தரமாய்ப் பிரிந்துவிட்டதை நான் அறிகிறேன். எனக்குக் கை இல்லாமல் போனதை விட, நான் தனிச்சுப் போட்டன் என்ற இரக்கத்திலை தான் அந்த நேர்ஸ் அப்படி அழுதிருப்பா என்பதும் அப்போதுதான் புரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடைசியிலை, அப்பாவின்ரை அக்கா, எனக்கு 'அம்மா'வாகினதில், இப்ப இப்படி இங்கு வந்து நிற்கிறன் நான்.

பள்ளிக்கூடத்தாலை வந்த விசாலி என்ரை புதுக்கையைப் பார்க்க ஆர்வத்துடன் ஓடி வாறாள்.

"சுமி, என்ன யோசனை? இனிச் சந்தோஷமாக இருக்கவேணும் பிள்ளை அதிஷ்டகாரி, கை வந்திட்டுது தானே. பிறகென்ன? எங்கை, சிரி பாப்பம்!" பக்கத்து வீட்டு மாமி சொல்லுறா.

நான், என்ரை இரண்டு கைகளையும் மாறிமாறிப் பாக்கிறன். இது என்ரை அதிஷ்டமா?

**மல்லிகை** - 2012 ஒக்ரோபர்
**உரையாடல்** 2014 நவம்பர்

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# இலக்கணங்கள் மாறலாம்

கேசவன் அழுத்திய அந்த அழைப்பு மணியின் ரீங்காரம் கேட்டுக் கதவைத் திறந்த குமார் அன்புடன் என்னை ஆரத்தழுவிக் கொள்கிறான்.

போட்டோவிலையும் ஸ்கைப்பிலும் மட்டும் நான் இதுவரை பார்த்த, மூத்தவள் சோபனாவும் இளையவள் வதனாவும் அவனுக்குப் பின்னால் நின்றபடி என்னைப் பார்த்து புன்னகைக்கிறார்கள்.

மனசை ஆக்கிரமித்த பல இனம்புரியாத உணர்ச்சிகளுடன், அவர்கள் இருவரையும் இறுக அணைத்து முத்தமிட்ட போது 'பாவம், தாயில்லாப் பிள்ளைகள்' என்று என்னையும் மீறி என் மனதில் பீறிட்ட பரிதாபம், என் கண்களைக் குளமாக்குகிறது.

என்ரை தம்பியிலை எனக்குக் கொள்ளை ஆசை. அவன் கலியாணம் கட்டினபோது எங்களை விட்டிட்டுப் போறான் என்ற தவிப்பிலை இரண்டு கிழமைக்கு மேலா நான் அழுதிருக்கிறன். அவனுக்குப் பிடிச்ச சாப்பாட்டை, அவனில்லாமல் சாப்பிட முடியாமல் தவித்திருக்கிறன். பின்னர், அவனுக்கென்று ஒரு வாழ்க்கை வந்திருக்கு என்று என்னை நானே ஆறுதல்படுத்திக் கொண்டேன். ஆனால், அந்த ஆறுதல் நீண்டநாள் நிலைக்கேல்லை.

கல்யாணி வீட்டுக்கு வந்தபோது அவள் பூர்விகல்யாணியாக அவனது வாழ்க்கையில் அமைதியையும் மகிழ்ச்சியையும் நிறைப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எதிர்பார்த்தோம். ஆனால், அந்த உறவு குறுகிய காலத்திலேயே முகாரியாக முடிந்துபோனது.

"என்ன அக்கா யோசினை? ஏதாவது குடிக்கத்தரட்டோ, அல்லது சாப்பிடுவமோ...?", குமாரின் குரல் என் நினைவுமீட்டலுக்கு முற்றுப்புள்ளியிட, "சாப்பிடுவம், பிள்ளையளுக்கும் பசிக்கும்தானே," என இருக்கையை விட்டு எழும்பிய நான், "வீட்டை நல்ல வடிவாய் வைச்சிருக்கிறாய்," என்கிறேன்.

"அம்மா, உங்களுக்குத் தெரியும் தானே, மாமாவைப் பற்றி, அவர் எல்லாத்திலும் ஒழுங்குதான்." கேசவனும் பாராட்டுகிறான்.

"அக்கா, சாப்பாடு எப்படியிருக்கு எண்டு சொல்லுங்கோ. உங்களளவுக்கு ருசியாக சமைக்க எனக்குத் தெரியாது எண்டாலும், இப்ப நான் கொஞ்சம் பரவாயில்லை." என்றவன், தனது பிள்ளைகளைப் பார்த்து, "அக்கா நல்லாச் சமைப்பா. அதுவும் ஆட்டிறைச்சியை சின்னன் சின்னான வெட்டி, மணக்க மணக்க, ருசியாச் சமைக்கிறதுக்கு, அக்காவுக்கு ஈடு அக்காதான். எவ்வளவு பசியெண்டாலும் கடையிலை ஒரு ரீகூட வாங்கிக்குடிக்க மாட்டார், அத்தான். வீட்டை வந்து அக்கான்ரை சாப்பாட்டைப் சாப்பிட்டாத்தான் அவருக்கு பொச்சம் தீரும்," என்கிறான் குமார்.

"அவருக்கு இப்ப அம்மாவின்ரை சாப்பாடு மட்டுமில்லை, எந்த நேரமும் அம்மாவும் பக்கத்திலை வேணும். ஒரு மாசத்துக்கை அம்மாவைத் திருப்பி அனுப்பிடோணும் எண்ட ஒப்பந்தத்திலைதான் இங்கை அம்மாவை விட்டிருக்கிறார்," சிரிக்கின்றான் கேசவன்.

"உனக்கும் வயசு போகேக்கைதான் அது விளங்கும், கேசு... இளமையிலை, பிஸி லைஃப்... சின்னச் சின்ன விஷயங்கள் எல்லாம் பெரிசாய்த் தெரியாது. பிள்ளையளைப் பற்றி, வேலையைப் பற்றி, காசுபணத்தைப் பற்றிக் கவலைப்படுறதிலை காலம் போயிடும். ஆடி அடங்கி, ஓய்ஞ்சிருக்கேக்கைதான் அன்பும் கரிசனையும் உள்ள ஒரு உயிரின்ரை - அந்த உறவின்ரை - முக்கியத்துவம் வடிவாய் விளங்கும்..."

குமாரின் சொற்களினூடு தொனித்த அந்த ஏக்க உணர்வும் யதார்த்தமும் என் மனதை உறைய வைக்கிறது.

இவன்ரை தனிமைக்கு ஒரு முடிவு கண்டுபோட்டுத்தான் நான் இலங்கைக்குத் திரும்பிப் போகவேணும், என்ரை மனசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்துக் கொள்கிறது.

சாப்பாடு முடிந்து, ஃபுருட்சலட்டுடன் வந்து சோபாவில் அமர்ந்த கேசவன், "மாமா, வழமைமாதிரி, உங்கடை சாப்பாடு, சுப்பர்!", பெருவிரலை உயர்த்திக் காட்டுகிறான். எனக்கும் அது பெருமையாக இருக்கிறது.

பின்னர், திரும்பவும் ஞாயிற்றுக்கிழமை வந்து என்னைக் கூட்டிப்போவதாகக் கூறி கேசவன் விடைபெற்றுக்கொள்கிறான்.

பிள்ளைகளைப் படுக்கவைத்துப் போட்டு மீண்டும் வந்து எனதருகே வந்தமர்ந்து கொண்டான் குமார்.

பலதும் பத்துமாக, ஊர்ப்புதினங்களை அலசிக் கொண்ட பின்னர், பலதடவைகள், போனிலும் கடிதத்திலும் நான் கேட்கக் கேட்க, அவன் தட்டிக் கழித்த கதைதான் என்றாலும் நேரில் கேட்கும் போது ஒரு மாறுதல் ஏற்பட மாட்டாதா என்ற நப்பாசையுடன், எனது மனதை அரித்துக்கொண்டிருக்கும் கேள்வியை நான் மீண்டும் அவன் முன் வைக்கிறேன்.

"தம்பி, உன்ரை பொழுது பிள்ளையளோடையும் வேலையோடையும் போகுதெண்டு நீ எனக்குச் சமாதானம் சொல்லாமல் உண்மையைச் சொல்லு, தனிமை உன்னை வாட்டேல்லேயே? ஏன், நீ திரும்பக் கலியாணம் கட்டக்கூடாது?"

எங்களுக்கு மேல் சுழன்றுகொண்டிருந்த மின்விசிறியை அண்ணாந்து பார்க்கிறான் அவன், பின்னர் சின்னதாக ஒரு பெருமூச்சுடன், "அக்கா, தனிமை இல்லையெண்டு சொல்லேலாது... நேரத்துக்கு நேரம் ஒரு தவிப்பு வரத்தான் செய்யுது. ஆனா..."

"கவுன்சிலரா இருந்து எத்தனை வகைப் பிரச்சினைகளை நாளாந்தம் நான் கேட்கிறன். பசி மாதிரி எல்லாவிதமான இயற்கைத் தேவைகளும் எங்கள் எல்லாருக்கும் இருக்குது. எனக்கு அது விளங்கும். அதாலை, அக்காவோடை இதுகளை எப்பிடிக் கதைக்கிறது எண்டு தயங்காமல் என்னோடை மனம் விட்டுக் கதையப்பு!"

அவன் வீட்டுக் கிளிக்கூண்டிலிருந்த இரண்டு கிளிகளும் ஒன்றின் அலகை ஒன்று மாறிமாறிக் கௌவியபடி கீச்சிடுகின்றன.

"சரியக்கா... எனக்குத் தேவை இருக்குது எண்டதுக்காண்டி, இன்னொருக்கா ஒரு நிரந்தர பந்தத்தை ஏற்றுக்கொள்ளுறதுக்கு நான் ரெடியில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்ரை பயம் எனக்கு விளங்குது, தம்பி... ஆனால், ஒருக்காப் பிழைச்சால், நெடுகப் பிழைக்கும் எண்டு சொல்லேலாதுதானே!"

"அந்தப் பயத்துக்காக மட்டும் நான் இதைச் சொல்லேல்லை. என்ரை பிள்ளையளுக்கு நான் செய்யவேண்டியவைதான் எனக்கு இப்ப முக்கியமாய்ப்படுது. அது தான் என்ரை கடமையெண்டு நான் நினைக்கிறன். அதுகள் மனம் நோகாமல் இருக்கவேணும்."

மேசையிலிருந்த தண்ணீரை எடுத்துக் குடிக்கிறான், அவன்.

பிறகு என்னைப் பார்த்து, "அக்கா, இந்தப் பிள்ளையள், என்ரை அரவணைப்பிலை, நானே உலகமா, ஆறு வருஷமா வளருதுகள்... இனி, ஒரு புதுஆளை நான் இந்த வீட்டுக்கை கூட்டிக்கொண்டு வந்து, அந்த ஆளின்ரை வாழ்க்கைமுறையளை, அதுகளுக்கு அறிமுகப்படுத்திறதிலை எவ்வளவு சிக்கல் வரும் எண்டு சொல்லு பாப்பம்... அது மட்டுமில்லை, ஆரோ ஒராளோடை நான் அன்பாயிருக்கிறதை இந்தச் சின்ன வயசிலை அவளவையாலை சகிச்சுக்கொள்ளேலுமோ எண்டு யோசித்துப்பார்."

"என்ன இருந்தாலும், பொம்பிளைப் பிள்ளையளுக்கு ஒரு அம்மா இருக்கிறது, நல்லமெல்லோ," என் வாயிலிருந்து வெளிவந்த அந்தச் சொற்கள் எந்தக் கருத்துமற்ற வெற்றுச் சொற்களாக என் காதுகளில் எனக்கு ஒலிக்கிறது.

"பெத்த அம்மாவையே வேண்டாம் எண்டு போட்டுத்தானே என்னோடை வந்து இருக்கிறாளவை. நீ நினைக்கிறமாரி பயப்பிடுறதுக்கு ஒண்டுமில்லை. நாங்கள் சுதந்திரமாய்க் கதைக்கிறம். மனசிலை இருக்கிறதைப் பரிமாறுறம், பிறகென்னத்துக்கு ஒரு புதுஅம்மா?"

"சரி, அவளவை கலியாணம் கட்டிப் போனப்பிறகு நீ என்ன செய்வாய்? ஒரு கதைக்குக் கேட்கிறன்."

"அதுக்கு இன்னும் ஒரு பத்து, பன்னிரண்டு வருஷமாவது இருக்குது. அதை அப்ப பாப்பம்."

"அம்பதுக்குப் பிறகு, என்னெண்டடா கலியாணம் கட்டுவாய்?"

"அக்கா, இருபத்தி ஐஞ்சிலை கட்டி என்ன நடந்தது? அன்பும் பாசமும் வயசோடை சம்பந்தப்பட்டதில்லை, மனசோடை சம்பந்தப்பட்டது. இப்பவும் சொல்லுறன், எனக்கு நிரந்தர பந்தம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் என்கிறன்...என்னிலை அன்பு செலுத்தக்கூடிய, எனக்குச் சந்தோஷம் தரக்கூடிய, என்னோடை ஒத்துப்போற ஒரு உறவு கிடைச்சால், அதுக்கு நான் ரெடி."

கடிகாரம் பன்னிரெண்டு தடவை ஒலித்து ஓய்ந்தது.

"என்னடா, நீ சொல்லுறாய்? அப்பிடி ஆர் வரப்போயினம்?"

"அக்கா, இது கனடா, மனிசரையும் உறவுகளையும் மதிக்கிற ஒரு நாடு. அதுக்குத் தக்கதாக நாங்களும் மாறேக்கை எதுவும் நடக்கலாம்...பாப்பம்."

"அப்பிடி ஒரு தேவையிருந்து, மனசு விரும்பினாலும் கூட ஊர் என்ன சொல்லுமோ, எண்ட பயம் பொம்பிளையளுக்கு இருக்குமே... இது நடக்கிற கதையே?"

"சரி, நடக்காட்டில் போகட்டும், வந்தால் நல்லம் எண்டுதானே சொன்னனான். நாங்கள் எதுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறம் எண்டதிலைதானே எல்லாம் தங்கியிருக்குது."

"ம்..... நீ சொல்லுறதும் சரிதான், பிள்ளைகளைப் பற்றி, அதுகளின்ரை மனசைப் பற்றி நாங்கள் அதிகம் யோசிக்கிறதில்லைத்தான்."

"அக்கா, தனிமையைப் போக்கப் பல வழிகள் இருக்கு. தனிமனிசத் தேவைகளுக்கு அனேக மாக்கங்கள் இருக்குது. ஆனால்.... பிள்ளையளின்ரை மனசைப் பாதிக்காமல் அவையின்ரை வளர்ச்சிக்கு உதவ பெற்றாராலை மட்டும்தான் முடியும். நான் பெத்த பிள்ளையளை நல்லா வளக்க வேண்டியது என்ரை பொறுப்பு. அதை நான் செய்யிறதாலை கிடைக்கிற திருப்தி எனக்குப் போதும். நீ வீணாக் கவலைப்படாதே."

அவனருகே போய் அவன்ரை தலையைக் கோதி, உச்சியில் முத்தமிடுகின்றேன், நான்.

"ம்ம்... சரி, நேரமாகுது, படுப்பம்," சொல்லிவிட்டு எழுந்தவன் தன் அறைக்குள் போய் லைற்றைப் போடுகின்றான்.

எனக்கென ஒழுங்கு செய்யப்பட்ட அறைக்குள் போன நான் கனத்த மனசோடை லைற்றை அணைக்கிறன்.

**கனடா - தமிழ் எழுத்தாளர் இணைய ஆண்டுமலர்**
**சங்கப் பொழில்** 2013

► ► ►



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

# எதுவரை?

எதிரும் புதிருமான உணர்ச்சிகள் போராடிக்கொண்டிருந்த மனதில் திடீரென ஒரு சிறு வைராக்கியம் துளிர்க்கவே, காரை மூடியிருந்த பனியைத் துப்புரவாக்கிய போது, காற்றின் திசையில் பறந்துவந்து - அவள் ஜக்கெற்றின் மேல் படிந்திருந்த அந்தப் பனித்துகள்களைக் கையால் தட்டிவிட்டு, தன் பொக்கற்றுக்குள் இருந்த போனை எடுத்து அவனுக்கு டயல் பண்ணினாள் அவள்.

ஆனால் அவனின் பதில் கிடைக்கவில்லை. மீண்டும் அழைக்க நினைத்தவளுக்கு அப்படி அவள் ஒன்றுக்கு மேற்பட்ட தரம் அழைப்பது அவனுக்குப் பிடிக்காது என்பது நினைவுக்கு வர, 'இருக்கிற மனவேதனையை ஏன் இன்னும் கூட்டுவான்' எனத் தனக்குத் தானே சொல்லியபடி காரை ஸ்ராட் செய்தாள்.

காலையில் நிகழ்ந்தவை மீண்டும் மீண்டும் அவள் மனதைச் சுற்றி வட்டமிட்டன.

சோபாவில் அவளின் மடியில் படுத்திருந்த அவனின் தலையை அன்பாகக் கோதியபடியும், முகத்தை ஆதரவாக வருடியபடியும் அவள் அவனுடன் அளவளாவிக் கொண்டிருந்த போது - அவள் பக்கத்திலிருந்த அவளின் போன் மெல்லச் சிணுங்கியது.

அதை எடுத்தவள், "இப்ப வர முடியுமா எனக் கேட்கிறீர்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆங்கிலத்தில் சொன்ன போது, அவள் மடியிலிருந்த அவனது தலை மெதுவாக வலமும் இடமும் ஆடியது. "ஓ ஸொறி, என்னாலை வர ஏலேமாலிருக்குது," - பதிலுக்கு ஆங்கிலத்தில் சொல்லிப்போட்டு போனை வைத்தவள், அவனைப் பார்த்துக் காதலுடன் சிரித்தாள்.

"அது ஓ.'.விஸ், 2 மணித்தியாலம் முந்திவர ஏலுமோ எண்டு கேட்டவை, என்ரை குட்டி தலையை ஆட்டிச்சுது, அதாலை வரேலாது எண்டு சொல்லிப்போட்டன். ஆனா குட்டி... நீங்கள் 12 மணிக்குப் போகோணும் எண்டெல்லோ சொன்னனியள், அப்படியெண்டால் நான் போகலாம்தானே?"

"சீ... 2 மணிக்குப் பிறகு போனால் போதும், ஆனா, நீ போறதெண்டால் போ. நான் இப்பவே போறன்," சொன்னவன், திரும்பி மீண்டும் அவள் மடியில் குப்புறப் படுத்துக் கொண்டான்.

"ம், அப்ப சரி... குட், இனி இரண்டு கிழமைக்குச் சந்திக்கேலாது, வீ கான் என்ஜோய். ஆனா, இண்டைக்குச் சண்டை பிடிக்கக்கூடாது, என்ன....! பிறகு நான் வேலைக்கு போயிருக்கலாமே எண்டு கவலைப்படுவன்... ஏதாவது குடிப்பமா, ரீ போடட்டா"

"இல்லை, எனக்கு இப்ப வேண்டாம்," என்றவன் அவளுடன் சல்லாபிக்க ஆரம்பித்தான். ஆனால், அவளுக்கோ பசி வயிற்றைக் கிள்ளியது. எனவே சற்று நேரத்தில், எனக்குப் பசிக்குது, ரீ குடிச்சுப்போட்டு இருப்பம், என்ன," எனச் சொன்னபடி அவனிடமிருந்து தன்னை மெல்ல அவள் விடுவித்துக் கொண்டாள்.

ரீ குடித்துக் கொண்டிருக்கும் போது அவனின் அக்காவின் மகள் அவனை அழைத்தாள். ஏன் அழைப்பு வந்தது என்பதை விளங்கிக்கொண்டவள், போனில் இருந்தவனுக்கு, தன் கையில் 2 ஐக் காட்டியபடி, '2 மணிக்குப் பிறகு வாறன் எண்டு சொல்லுங்கோ' என வாயாலும் முணுமுணுத்தாள். ஆனா அவனோ, "சரி, 12 மணிக்கு வருவன், ரெடியாக இருங்கோ," என்று சொல்லிபோட்டு போனை வைத்தான்.

"2 மணி வரைக்கும் நீங்கள் நிற்பியள் எண்டு சொன்னதாலை தானே, நான் வேலைக்குப் போகேல்லை. 2 மணி எண்டு சொல்லச்சொல்லி... நான் கை காட்டக்காட்ட நீங்கள்...."

"இல்லை, நான் போகோணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன், என்ன அவசரம்... அப்பவேன் எனக்கு அப்படிச் சொன்னனியள்?"

"நான் அப்படிச் சொல்லேல்லை!"

"வட்... நான் கேட்கேக்கை அப்படிச் சொன்னது உங்களுக்கு நினைவில்லை?

கேட்க முதல் வழமை போல் அவளுக்கு கண் கலங்கியது. குரல் உயர்ந்தது.

"சரி, நான் அப்படிச் சொல்லியிருந்தால் ஸொறி," சொன்னவன் எழுந்து வாஸ்ரூமுக்குப் போனான்.

பிறகு வந்து சோபாவில் இருந்து கொண்டு, "சரி, இப்ப உனக்கு என்ன வேணும்?" என்றபடி அவளைக் கொஞ்ச வந்தான்.

அவளுக்கு மேலும் கண்ணீர் வந்தது.

"உங்களுக்கு என்னைப்பற்றி அக்கறையில்லை. நான் உங்களுக்கு முன்னுரிமை குடுக்கிற மாதிரி நீங்கள் எனக்குத் தாறேல்லை. உங்கடை அக்காவுக்கு நீங்கள் ஒழுங்கான ஆள் எண்டு காட்டுறது தான் உங்களுக்கு முக்கியம்... நான் வேலைக்குப் போகாமலிருக்கிறன்... நீங்கள்..."

அவளின் குரல் உடைந்து, கண்ணீர் ஓடியது.

"ஓம், நீங்கள் சொல்லுறது சரி. அது தான் எனக்கு முக்கியம் .... நான் ஒரு மடையன், எத்தனை வேலையிருக்கேக்கை, நான் இங்கை வந்திருக்கக் கூடாது..."

"ஓ, எனக்கு மட்டும் வேலையில்லையே, நானும் அப்படித் திரும்பச் சொல்லலாம்தானே? இரண்டு கிழமைக்குச் சந்திக்க மாட்டம் எண்டு சண்டை பிடிக்காமலிருக்க வேணுமெண்டு நினைச்சன், ஆனால் ... எப்பவும் இப்படித்தான்".

"ஓம், நான்தான் இப்ப சண்டைபிடிக்கிறன்... நீங்கள், வேலைக்குப் போகாததைப் பற்றித் திரும்பத்திரும்ப பிறகும் சொல்லுவியள், அந்தக் காசை நான் உங்களுக்குத் தாறன்."

"நான் இப்ப காசைப் பற்றிக் கதைக்கேல்லை... அதில்லை விஷயம் ..."

அவள் சொல்லி முடிக்கமுன், முன்னுக்கு இருந்த மேசையின் கண்ணாடியில் ஓங்கிக் கையால் குத்தினான் அவன்.

அந்தக் குத்திலிருந்து அந்தக் கண்ணாடி எப்படியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிவிட்டது. ஆனால்... அது அவளைப் பலமாக அதிர வைத்தது. அத்துடன் அவளின் தந்தையை அவளுக்கு நினைவூட்டவும் அது தவறவில்லை.

சில நிமிடங்களில் ஆசுவாசப்பட்டவன், "சரி, இப்ப என்னைக் கொஞ்சு" எனக் கேட்டபடி அவளைக் கொஞ்சினான்.

வழமையில், பொதுவாக மனஸ்தாபம் வரும் போது, "என்னைத் தொடாதே" என்பவன், "நான் இப்ப போகவேணும்" என உடனே வெளிக்கிடுபவன்.... இன்றைக்கு ஏனோ கொஞ்சம் மாறாக இருந்தான்.

அது அவளுக்கு கொஞ்சம் ஒத்தடமாக இருந்தது. இருந்தாலும் அவன் மேசையில் அடித்த அடி அவளின் இதயத்தில் ஏற்படுத்திய காயம் ரணமாக இருந்தது.

"அம்மாட்டைப் போறதுக்கு முதல், உங்களை... இப்படிக் கோபத்தோடை பிரிய எனக்கு விருப்பமில்லை. பிறகு அங்கை, எனக்கு இதுதான் ஒரே நினைவாயிருக்கும்.... அதாலை உங்களை ஒண்டு கேட்கலாமோ?... இரவைக்கு வேலையாலை வரேக்கை கோல் பண்ணுறன். ஒருக்கா வந்திட்டுப் போவியளோ?"

"நெடுக வெளிக்கிட்டுவர, என்ரை வீட்டிலை என்ன நினைப்பினம்..."

"அப்ப, உங்களுக்கு விருப்பமில்லை"

"சரி, கோல் பண்ணு"

அப்படிக் கதைத்ததன் முடிவாகத்தான் அவள் அழைத்திருந்தாள். ஆனால் அவன் அங்கு வரத் தேவையில்லை என்று சொல்லத்தான் அழைத்தாள்.

வேலை முடிய நேரமெடுத்து விட்டதால் அவன் வந்தாலும் பின்னர் நேரம் போட்டுது என ஒரு மணித்தியாலம் கூட நிற்க மாட்டான் என்பதை விட கண்ணாடியை உடைக்கத் தவறினாலும் அவனின் கைமுட்டி அவளின் மனதைப் பலமாகவே உடைத்திருந்ததுதான் அதற்குக் காரணமாகவிருந்தது. அன்று ஒரு நாள், கோவத்தோடை போகாதேயுங்கோ என அவள் கெஞ்சிய போது, முன்நின்ற அவளைக் கோபத்துடன் தள்ளினான். இன்று இப்படி...

அன்பிருக்கிற இடத்திலை எதையும் எப்படியும் சொல்லலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார்களே. அப்படியென்றால் எங்களிடையே அன்பில்லையா? ஏன் இப்படி எடுத்ததெற்கெல்லாம் நாங்கள் சண்டை பிடிக்கிறம்? என அவள் மனசு கதறியது.

ஒரு பிரச்சனை நடந்தால் அதை அவன் கன நாளைக்கு வைத்துப் பிசைவான், கதைக்க மாட்டான், போதாதற்கு இந்த உறவை விட்டுவிடுவோம் என்பான், கெஞ்சினால், செருப்பாலை அடித்துப் போட்டு குடை பிடிப்பதாகக் குற்றம் சாட்டுவான், அப்படி எல்லாம் அதீதமாகவே கதைப்பான்.

இது தான் இப்ப கனநாளாக நடக்குது. நினைத்த போது அவளுக்கு சோகம் இன்னும் அதிகமானது.

இப்படியான ஒரு சம்பவத்தை நண்பன் ஒருவனிடம் சொல்லி, அதை ஆணின் பார்வையில் புரிவதற்கு அவள் ஒரு முறை முயன்றபோது, "உனக்கும் உன் உணர்ச்சிகளுக்கும் மரியாதை தராத ஒரு உறவை நீ ஏன் நாடுகிறாய்? அன்பு இருந்தால் தேடல் இருக்கும், இப்படிக் கோவம் சாதிக்க முடியாது," என அந்த நண்பன் அவளுக்குச் சொன்ன அந்த அறிவுரை அவளுக்குப் புரிதலுக்குப் பதில் மிகுந்த குழப்பத்தையே கொடுத்திருக்கிறது.

வீட்டுக்குப் போவதற்கு எடுத்த அந்த அரை மணி நேரத்திலும் அவனின் அழைப்பு வராத போதும்கூட கென்னடியில் காரைத் திருப்பியபோது, ஏற்கனவே வந்து எனக்கு ஆச்சரியம் தரக் காத்துக்கொண்டிருப்பானோ? என மனதில் வழமைபோல ஒரு நப்பாசை எட்டிப்பார்த்தது.

அந்த நொடியில், மனதில் அதுவரை இருந்த வைராக்கியம் எங்கோ போய் மறைய, அவளின் உடலின் ஒவ்வொரு நாடி, நரம்பும் அவனுக்காகத் துடித்தன. வீட்டின் முன்னிருந்த வாகனத்தரிப்பிடத்தின் ஒவ்வொரு மூலையாக அவளது கண்கள் அவனது அந்தக் கறுப்புக் கொண்டாவைத் தேடின.

ஆனால், வீட்டுக்குள் போய், பதினைந்து நிமிடங்களான பின்பும்கூட எந்தத் தகவலும் வரவில்லை. 'சம்பவம் நடந்த விதம் மனதைப் பாதிச்சிட்டுதாக்கும் சாப்பாடு வாங்கிக்கொண்டு வரப் போறானோ'- அவளின் மனசு காரணம் தேடி... பலவிதமாகக் கற்பனை செய்தது.

அந்தக் கற்பனைகளும் அவன் மேல் அவள் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமும் அவள் மனசை மீண்டும் அவனுக்காக உருக வைத்தன.

அவன் வந்ததும், அவனை இறுகக் கட்டிப்பிடித்து, "ஐ லவ் யூ டார்லிங்!" எண்டு சொல்லவேண்டும் என வாசல் மணி எப்ப ஒலிக்கும் எனக் காத்திருந்தாள். அத்துடன் அடிக்கடி தனது போனையும் பார்த்துக் கொண்டாள்.

முடிவில் அடுத்த அரை மணி நேரத்தின் பின் ஒரு ஈமெயில் வந்தது, "ஸொறி, அதிகம் எக்ஸ்சசைஸ் செய்து உடம்பைக் காயப்படுத்திப் போட்டன். வர முடியவில்லை."

மனசில் கட்டிய கோட்டைகள் எல்லாம் சுக்கு நூறாக உடைந்து அவள் மனதில் அவை இரத்தக் காயத்தை ஏற்படுத்தின.

'சரி, அதைக் கோல் பண்ணிச் சொல்லியிருக்கக் கூடாதா? அப்படியெண்டால் - அவளின் உணர்ச்சிகளைப் பற்றி அவனுக்கு எந்த அக்கறையுமில்லை' என்பது அவள் மனதில் உறைத்த போது... கோபத்துக்கு மேலாக மேலும் தான் வலிய வலிய இனியும் போய்க் காயப்படப் போவதில்லை என்ற ஆக்கிரோஷமே இப்போது அவள் மனதில் துளிர்விட்டது.

**எதுவரை** 2013 மே , **தூறல்** 2013 ஏப்ரல்-யூன்
**இசையும் கதையும் - லண்டன் அகரம் வானொலி** 2013 ஏப்ரல்

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# இப்போதில்லை

"அம்மா, போட்டுவாறன்!" மதுவின் துள்ளல் நடையும், உற்சாகமான குரலும் தந்த இதமான வருடலை மேவி நின்ற அந்த இனம் புரியாத ஆதங்கம் மீண்டும் என் கண்களை நனைக்கிறது.

'அச்சத்துக்குள் இருந்துதான் துணிவைப் பெற வேண்டும், துக்கத்துக்குள் இருந்துதான் மகிழ்வைத் தேட வேண்டும்.' பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணனின் வார்த்தைகளைத் திரும்பவும் திரும்பவும் மனதுக்குள் வரித்துக் கொள்ள முயற்சிக்கிறேன். இருந்தாலும், இழந்துவிட்டவைதான் எத்தனை எத்தனை என்ற பெருமூச்சுத்தான் என்னையும் மீறி எனக்குள் எழுந்துகொள்கிறது.

இலை தெரியாதளவுக்கு பழங்களால் நிரம்பிப்போயிருந்த கறுத்தக்கொழும்பான் மாமரத்தின் கீழ் சாய்மனைக் கதிரை ஒன்றில் சாய்ந்திருந்தபடி எனக்குள் நானே தொலைந்து போயிருந்த என்னை நிஜத்துக்கு அழைக்கின்றது மாமியின் குரல்.

"இருபது வருஷமா இந்த மரம் இப்படித்தானே காய்ச்சுக் கொட்டியிருக்கும், சாப்பிடத்தான் ஆரும் இருந்திருக்க மாட்டினம்... எப்பிடியோ, உயிரோடை திரும்பி வாறதுக்கு எங்களுக்கொரு கொடுப்பனவு இருந்திருக்கு... ஆனா, பாவம், எத்தனை சனம் செத்துப்போச்சுது, சொல்லுபாப்பம். அதை விட, கால், கை இல்லாமல் இருக்கிறவையின்ரைபாடு மிகப் பெரிய கொடுமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத்தையும் நீங்களும் வன்னியிலை பாத்திருப்பியள், என்ன?... சின்னம்மா அக்காவின்ரை வளவுக்கை இருந்து ஆமி இன்னும் எழும்பேல்லையாம். என்னவோ, நீங்க இங்கை வரேக்கை. நாங்கள் எங்கடை வீட்டிலை இருக்கிறம் எண்டதிலை எனக்குச் சந்தோஷம் பிள்ளை."

மாமிக்கென ஒரு வாழ்க்கையில்லை, எங்களுடைய குடும்பத்துள்ளேயே அவவின் வாழ்க்கையும் அடங்கிவிட்டது. தனக்கென உறவுகளில்லாத மாமியை நாங்கள் எப்போதும் கவனமாகப் பராமரிக்க வேண்டுமென ராம் அடிக்கடி சொல்வார்.

மாமரத்தின் கிளைகளிடையே ராமின் அந்தக் களைததும்பும், கனிவான, வட்ட முகம் சிரித்தபடி என்னை எட்டிப்பார்ப்பது போன்ற ஒரு பிரமையில் என் மனம் கனத்தது.

அன்றும் இப்படித்தான், இந்த மரத்தின்கீழ், இப்படியொரு சாய்மனைக் கதிரையிலிருந்து காற்று வாங்கிக்கொண்டிருக்கிறேன். என் பக்கத்தில் வந்தமர்ந்த ராம், "கவி, நான் உனக்கு ஒரு குட் நியூஸ் சொல்லோணும். இந்த மரத்தை நாங்கள் தறிக்கத் தேவையில்லை. இதை எங்கடை வீட்டின்ரை ஒரு பகுதியாக வைச்சுக்கொண்டு வீடு கட்டுறதுக்கு ஒரு வழியிருக்காம்," என்கிறார்.

"உண்மையாவோ சொல்றீங்க, அப்பிடி என்னெண்டு கட்டுறது," என்னுடைய குரலில் ஆர்வமும் துடிப்பும் பீறிடுகின்றன. ராமின் கையை மிகுந்த காதலுடனும் நன்றியுடனும் பற்றிக்கொள்கிறேன்.

"ஓம், இஞ்சினியர் நாதனோடை நேற்றுக் கதைச்சனான். அப்பிடிச் செய்தமெண்டால் வீட்டுக்கை வெக்கையாயும் இருக்காது. அதோடை இந்த கறுத்தக் கொழும்பானிலை உனக்கு உயிரெண்டு எனக்குத் தெரியும்தானே!"

என்னைப் பற்றிய பெருமைகளைப் பேசுவதில் என்றுமே சலிப்படையாத மாமி, பழமரங்கள் காய்க்கிறதைத் தூண்டுறதுக்கான வழி, அவற்றின் இனப்பெருக்கச் செயற்பாட்டைத் தூண்டுவதுதான் என பத்தாம் வகுப்பு உயிரியலில் படித்ததை முயற்சி செய்வதற்காக, மரப்பட்டைக்கு அண்மையா இருக்கிற உரியத்தைப் பட்டைகளாக வெட்டி, கீழே கடத்தப்படும் உணவைத் தடுத்துப் பூக்கக் தூண்டி, காய்க்காமலிருந்த அந்தக் கறுத்தக்கொழும்பானை நான்தான் காய்க்கப் பண்ணினது என்று எனது வெற்றியை ராமுக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் சொல்லியிருந்தா.

ராமுக்கு என்னுடைய ஆசைகளை நிறைவேற்றுவதில் எப்போதும் ஒரு தனித் திருப்தி இருந்தது.

அந்தச் சதுரக் காணியை இரண்டாகப் பிரித்து, இரண்டு பொம்பிளைப் பிள்ளையளுக்கும் வீடு கட்டுவதற்கென இடத்தை ஒதுக்கிவிட்டு, மீதி வளவிலை இன்னோரன்ன மரங்களை வைத்து, அதைச் சோலையாக்கினாராம் அப்பா. வேலியோரங்களில் தென்னம்பிள்ளைகள், நடுவிலிருந்த கிணற்றடியைச் சூழ வாழையும் கமுகும், அப்பால் மாதுளை, தோடை, தேசிக்காய், பலா, வீடுகளுக்கு முன்னால் மாமரங்கள் என ஒவ்வொன்றாக யோசித்து யோசித்து நடுவித்தாராம். இப்படி அவர் அழகாக வகுத்த திட்டத்தை மூன்றாவதாகப் பிறந்த நான் குழப்பிப்போட்டன். எனக்கும் அதற்குள் ஒரு வீடு கட்டவேண்டுமென்ற நிர்ப்பந்தம், கறுத்தக்கொழும்பானும் அம்பலவியும் செழித்து நின்ற முன் துண்டுக்குக் காணியைத்தான் எனக்காக்கியது.

அந்த விடுமுறைதான் ராமுடன் நான் ஊரிலை கழித்த கடைசி விடுமுறை. உள்நாட்டுப் பிரச்சினைகள் பூதாகாரமாக வெடித்தபோது, உயிர்களைப் பலியெடுத்தல், உடமைகளுக்குச் சேதம் விளைவித்தல் என அந்த வன்முறைச் செயல்கள் யாவும் உச்சக்கட்டம் ஒன்றை அடைந்த நேரத்தில், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பாவித்து, கனடாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்தில், நாட்டுப் பிரச்சினைகளில் இருந்து தப்பிவிட்டோம் என நாங்கள் ஆறுதல்பட்டோம். ஆனால், அதுவும் ஒரு வகையில் ஆப்பாகலாம் என எனக்கு அந்த நேரம் புரியவில்லை.

மேவ முடியாத வேதனைகளை, சோகங்களைத் தந்து விதி என்னை வஞ்சித்த போதும்கூட, எழுந்து நின்று வலிக்கும் வடுவுக்கும் ஒத்தடம் கொடுத்துப் போராடத் துணிந்த, என்னை மிகவும் பாதித்த அந்த நாள், மிகத் துல்லியமாகவும் ஆழமாகவும் என் மூளையில் செதுக்கப்பட்டிருக்கிறது.

பெயர்தெரியாத இலக்கத்திலிருந்து திரும்பத்திரும்ப வந்த அந்தத் தொலைபேசி அழைப்பு, களைத்திருந்த என் உடலுக்கும் மனதுக்குமான என்னுடைய நித்திரைக் குழப்பிக் கொண்டிருந்தது. முடிவில் எரிச்சலுடன் போனை எடுக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிக் கிட்ஸ் ஹொஸ்பிற்றலிருந்து கதைக்கின்றோம்."

அவ்வளவுதான், ஒரு செக்கன் என்னுடைய இதயம் துடிக்க மறந்தது. எப்படிக் கட்டிலை விட்டெழுந்தேன், எவ்வாறு ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தேன் என்பது எனக்கே தெரியாது.

மது, தன்னைத் துன்புறுத்துவதற்காக, தன்னுடைய கையை வெட்டியிருக்கிறாள், அதனால் அவசரச்சிகிச்சைக்காக பாடசாலை அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருக்கிறது என்பதை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. என்னுடைய தலை கிறுகிறுத்தது, மனம் கிலேசமடைந்தது.

ஆஸ்பத்திரியில் சுவரை வெறித்தபடி மது படுத்திருந்தாள். அவளின் மணிக்கட்டில் பெரியதொரு கட்டுப் போடப்பட்டிருந்தது. எதை, எப்படி மதுவுடன் கதைப்பது என்றே எனக்குப் புரியவில்லை. திடீரென அவள் என்னை விட்டு வெகு தூரம் சென்றது போலவும், என்னுடைய உலகம் என் கண் முன்னாலேயே வெடித்துப் பிளப்பது போலவும் எனக்குக் கிலேசமாக இருந்தது, கேவிக் கேவி அழுதேன் நான். அது அவளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. எதற்காக நான் அழுகிறேன் என்றும், அது தன்னுடைய பிரச்சினையே அன்றி என்னுடையதில்லை என்றும் என்னை அவள் வைதாள்.

நர்ஸ் ஒருவர் வந்து டொக்டர் சில நிமிடங்களில் என்னைச் சந்திப்பார் எனச் சொல்லிவிட்டுச் சென்றார். அந்தச் சில நிமிடக் காத்திருப்பு எனக்குச் சில யுகங்களைக் கடப்பது போல மிகக் கஷ்டமாகவிருந்தது.

முடிவில், உளவியலாளர் ஒருவரும், சமூக சேவகர் ஒருவரும் என்னையும் மதுவையும் ஒரு தனியறைக்குக் கூட்டிச் சென்றார்கள்.

ஏன் மது அப்படிச் செய்தவ எண்டு எனக்குத் தெரியுமா, அப்படி நடக்கப் போகுதெனக் காட்டும் ஏதாவது அறிகுறிகளை நான் பார்த்தேனா, மதுவுடன் எப்படி நான் நேரத்தைச் செலவழிக்கிறேன், மதுவின் அன்ரி, மதுவின் மனதை நோகச் செய்யக்கூடிய விஷயங்கள் கதைப்பதை எப்படி நான் தடுக்கலாம் என அவர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்ட பின்னர், முதல் நாள் இரவு அக்கா வீட்டுப் பார்ட்டிக்குப் போனபோது அங்கு நடந்தவைகள்தான் மது தன்னைத் தானே வெட்டுறதுக்குக் காரணமென அறிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா, தன்ரை உடம்பைக் கவனிக்காம இருந்ததாலைதான் ஹாட் அற்றாக் வந்து, இளம்வயசிலையே போட்டார், நீயும் அப்படி இருக்காதை, எக்சைசஸ்க்குப் போ என அக்கா சொல்ல, பக்கத்திலை இருந்த என்ரை அன்ரி ஒருவர், உன்ரை அம்மா படுகிற கஷ்டம் உனக்குத் தெரியாதா, நீயும் அவவுக்கு ஒரு பிரச்சினையாய் இருக்காதே என ஏசினாவாம்.

அவை மதுவின் நன்மைக்காகத்தானே சொல்லப்பட்டவை, அதற்காகத் தன்னைத் தானே யாராவது காயப்படுத்துவார்களா? எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

"அதிகரித்த உடல்பருமனின் விளைவிலான ஆரோக்கியப் பிரச்சினைகள் ராமின் உயிரைப் பலிகொண்டதாலை, மதுவுக்கும் அந்தப் பிரச்சினை வந்திடுமோ என அக்கா பயப்படுகிறா. இலங்கையிலை நான் ரீச்சர் வேலை பார்த்தனான், ஆனா, இங்கை ஃபக்ரறியிலைதான் வேலைசெய்யிறன். அப்படி நான் தனியக் கஷ்டப்படுறது அன்ரியவைக்குக் கவலையாயிருக்கு. அதுதான் அவை அப்படி மதுவோடை கதைச்சிருக்கினம்." எனக்குத் தெரிந்த இங்கிலிசிலை அதை நான் அவர்களுக்கு விளங்கப்படுத்த முயற்சிக்கிறேன். எங்களுடைய கலாசாரக் கூறுகளை அவர்கள் விளங்கும்வகையில் எப்படிக் கூறுவது என எனக்குத் தெரியவில்லை. என் நாக்குக் குளறுகிறது, கண்ணீர் கரைபுரண்டு ஓடுகின்றது.

ஒரு ரிஷூப் பெட்டியை எடுத்து என்னிடம் நீட்டியபடி, "மது இந்த விஷயங்கள் உங்களைக் கஷ்டப்படுத்துவது பற்றி, பள்ளிக்கூடத்திலை நடக்கிற bullying பற்றியெல்லாம் நீங்க உங்கடை அம்மாவுக்குச் சொல்லியிருக்கிறீங்களா?" என்கிறார் அந்த உளவியலாளர்.

"என்ரை பிரச்சினைகளைப் பற்றி நான் அம்மாவோடை கதைக்கேலாது. மற்றவை ஏன் அப்படிச் செய்யினம் எண்டு விளங்கப்படுத்திறதிலைதான் அவ எப்பவும் குறியாயிருப்பா. போதாதுக்குப் பொசிற்றாவா நினை, பொசிற்றாவா நினை எண்டு சும்மா அட்வைஸ்தான் பண்ணுவா. அவவுக்கு என்ரை உணர்ச்சிகள் ஒண்டும் விளங்கிறதில்லை!"

"என்ரை புருஷன் போனாப்போலை இரண்டு பிள்ளையளையும் நான் தனியத்தான் வளர்த்தனான், பெருமை பாக்காமல் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை எண்டாலும் செய்வம் எண்டு செய்கிறன். நடந்ததையே நினைச்சுக்கொண்டு கவலைப்பட்டால் என்ன ஆகப் போகுது? அதுதான் பிரச்சினையளை விட்டிட்டு நல்லதை நினை, ஒழுங்காய்ப்படி, மனசை வேறை திசையிலை மாத்து எண்டு புத்திமதி சொல்லுறனான். அது அவவுக்குப் பிடிக்கிறதில்லை."

"நீங்க மதுவின்ரை உணர்ச்சிகளை முதலிலை புரிந்துகொள்ள வேணும், மிசிஸ் ராம். அவற்றை ஏற்றுக்கொள்ள வேணும். அதுதான் மதுவுக்கு முக்கியம்! மது, நீங்க உங்கடை அம்மாவோடை எப்படியெல்லாம் நேரத்தைச் செலவழிப்பீங்கள்?"

தோளைக் குலுக்குகிறாள் மது. "அம்மாவுக்கு ஒண்டுக்கும் நேரமில்லை. வேலைக்குப் போவா. பிறகு வீட்டுக்கு வந்தால், சமைச்சுப் போட்டு, ரிவிலைதான் இருப்பா."

"என்ரை களைப்புக்கு ஆசுவாசமாத்தான் நான் ரிவி பாக்கிறனான். ஆனால், அவ தான் கதைக்கப் போறன் எண்டு சொன்னால் நான் சந்தோஷமாய்க் கதைப்பன்தானே. அறைக்கே நாயைக் கொண்டுவர வேண்டாம் எண்டு எவ்வளவு சொன்னாலும் அவ கேட்க மாட்டா, நாயோடைதான் உள்ளுக்கை வருவா. அதாலை எனக்கு உடனை கோவம் வந்திடும். நாயை விட்டிட்டு வா எண்டால் பிறகு வர மாட்டா. பிறகு நானாகப் போய் ஏதாவது கேட்டாலும் கதைக்கமாட்டா. பள்ளிக்கூடத்தாலை வந்தவுடனை பிள்ளையள் ரண்டு பேரும் தங்கடை அறையளுக்கே போயிடுவினம், கூப்பிட்டாலும் வராயினம். சாப்பாட்டைக்கூட அறைக்கே வைச்சுத்தான் சாப்பிடுவினம், அப்ப நான் என்ன செய்யிறது. அதாலைதான் ரிவி பாக்கிறனான்."

"அம்மாவுக்கு வீட்டுவேலையிலை உதவி செய்கிறனீங்களா, மது?"

"எனக்கு எப்பவும் நிறைய ஹோம்வேர்க் இருக்கும்..."

மாறி மாறிக் கதைத்ததன் முடிவில் விரக்திதான் எனக்கு மிஞ்சியது. அவளுடைய டிப்பிறசனுக்குச் சிகிச்சை பெறவென அங்கே முதலில் போனபோது, அவர்கள் என்னவெல்லாம் சொன்னார்களோ அதன்படியெல்லாம் நான் செய்திருக்கிறேன். மதுவுக்குப் பிடிக்காது என்பதால் குடும்பப் பார்டிகள் தவிர்ந்தவைக்குப் போவதைத் தவிர்த்துக் கொண்டேன். சில விடயங்கள் மதுவுடன் சம்பந்தப்படுகின்றது என்பதற்காக, என் பிரச்சினைகளை அக்காவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனில் சொல்லி ஆறுதல் பெறுவதை நிறுத்திக் கொண்டேன். முடிந்த வரையில், மது விரும்பியதெல்லாம் செய்தேன். ஆனாலும், மது என்னை விட்டுத் தூரப் போய்க்கொண்டே இருந்தாள்.

அன்றைய அந்தச் சம்பவத்தின்பின், தொலைபேசி மணி ஒலித்தாலே, என்னவோ ஏதோ எண்டு எனக்கு ஒரே பயமாக இருக்கும். வீட்டுக்கு மது வந்துசேரும் வரையில் கையும் ஓடாது, காலும் ஓடாது. ஏதாவது செய்துவிடுவாளோ என ஏக்கமாக இருக்கும். தற்கொலை செய்திட்டால் அல்லது போதைமருந்துக்குத் தஞ்சமடைந்திட்டால், பிறகு என்ன செய்வது என ஒரே யோசனையாக இருக்கும். அதனால் அவள் மனம் நோகாமல் இருக்கவேண்டும் என மிகுந்த பிரயத்தனம் செய்தேன். எதிலாவது முரண்பட்டால் வாக்குவாதம் வந்துவிடுமோ எனப் பயப்பட்டேன்.

நாளாக நாளாக, என் மேல் எனக்கு மிகுந்த கழிவிரக்கம் தோன்றியது. ராமினை இழந்த சோகத்தால் நான் நல்லதொரு தாயாக இருப்பதைத் தவற விட்டுவிட்டேனா, ராமுக்கான மதுவின் ஏக்கம் அவளை டிப்பிரசனுக்குள் தள்ளியிருக்கிறதா, அந்த நேரத்தில் குழந்தை விதுவுடன் அதிக நேரம் செலவழிக்க வேண்டியிருந்ததால், மதுவிடம் ஒரு அக்கா என்ற முதிர்ச்சியை எதிர்பார்த்து மனஅழுத்தத்தை அவளுக்குக் கொடுத்து விட்டேனா, என் கவலைகளில் அமிழ்ந்து என் மகளை நான் இழந்திட்டேனா என என் மனதில் எழுந்த கேள்விகளுக்கெல்லாம் பொருள் தேடித் தேடி மனம் நொந்தேன். ஆனால், எனக்கான கவுன்சலிங்குக்கு போக நேரமோ, பணமோ என்னிடம் இருக்கவில்லை.

கனடாவிலை வாழ்க்கையை நிலைப்படுத்த முன்பாகவே ராமுக்கு அது முடிந்து போயிருந்தது. மூன்று வயது மதுவையும், ஆறு மாதக் குழந்தை விதுவையும் விட்டிட்டு, ராம் ஹார்ட் அற்றாக்குப் பலியான போது, எனக்கு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமாதிரி இருந்தது. இருந்தாலும், பிள்ளைகளுக்காக வாழ்க்கையை ஓட்டியே ஆக வேண்டும் என்றான நிலைமையில், என்னை நானே தூக்கி நிறுத்தினேன்.

அந்தப் போராட்டத்தில் எங்களுடைய உலகங்கள் எங்களுக்குத் தெரியாமலேயே ஒன்றிலிருந்து மற்றது மிகவும் விலகி, ஒவ்வொன்றும் தனித்துப் போயினவா என மனம் தினமும் ஓலமிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கு மட்டுமான கதைகள், ஒட்டுதலற்ற உறவு என கயிற்றில் நடப்பது போல வாழ்ந்துகொண்டிருந்த பொழுதில், எதை எப்படித் தொலைத்தோம், மீள எப்படிப் பெறுவது எனத் தெரியாமல் தேடிக்கொண்டிருந்த நேரத்தில், ஒரு நாள், ஒரு வால்வெள்ளி போல என்னுடைய இரண்டாவது அக்கா கலா இலங்கையிலிருந்து கனடாவுக்கு வந்தாள்.

வந்ததும் வராததுமாக, வீட்டில் சில மாற்றங்கள் நடக்க வேண்டுமென்பதில் அவள் மிக உறுதியாக இருந்தாள். ஏன் ஆளுக்கு ஒரு ரிவி என அதைத் தடுத்தாள். மதுவினதும் விதுவினதும் எந்த எதிர்ப்பும் அவளிடம் செல்லுபடியாகவில்லை. உணவு நேரங்களில் சாப்பாட்டு மேசையில்தான் சாப்பிட வேணும் எனப் பிடிவாதமாக எல்லோரையும் அழைத்தாள். சேர்ந்திருக்கும் போதெல்லாம், யுத்தத்தின் பாதிப்புகளை மிக இயல்பாக விபரித்தாள். உனக்குக் கீழே உள்ளவர் கோடி, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு என்று அப்பா சொல்வதை நான் சொல்ல முயன்ற போது என்னில் ஆத்திரம் அடைந்த மதுவுக்கு, நாட்டில் நிகழ்ந்த அனர்த்தங்களை அனுபவித்த கலா சொன்னவை மனதைத் தொட்டன. ஒரு தடவை இலங்கைக்கு வாங்களேன் என கலா கேட்டதைத் தொடர்ந்து, அது மதுவுக்கும் ஒரு மாற்றமாக இருக்கும் என அவளின் உளவியலாளரும், ரீச்சரும் ஆலோசனை சொன்னதன் விளைவு, இப்படியொரு நல்ல மாற்றத்தைச் சுலபமாகக் கொண்டுவரும் என நான் எதிர்பார்க்கவேயில்லை.

வன்னியில் தொடங்கி யாழ்ப்பாணம் ஈறாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைகள், பெண்கள், வயோதிபர் என உதவிசெய்ததும், அவர்களின் கதைகளைக் கேட்டதும், போரின் அனர்த்தங்களின் சாட்சியங்களை நேரில் பார்த்ததும், மதுவை நிறையவே பாதித்திருந்தன. அது என்னோடு அவளை மனதார ஒட்டவும், தன்னைப் பற்றிக் கவலைப்படுவதைக் குறைக்கவும் செய்தது.

நின்று நிதானிக்க அவகாசமற்ற எங்களுடைய வெளிநாட்டு வாழ்க்கையில், வேதனைகள், இழப்புகள் வரும்போது அவை பெருப்பிக்கப்படுகின்றன என்பது அப்போதுதான் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. இங்கிருந்திருந்தால் எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு வாழ்க்கை எங்களிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிக்கப்பட்டிருக்கின்றது என்ற நிதர்சனத்தில் தாங்கொண வேதனை ஏற்பட்டது. போரிலிருந்து வெகுதூரம் சென்று எங்களுடைய உயிர்களைத் தக்கவைத்து விட்டோமே தவிர, அதன் கொடூரத்தின் மிச்ச சொச்சங்கள், எங்களிலும் அதன் அழுத்தத்தைச் சுமத்தத் தவறவில்லை என்ற யதார்த்தத்தில் மனம் விம்மியது. ஆயுதங்க ளிலிருந்தும் ஆயுததாரிகளிடமிருந்தும் தப்பி ஓடிய நாங்கள், இன்னொரு அகழியினுள் அமிழ்ந்திருக்கின்றோம். அதற்குள் இருந்து வெளியேறக்கூடிய திறன் இருக்காததால், அதன் பின்விளைவாக உடல்நோய்களையும் மனநோய்களையும்தான் பெற்றிருக்கிறோம் என்பதில் இதயம் மிகவும் வலித்தது.

இனி மீண்டும் அங்கு போன பின், இந்த நெருக்கம் நிலைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்ற நினைவு எட்டிப்பார்க்கும் போதெல்லாம் பெருமூச்சு விடுவதைத் தவிர வேறெதுவும் தோன்றவில்லை.

**மல்லிகை பொன்விழா மலர்** - 2018,
**கூர்** - 2018

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு ஒன்று
# பார்வைகள் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# பச்சை மிளகாய்

எவரும் என்னை இலகுவில் கவர்வதில்லை, ஆனால், உங்களுடைய அமைதியான சுபாவமும், அன்பான வார்த்தைகளும் என்னை மிகவும் வசப்படுத்தியிருந்தன. அதனால், எனது எழுத்தைப் பாராட்டி, அதை மெருகுபடுத்துவதற்குச் சில புத்தகங்களைக் கொடுத்து உதவ விரும்புவதாக நீங்கள் சொன்னபோது, நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

கோடை காலத்தின் ஒரு மாலை நேரம் அது. அன்றுதான் ரொறன்ரோவும் மார்க்கமும் சந்திக்கும் சந்திப்பிலிருந்த உங்களுடைய வீட்டுக்கு நான் வருகின்றேன். ரெலிபோனிலும் ஈ-மெயிலிலும், இரண்டு வாரங்கள் மட்டுமே நாங்கள் பேசிப் பழகியிருந்தாலும்கூட, ஏதோ நீண்ட காலமாக உங்களை நான் அறிந்திருப்பது போல் என் மனதில் ஒரு பிரமை. நீங்கள் தேடிக்கொண்டிருந்த இரக்கத்தையும் பாசத்தையும் அக்கறையையும் என்னில் பார்த்தது, உங்களுக்கு ஒரு புத்துணர்வையும் சக்தியையும் அளிப்பதாக நீங்கள் சொன்னபோது, இவ்வளவு இனிமையான உங்களை இரண்டு வருடங்களுக்கு முன்பு, அதுவும் உங்களுக்கு மாரடைப்பு வந்திருந்த நேரத்தில் விவாகரத்துச் செய்ய உங்களுடைய மனைவியால் எப்படி முடிந்ததென எனக்குப் புரியவேயில்லை.

எங்களைப் பற்றி, எங்களுடைய குடும்பங்களைப் பற்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய சவால்களைப் பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். உங்களுடைய குரல் மிகவும் இனிமையாகவிருந்தது.

மேலும் எவ்வளவு நேரம் தங்கமுடியும் என்று ஆர்வத்துடன் நீங்கள் என்னைக் கேட்ட போது, உடனே போவதற்கு எனக்கும் மனம் இருக்காததால், இன்னும் ஒரு மணி நேரம் இருக்கலாம் என்றேன் நான். உடனே, நீங்கள் எழுந்துசென்று உங்களுடைய அல்பங்களை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் தந்துவிட்டு, எனக்காகச் சமையல் செய்யப்போவதாகவும் அதுவரை அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும்படியும் எனக்குக் கூறினீர்கள். உங்களுடைய கட்டுரைகளும், விமர்சன மதிப்புரைகளும் காலவரிசைப்படி அழகாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்த விதத்தைப் பார்த்து நான் வியந்து போனேன். அதற்கும் மேலாக, நீங்கள் ஒரு ஆண் சமைக்க, நான் ஒரு பெண் அமர்ந்து கதைத்துக் கொண்டிருப்பது எனக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. அனைவரையும் கவர்வதாக நீங்கள் நினைக்கும் உங்களுடைய 6 அடி உயரத்தையும், அழகாக நறுக்கி விடப்பட்டிருந்த உங்களுடைய அந்தக் குறும்தாடியையும்விட உங்களுடைய அந்த அன்பான நடத்தை எனக்கு மிக அழகாகத் தெரிந்தது.

எங்களுக்காக நீங்கள் சமைத்திருந்த அந்த நூடில்ஸ் அதிகளவில் பச்சை மிளகாய்களைக் கொண்டிருந்தது. அந்த மாதிரியான உறைப்பை என்னால் சாப்பிட முடியாதென்பதால், அந்த மிளகாய்களை நான் விலக்கிக்கொண்டிருந்தபோது, சாப்பாடு எனக்குப் பிடிக்கவில்லையோ என நீங்கள் விசனப்பட்டுப் போனீர்கள். சாப்பிடுவதைவிட, உங்களுடனான இருப்பே எனக்குப் பிடித்திருந்தது. உங்களுடன் இயல்பாகக் கதைக்கக் கூடியதாக இருந்தது. முடிவில், உங்களுடைய வீட்டை விட்டு வெளியேறுவதற்கு நான் தயாரான போது, ஒரு ஹக் தர முடியுமா என என்னைக் கேட்டீர்கள். அதை நான் எதிர்பார்க்கவேயில்லை. அந்த ஹக்கின் போது, என்னை அறியாமலேயே உங்களுடைய கன்னத்தில் எனது முத்தம் ஒன்றும் மெதுவாகப் பதிந்து கொள்கின்றது.

மீண்டும் மீண்டும் பல தடவைகள் நாங்கள் சந்திக்கிறோம். ஒரு நாள், உங்களுடைய கன்னத்தில் நான் முத்தமிட்டதை ஞாபகப்படுத்தி, நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மனரீதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி உடல்ரீதியாகவும் வசீகரிக்கப்பட்டிருக்கின்றோம் எனச் சொன்ன நீங்கள் என் முகத்தை உங்கள் கைகளில் ஏந்தி என் கன்னத்தில் முத்தமிட்டீர்கள். அது எனக்குக் கொஞ்சம் அசௌகரியத்தைக் கொடுத்தது. தயக்கத்துடன் அதை நான் உங்களிடம் கூறினேன். அதைக் கேட்ட நீங்கள் சரி, இனி நான் முத்தமிட மாட்டேன் என அமைதியாக கூறிப் பின் நகர்ந்தீர்கள்.

திடீரென எனக்குள் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது, நான் இன்னொருவருடைய மனைவி என்பதையும் மறந்து உங்களை முத்தமிடுகின்றேன். அந்தப் பொழுதில் உங்களுக்குள் என்னை நான் தொலைத்து விட்டேன்... நான் இருந்த இடத்திலிருந்தும், நான் யார் என்பதிலிருந்தும் நான் வெகு தூரம் சென்றிருந்தேன்.

❖❖❖❖

மழை பலமாகப் பொழிகின்றது. கண்ணீர் மல்க எழுந்தமர்கின்றேன். என்னுடைய கனவில் உங்களுடைய நண்பர்களுடன் உங்களைக் கண்டேன். என்னை அசட்டை செய்தபடி நீங்கள் போய்க்கொண்டிருந்தீர்கள். நீங்கள் செய்த செயலால் என்னாலும் உங்களுடன் எதுவும் பேச முடியவில்லை.

எட்டு மாதங்களின் முன்பு என்னுடைய முழு உலகமும் சரிந்து தரைமட்டமானது.

அதிர்ச்சியும் வலியும் கொண்ட அந்தத் தருணங்கள் என்னுடைய நினைவில் மீளவும் மீளவும் சுழல்கின்றன. 'உருமாற்றம்' பற்றி என் மாணவர்களுக்குக் கற்பித்து விட்டு, வருகைப் பதிவேட்டை நிரப்புவதற்காக என் மேசைக்கு வந்த எனக்கு, இனம் தெரியாத ஒரு இலக்கத்திலிருந்து வந்த ஐந்து அழைப்புக்களைத் தவறவிடப்பட்டிருக்கும் செய்தியைச் சத்தமில்லாமல் வைக்கப்பட்டிருந்த என்னுடைய தொலைபேசி காட்டியது. யாராகவிருக்கும் என்ற சிந்தனையைக் குழப்பியது மீண்டும் வந்த அந்த அழைப்பு.

தன்னை ஒரு பொலிஸ் என அடையாளம் காட்டிய அந்த நபர், உங்களை எனக்குத் தெரியுமா எனக் கேட்கின்றார். பின்னர், உங்களையோ அல்லது உங்கள் குடும்பத்தையோ, நானோ அல்லது எனது குடும்பமோ, நேராகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொள்ளக்கூடாது என நீங்கள் என்னிடம் சொல்லும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருப்பதாகக் கூறுகிறார். என்னுடைய காதுகளை என்னால் நம்பவே முடியவில்லை. நீங்களா அப்படிப் புகார் செய்தது என்று திரும்பத் திரும்ப நான் அவரைக் கேட்கின்றேன். என் கண்கள் குளமாகின்றன, என் குரல் பிசிறுகின்றது.

அந்தத் தருணத்தில் என்னை நீங்கள் கொன்றே விட்டீர்கள். நல்லவேளை, அந்தநேரம் நான் கார் ஓடிக்கொண்டிருக்கவில்லை. அப்படி ஓடிக்கொண்டிருந்திருந்தால், என்னுடைய பிள்ளைகள் தங்களுடைய தாயை இழந்திருப்பார்கள்.

இங்கே நான் உங்களை நினைத்து வருந்திக் கொண்டிருக்கின்றேன். ஆனால், நீங்கள், அங்கே, உங்களுடைய பேரர்களுடன் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருக்கலாம். அல்லது உங்களுக்கு மிகவும் பிடித்த ஏதாவதொன்றை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

என்னுடைய ஒவ்வொரு சுவாசத்தையும் நீங்கள் புரிந்துகொண்டதாகச் சொன்னது உண்மையாயின், இவ்வளவுதூரம் என்னை வேதனைப்படுத்த உங்களால் முடிந்திருக்குமா?

கேள்விகள்தான் நிறைந்திருக்கின்றனவே தவிர, எதற்கும் பதிலில்லை.

உங்களுடைய பல்திறமைகளைப் பார்த்துப் பிரமித்தேன், மிகவும் பெருமைப்பட்டேன். உங்களுடைய படைப்புகளை உலகம் முழுவதும் பரப்ப ஆசைப்பட்டேன். ஆனால், சென்ற முறை 'யதார்த்தம்' இதழில் வெளிவந்திருந்த உங்களுடைய கதையைப் பார்த்ததும் என் கைகள் அதைத் தாமாகக் கிழித்தெடுத்தன, இருந்தாலும், வீசியெறிய முடியவில்லை. எனவே, என் கண்களுக்குத் தெரியாமல் இருப்பதற்காக, அலமாரியின் அடியில் தூரமாக வீசினேன்.

❖❖❖❖

ஒரு நாள், "நீ என்னோடை முதன் முதலாகக் கதைச்ச வசனம் என்னவெண்டு உனக்கு நினைவிருக்கா?" என நீங்கள் என்னிடம் கேட்டீர்கள். எனக்கோ அது பற்றி எந்தவித துப்பும் இருக்கவில்லை. என்னுடைய முதலாவது நூல் வெளியீட்டு விழாவுக்கு நீங்கள் வந்திருந்தபோது, "நான் அழைக்காமலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வந்திருக்கிறீர்கள்," என்று சொல்லி நான் உங்களை வரவேற்றதாக எனக்கு நினைவூட்டிய, நீங்கள், "சிலவேளைகளில் எங்களை அறியாமல் நாங்கள் சொல்வதற்கு அர்த்தம் வந்துவிடுகின்றது," என்றீர்கள். இரண்டு வருடங்களின் பின்பும் நான் சொன்னதை அப்படியே நீங்கள் நினைவில் வைத்திருந்ததை பார்த்து நான் அதிசயித்துப் போகின்றேன்.

இன்னொரு நாள், பல்வலியால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த உங்களுக்குக்காகச் சூப் செய்து, அதைக் குழந்தைக்குப் பருக்குவதுபோல நான் பருக்கிய போது, நான் செலுத்தும் அன்பும் கவனிப்பும் போல உங்களுக்கு எங்கும் கிடைக்கவில்லை, உங்களுடைய ஆவி கூட என்னைத்தான் தேடிக்கொண்டிருக்கும் என்றீர்கள். உங்களுடைய கண்ணில் கசிந்த நீரைப் பார்த்து நான் உருகிப் போனேன். ஒவ்வொரு சின்ன விடயத்தையும் ரசிக்கும் உங்களுடன் கதைப்பது, உங்களைக் கவனித்துக்கொள்வது, உங்களுக்கு மசாஜ் செய்வது, உங்களுக்காகச் சமைப்பது யாவுமே எனக்கு மிகவும் பிடித்துப்போகின்றன.

நடுத்தர வயதுவரை, வெறுமனே ஒரு மகளாக, ஒரு சகோதரியாக, ஒரு மனைவியாக, ஒரு தாயாக மட்டுமே இருந்த எனக்கு, ஒரு காதலியாக இருக்கும் சுகம் எப்படியிருக்கும் என்பதை உங்களிடமிருந்தே அறிந்தேன். மொத்தத்தில் உங்களின் காதல் என்னை ஒரு பதின்மவயதுப் பெண்ணாகவே மாற்றியிருந்தது. வாழ்க்கையின் பிற்பகுதியில் ஒருவர் இவ்வளவு ஆழமான காதல் உறவில் விழலாம் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

ஒரு நாள் என் வேலையில் உதவுவதற்காக, வீட்டு வாசலில் பீசாவுடன் வந்து நின்று என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தீர்கள். இன்னொரு நாள் எனக்காகச் சாப்பாடு சமைத்து, அன்புடன் எனக்கு ஊட்டிவிட்டீர்கள். எந்த நிறம் எனக்கு அழகாக இருக்கும் எனப் பார்த்துப் பார்த்து நீங்கள் வாங்கித்தந்த சீலைகளை நான் உடுத்தும்பொழுது எனக்கு எப்பொழுதும் பாராட்டுக்களே கிடைத்தன. இப்படிப் பல விஷயங்களால் என் வாழ்க்கையை நீங்கள் ரம்மியமாக்குகிறீர்கள் என மனதுக்குள் மிக நெகிழ்ந்து போயிருந்தேன்.

சமுதாயத்தில் உங்களுக்கு இருக்கும் அந்தஸ்து உங்களுக்கு முக்கியமானதால் என்னுடன் சேர்ந்து வாழேலாது என நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியது, என் மனதை ரணமாக்கியிருந்தாலும் கூட அதைப்பற்றி உங்களுடன் நான் வாதாடவில்லை. ஏனெனில், நீங்கள்தான் எனக்கு மிக முக்கியமாகத் தெரிந்தது, அத்துடன் உங்களை நான் நம்பினேன். பின்னர் காசுக் கஷ்டத்துக்காகவும் கடமைக்காகவும் உங்கள் மருமகனுடன் வாழச்செல்வதாகக் கூறியபோதுகூட என்னால் உங்களை விளங்கிக்கொள்ள முடிந்தது, உங்களை விட்டுவிலக முடியவில்லை. அதற்காக நீங்கள் சொன்னது போல, உங்களிடமிருந்து கிடைக்கும் இன்பத்துடனும் சுகத்துடனும் சந்தோஷமாக இருக்கவும் என்னால் முடியவில்லை. எங்களைப்பற்றி உலகுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதே என் இலட்சியமாகவிருந்தது.

அதனால், உங்கள் மருமகனுடன் நீங்கள் வாழச் செல்லமுன், என்னுடைய சந்தேகங்கள் பற்றித் திரும்பவும் கேட்டேன். பசித்திருந்தபோது நான்தான் உங்களுக்குச் சாப்பாடு தந்ததாகவும், மனந்தளர்ந்திருந்த போது நான்தான் உங்களுக்கு உறுதுணையாக இருந்ததாகவும் சொல்லி என்னை விட்டுவிட மாட்டீர்கள் என எனக்கு உறுதியளித்தீர்கள். அதுமட்டுமின்றி, உங்கள் மனைவியுடன் இருந்த காலங்களில்கூடப் பல வருடங்களாக தனி வாழ்க்கைதான் வாழ்ந்ததாகவும், என்னில் மிகவும் ஆழமான காதல் வைத்திருப்பதாகவும் கூறினீர்கள்.

இந்த நான்கு வருட வாழ்க்கையையும் எப்படி உங்களால் பொய்யின் மேல் கட்டியெழுப்ப முடிந்தது?

சிலர் உங்களை ஒரு நடிகன் என்றும், வேறு சிலர் உங்களைச் சுயநலவாதி எனவும் சொல்கின்றனர். உங்களுடன் இருந்த அந்த நான்கு வருடங்களில் உங்களைப்பற்றிக் கணிக்க எனக்குத் தெரியவில்லையா என்றுகூட அதிசயிக்கின்றனர். நான் ஒரு வடிகட்டின முட்டாளா, அல்லது நீங்கள் ஒரு சாலச்சிறந்த நடிகரா என்பது எனக்குத் தெரியவில்லை.

எங்கள் உறவைத் வெளிப்படையாக்க விரும்பிய என்னைச் சரியான நேரம் வரும்போது தெரியப்படுத்துவதாகச் சொல்லித் தடுத்த நீங்கள், காதலை மறைக்கேலாது என்றும் என்னைச் சமாதானப்படுத்தினீர்கள். இலவங்காத்த கிளி போல் நானும் காத்திருந்தேன். முடிவில் அது வெளியில் கசிந்தபோது உங்கள் வீட்டில் ஏற்பட்ட பிரச்சினை உங்களைச் சாக வேண்டும் போலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுவதாகச் சொன்னீர்கள். அதனால் நான் உங்களை அடிக்கடி போனிலும் ஈமெயிலிலும் தொடர்புகொண்டபடி இருந்தேன், எனக்கு மிகுந்த பதட்டமாகவும், கவலையாகவும், பயமாகவும் இருந்தது.

எனது அந்தச் செய்கை நான் தொந்தரவு கொடுப்பதாக நீங்கள் பொலிசில் புகார் செய்வதற்கு உங்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கின்றது. ஒரு கோணத்திலிருந்து பார்த்தால், எனக்கான முடிவை நானே தேடியிருக்கிறேன்.

❖❖❖❖

கடைசியில், என்னை உதறி விடுவதுதான் உங்களுடைய அமைதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் எனத் தீர்மானித்தீர்களா? உங்களுக்கும் உங்களுடைய அந்தஸ்துக்கும் முன்னுரிமை கொடுத்தீர்களேயன்றி, எனக்கும் என் உணர்ச்சிகளுக்கும் ஏற்படும் தாக்கம் பற்றி எந்தக் கரிசனையையும் நீங்கள் எடுக்கவில்லையே! உங்களுடைய அன்பான அந்தச் சைகைகள் யாவும் வெறும் வேஷம் தானா?

என் எழுத்துக்களில் கள்ளம் கபடம் இல்லை எனப் பாராட்டினீர்கள் அதுதான் நான். அதைத்தான் நான் உங்களிடமும் எதிர்பார்த்தேன்.

நியாயமற்ற சட்டங்களால் பாதிக்கப்படுவதிலிருந்து தப்பிக்க நாங்கள் இங்கே வந்தோம். இப்ப, அப்பாவி மக்களைப் பாதுகாப்பதற்காக இருக்கும் கனடாச் சட்டத்தை நீங்கள் தவறாகப் பயன்படுத்தி நியாயமற்ற முறையில் என் கைகளைக் கட்டியிருக்கிறீர்கள்.

சில நாட்களில் உங்களை இழந்த வேதனையுடன் எழும்புகின்றேன். சில நாட்களில் மனம் உடைந்தவளாக, பழி வாங்கவேணும் போலத் துடிக்கின்றேன். நீண்ட நாட்களாக நீங்கள் என்னிடம் திரும்பி வந்து ஏன் அப்படிச் செய்தீர்கள் என விளக்குவீர்கள் என ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால், இப்போது உங்களுடைய சுயரூபம் அப்பட்டமாகத் தெரிந்துவிட்டது. சாகும்வரை நீங்கள் என்னிடம் வருவீர்கள் எனச் சொன்னதுடன் திருப்திப்பட்டுக்கொண்டு, வைப்பாட்டியாக மட்டும் இருக்க நான் சம்மதித்திருந்தால் பிரச்சினை இருந்திருக்காது எனப் புரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖❖❖❖

கண்ணுக்குத் தெரியாத பனித்திட்டுகளுடன் வீதி மிகவும் வழுக்கலாக இருக்கின்றது. என் கண்கள் மீண்டும் கலங்குகின்றன. இது என்ன காதலா? உண்மையான காதல் இப்படித் துரோகம் செய்யுமா? சுகம் தருவதற்காக ஒரு உடலுக்கும், அக்கறையும் பாசமும் கொண்ட கவனிப்பைத் தர ஒரு உயிருக்கும் திட்டமிட்டு நீங்கள் வீசிய வலையில் நான் சிக்கியதால் என்னிடம் இருந்தவற்றையும் இழந்துபோய் நிற்கிறேன்.

இத்தனை கேவலமான ஒரு மனிதனையா, இருந்த அத்தனையையும் இழந்து என் உயிருக்கும் மேலாகக் காதலித்தேன் என்ற அருவருப்பே இப்போ எல்லாவற்றையும் மேவி நிற்கின்றது! ஏமாற்றப்பட்டதை எண்ணி நோகவா அல்லது இப்படியாவது தப்பிவிட்டேனே என ஆறவா என எனக்குப் புரியவில்லை.

**"எதுவரை"** - 2016 ஜனவரி
**கதையின் ஆங்கிலவடிவம்**
**Monsoon Journal** - 2015 மே

▶ ▶ ▶

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# நிகண்டுகள் பிழைபடவே

"கார்டியோலொஜிஸ்ட்டைக் கொண்டுபோய் காட்டுறது நல்லதெண்டு இண்டைக்கு மூண்டாம் தரமாய்ச் சொல்லிப்போட்டார், டொக்டர் நாதன். ஆனால், இவர் தனக்கு அது தேவையில்லையாம் எண்டு அடாப்பிடியாய் நிற்கிறார். வருத்தத்துக்கு ஒரு வழிபாக்காமல் அதை அனுபவிக்கப் போறனெண்டு அடம்பிடிக்கிற உந்த ஸ்ரபன்னேஸ்க்கு ஏதாவது செய்யுங்கோ பாப்பம்." எரிச்சலுடன் மகன் சுரேன், மனைவி மல்லிகாவுக்குச் சொல்லிக்கொண்டிருப்பது, மேல்படியினை மெதுவாகத் தாண்டிக் கொண்டிருந்த என் காதுகளிலும் சத்தமாகக் கேட்டது.

பன்னிரெண்டு படியேறியது என்னை மூச்சிரைக்கச்செய்ய அப்படியே பொத்தென்று என்னுடைய சாய்மனைக் கதிரையில் சாய்ந்துகொள்கிறேன் நான்.

"அவளைவிட்டால் வேறை கார்டியோலொஜிஸ்ட் இல்லையே? ஏனப்பா, வேறையொரு டொக்டரிட்டை அனுப்பச்சொல்லி நீங்கள் கேட்டிருக்கலாம்தானே!" ஈரம்சொட்டும் தன்னுடைய நீண்ட தலைமயிரைத் துவாயினால் உலர்த்தியவாறு, என்னைப் பரிதாபமாய்ப் பார்க்கிறாள், மல்லிகா.

"ஏன், அந்தக் கார்டியோலொஜிஸ்ட் சரியில்லையெண்டு உங்களுக்கு ஆராவது சொன்னவையோ, சும்மா ஆக்களின்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையை விட்டிட்டு, ஒருக்கா அவவைப் போய்ப் பாக்கிறதிலை உங்களுக்கென்ன நட்டம் வரப்போகுது?" அவன் குரலில் தொனித்த கோபம், அவன் கண்களிலும் சுவாலையாக மின்னியது.

"சுரேன், உனக்குக் கதை தெரியாது அப்பு... அப்பா ஏன் வேண்டாமெண்டு சொல்லுறார் எண்டது விளங்காமல் சும்மா கதைக்காதை."

"என்ன கதை எனக்குத் தெரியாது?"

"ம்ம்... அந்த... வேசையின்ரை பெட்டைதான் அவள்... தேவையில்லாத பிரச்சினைகள் எல்லாத்தையும் சொல்லி ஏன் வீணா உன்னைக் குழப்புவான் எண்டுதான் நாங்கள் உனக்கு ஒண்டையும் சொல்லேல்லை."

"என்ன...? ஆர் அது, உங்களுக்கு அந்த டொக்கரைத் தெரியுமோ?" புருவத்தை உயர்த்தி அவன் என்னைப் பார்த்தான்.

சுவர்க் கடிகாரத்திலிருந்த குருவிகள் மாலை 6 மணியைக் காட்டக் கீச்சிட்டன.

"அப்பான்ரை இரக்க சுபாவத்தைப் பாவிச்சு உதவியெல்லாம் எடுத்ததும் போதாமல், அப்பாவை மயக்கித் தன்ரை பக்கம் இழுக்கிறதுக்கு அந்தக் கேடுகெட்ட பொம்பிளை... அந்தச் சிறுக்கி ஆடின ஆட்டமொண்டும் உனக்குத் தெரியாது! அவளின்ரை தொல்லையைத் தாங்கேலாமக் கடைசியா நாங்கள் பொலிசிலை முறைப்பாடு செய்துதான் அவளை ஒருமாரி வெட்டினது. அப்பாடா... அதை ஏன் பேசுவான்? தன்ரை பாட்டிலை இருக்கிற அப்பாவுக்கு ஆயிரம் தரம் அவள் போன் பண்ணுவாள், ஈமெயில் போடுவாள். சீ, வெட்கம் கெட்டவள்!, பிள்ளையளுக்குக் கலியாணம் கட்டிக்கொடுக்க வேண்டிய அந்த வயசிலை, தனக்கு ஆம்பிளை தேடி அவள் போட்ட கூத்து... அப்பப்பா."

வீடு முழுக்கத் தூசி நிறைந்து மூச்சுமுட்டியது எனக்கு. என்ரை அறைக்குள் வந்து கட்டிலில் குப்புறப் படுத்துக்கொள்கின்றேன்.

❖❖❖❖

"ஓ, மை கோட், சுப்பரா வாசிச்சிறீங்க, உங்கடை புல்லாங்குழலின்ரை ஓசை மனசை மட்டுமில்லை, அப்படியே உடம்பையும் சில்லிட வைக்குது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கான மருந்துடன் வந்த நேர்ஸ் அனு, என்னை மனதாரப் பாராட்டிய போது, என்னை வருத்தம் பார்க்க வந்திருந்த என் நண்பன் அருள், "இது மட்டுமே, அவர் பாடுறதை நீங்கள் கேட்கவேணும்!", எனத் தன் பங்குக்கு என்னைப் புகழ்கின்றான்.

"றியலி? அமைதியா இருக்கிற உங்களுக்கை இத்தனை விஷயமா? ஒரு நாளைக்கு நீங்கள் எனக்குப் பாடிக்காட்ட வேணும், என்ன!", முகமெல்லாம் மலர்ந்தபடி, கண்கள் மின்ன எனக்கு வேண்டுகோள் விடுக்கின்றாள், அனு.

அப்படி ஆரம்பித்த நட்பு என் பாடலை ரசிப்பதாக, என் கதைகளுக்குப் பின்னூட்டல் தருவதாக, இருவரினதும் மன ஆறுதலுக்கு விடயங்களைப் பகிர்வதாகத் தொடர்ந்து, மனதால் மிக நெருங்குகின்றது.

பொருளாதாரப் பிரச்சினைகள், அது இது என்ற காரணங்களினாலோ அல்லது அவை என்னவென்று தெரியாத பல காரணங்களினாலோ உயிரிழந்துபோன என் தாம்பத்தியத்தினால் எனக்குள் ஏற்பட்டிருந்த வெறுமை இருந்த இடம் தெரியாமல் மறைகிறது.

ஆஸ்பத்திரியிலிருந்து நான் வீட்டுக்கு வந்த பின்பும் எங்களின் சந்திப்புக்கள் தொடர்கின்றன. நித்திரை கொள்ள முடியாதளவுக்கு கை வலிக்குது, மருந்து போட்டுவிடக் கூட ஒரு ஆள் இல்லை, எனக் கதையோடை கதையாய் ஒரு நாள் அவளுக்கு நான் ஈமெயிலில் எழுதுகின்றேன்.

அன்று மாலை கைக்குப் போடுவதற்கு ஒரு மருந்து, மசாஜ் பண்ணுவது போல இறுக்கிப் போடும் ஒரு பண்டேஜ், அமைதியான நித்திரைக்காகப் படுக்கும்போது ஸ்பிறே பண்ணும் ஒரு தைலம் என கைநிறையச் சாமான்களுடன் வந்தவளைப் பார்த்ததும் விக்கித்துப் போகிறேன் நான்.

விடைபெறும் போது அவளைத் தொடர்ந்து வீதிவரை சென்ற நான், ஐ லவ் யூ, என்கிறேன். வயிற்றுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் மிக மிக வேகமாய்ச் சிறகடிக்கின்றன. இதயம் உச்சஸ்தாயில் கீதம் இசைக்கிறது.

பத்து யார் தள்ளி நிறுத்தி வைத்திருந்த கார் வரை எதுவும் பேசாமல் சென்றவள், கார்க் கதவைத் திறந்து அதற்குள் ஏறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, திரும்பி என்னைப் பார்த்து, ஐ லவ் யூ ரூ என்கிறாள். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

கொம்பியூட்டரின் முன்னாள் போய் ஜீரோக்கைத் திறந்து வைத்துக் கொண்டு எப்போது கொம்பியூட்டருக்கு முன்னாள் வருவாள் எனக் காவலிருக்கிறேன். இப்படியாக வேலைக்குப் போகும்போது கோல் பண்ணு, வேலையால் திரும்பி வரும்போது வந்து பார்த்துவிட்டுப் போ என கோரிக்கை வைப்பதும், வருவதற்கு ஒரு மணித்தியாலம் முன்பாகவே வருவதின் பதட்டமும், வந்து போன பின் வந்ததன் ஆனந்தமுமாக மிக அழகாகிப் போன நாட்கள் அவை.

அவள் தந்த அந்த அணைப்பின் சுகத்துடனும், அவளின் வாசத்துடனும் இருப்பதற்காக, போட்டிருந்த சேட்டைக் கூட மாற்றாமல் இருந்த நாட்கள், அவளைக் காணாத போது தலை வாரவோ, சேவ் எடுக்கவோ மனம்வராத பொழுதுகள் எனத் தெவிட்டாத அந்தக் காதலில் திளைத்த நாட்கள் பல.

அவளுக்கும் எனக்கும் தெரிந்த உறவாக இது இருக்கட்டும், எங்களுடைய சந்தோஷம் எங்களுக்குத் தெரிந்ததாக மட்டுமே இருக்கட்டும், வேறு எவருக்குமே தெரியக்கூடாது என எனக்குள் முடிவெடுத்துக் கொள்கிறேன் நான்.

சமூகத்தில் நான் கட்டியெழுப்பியிருந்த நல்ல விம்பம் என நான் நம்பிய அந்த விம்பத்தை அவளுக்காக அல்ல, எதற்காகவும் உடைக்க நான் தயாராகவிருக்கவில்லை. என்னைக் காதலிப்பதுபோல வாழ்க்கையில் தான் யாரையும் காதலிக்கவில்லை, என்னுடன் அனுபவிக்கும் மகிழ்ச்சி போல் எங்கும் கிடைக்கவில்லை, என அவள் மனசாரச் சொன்னபோது, என் மேல் அவளுக்கிருந்த பைத்தியம் எந்தப் பிரச்சினையையும் வர விடாது என என்னை முழுமையாக நம்ப வைக்கின்றது.

அனுவுடனான என் உறவை யாரும் சந்தேகிக்க வழியில்லை, சரி, மதிப்புக்காக குடும்பமும், கவனிப்புக்காக அவளும் இருக்கட்டும் என முடிவெடுக்கின்றேன். அப்படியே, பேருக்கு மட்டும் குடும்பமாக நாங்கள் வாழும் அந்த இரண்டு அறைக் குடித்தனத்தில் என் மனைவியாக இருப்பவளுடனான என் வாழ்க்கை தொடர்கின்றது.

ஆனால், நான் போட்ட கணக்குத் தப்புக்கணக்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் ஏட்டிக்குப் போட்டியாகின்றது என் விதி.

அந்த வருடக் கிறிஸ்மஸ், வெள்ளைக் கிறிஸ்மஸ் ஆக இருக்கப் போகின்றது என என்னுடைய மூத்த பேத்தி மிகவும் மகிழ்ச்சியாக சொல்லிக்கொண்டிருக்கின்றாள். ரொறன்ரோவைச் சுவர்க்கலோகமாக்குவதற்காக வந்த அந்த 30 செமீ பனியுடன் இணைந்த பெரும் காற்று, மரங்களை மட்டுமன்றி என் மனவைராக்கியத்தையும் எதிர்பாராதளவுக்குச் சரித்து விடுகின்றது. மின்சாரமும் இயற்கை வாயுவும் இல்லை என்றாகிய அந்தக் குளிர்ந்த இரவுகளில், குளிரை மேவ, எனது கட்டிலின் மறுபுறத்தில் வந்து படுத்துக்கொண்ட, அதுவரை அந்த வீட்டுக்குள் பெயரளவில் மட்டும் என் மனைவியாக இருந்தவள், என் மனைவியாகி என் தேவைகளுக்குத் தீனி போடுகின்றாள்.

பத்து வருடத்துக்கு மேலாக இருக்காத தாம்பத்தியம் அந்த உயிரை உருக்கும் குளிரில் மீள்பிறப்பெடுத்துக் கொள்கின்றது. என்னுடைய அந்தக் காமப் பசிக்குத் தீனியிட்டவள் நோயில் நான் வாடியபோது என்னைக் கவனிக்காதவள், வாடியிருக்கும்போது அசட்டையாக வாழ்ந்தவள் என்ற எந்த நினைவுமே எனக்கு இல்லாமல் போய்விடுகிறது.

அதே இரண்டு கிழமை விடுமுறைக்குள் தன்னைச் சந்திக்க வேண்டாமெனவும், தன் மேலான என்னுடைய உணர்வுகளை ஆராய்ந்து என்னுடைய முடிவை எடுக்கும்படியும் அனு எனக்கு காலக்கெடு விதித்திருந்தாள். மல்லிகாவுக்கு எங்களுடைய உறவைத் தெரியப்படுத்த வேண்டும் என்பது தொடரும் அவளது தொந்தரவாக இருக்கின்றது.

மல்லிகாவுடன் படுக்கையைப் பகிரத் தொடங்கிய பின் மனசுக்குள் பதட்டமும் பயமும் குடிகொண்டுவிடுகின்றன. மிகவும் குழப்பமாகவிருக்கிறது. அனுவும் என்னை விட்டபாடில்லை. மனிசியுடனான என்ரை வாழ்க்கை முறையை அறிவதில் அவள் காட்டிய ஆர்வம் எனக்கு மிகுந்த எரிச்சலைத் தருகின்றது. எனது மௌனமும் செய்கைகளும் அவளுக்கு எதுவோ சொல்லியிருக்க வேண்டும். அதனால், அவளுடனான சரசங்கள் குறைந்து சண்டைகள் நிறைகின்றன. இப்படி இரகசியமாகத் தொடர்ந்து இருக்கமாட்டேன் என அனு முரண்டுபிடிக்கின்றாள், அல்லது தன்னுடைய உறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிடச் சொல்லி விரட்டுகிறாள். அது மிகவும் மனசுக்கு அசௌகரியமாக இருக்கிறது.

சாகும்வரை அந்த உறவைத் தொடர்வேன், தவித்திருந்தபோது தஞ்சமளித்தவளை விட மாட்டேன் என்றெல்லாம் நான் சத்தியம் செய்திருந்தாலும் அவள் மசிவதாக இல்லை. வெளியில் தெரிய வந்தால், அப்படி ஒன்றில்லை என நிச்சயமாக மறுப்பேன், உறவு தெரியவந்தால், நல்லது நடக்கும் என நினைத்து அவசரப்படக்கூடாது என்றெல்லாம் சிவப்புக் கொடி காட்டியிருந்தும்கூட எங்கடை உறவைப் பற்றி இன்னொருவருக்கூடாக அவள் மல்லிகாவுக்கு தெரியப்படுத்தியதாலைதான் பிரச்சனை இவ்வளவு பாரதூரமானது.

*"அப்ப, தொடர்பு கொள்ளவேணாமெண்டு பொலிசு மூலம் செய்தியனுப்பி அவளை உயிருடன் கொன்றதுக்கு, நீ எந்தவிதத்திலும் பொறுப்பில்லை, அப்பிடியோ..." எங்கிருந்தோ குரல் ஒன்று என்னைத் தட்டிக் கேட்டது.*

"நான் என்ன செய்யிறது? வேறை வழியில்லை" தொண்டைக்குள் குரல் அடைத்துக் கொள்கிறது.

*"ஓ, அவள்தான் உன்னைச் சுத்தினாள் எண்டு கதை விட்டுத் தப்புறதுதான் நல்ல வழியாக இருந்ததோ?"*

"சமூகத்திலை என்ரை மதிப்பு என்னாகிறது எண்டு எனக்குப் பயமாக இருந்தது. அதோடை சேர்ந்து வாழ்ந்தால் எங்களாலை சந்தோஷமாக இருக்கேலாது எண்டும்கூட அப்பப்ப நான் அவளுக்குச் சொல்லியிருக்கிறன்."

*"ரியலி, நீ போற நேரம் பாத்து காத்திருந்து கதவு திறக்கிறதுக்கு அவள் தயாரா இருக்கேல்லை எண்ட பிறகுதான் அதெல்லாம் உனக்கும் புரிந்ததோ?"*

"எனக்கு பல விஷயங்கள் தேவையாயிருந்தது, என்னரை மனிசியாலை செய்யமுடியாத அதுகளை எல்லாம் அவள் செய்திருக்கிறாள்... இல்லையெண்டு நான் சொல்லேல்லை... அது மாதிரி, அவளுக்கு நானும் உதவிசெய்திருக்கிறன். பிறகு என்னட்டை அதிகமாய் எதிர்பாத்தால் அதுக்கு நான் என்ன செய்யிறது?"

*"வாழ்க்கை என்கிறது என்ன கொடுத்தன், வாங்கினன் எனச் சமப்படுத்திற ஒரு கணக்கோ? உங்கடை சுயநலத்துக்காக மற்றவையின்ரை வாழ்க்கையோடை ஏன் விளையாடுறியள்?"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக உறுதியான குரலொன்று பலமாக என் காதுகளை அடைத்தது.

"அவளிட்டைப் போன நேரங்களிலைதான் நான் தூண்டப்பட்டேன், இல்லாட்டி ஒண்டுமில்லாமலும் என்னாலை இருந்திருக்க முடியும்."

*"அப்பிடியோ? அப்ப ஏன் பலவீனம் எங்கை இருக்கு, யார் பாதிக்கப்பட்டிருக்கினம் என அலைந்து திரிகிறாய்? நீ உண்மையாய் காதலிக்கிறாய் என உன்னைப் புருஷனாக வரிச்சு அவள்தான் ஏமாந்து போனாள்."*

"புருஷனோ? நான் என்ன கலியாணம் கட்டப்போறன் எண்டு சொன்னனானே? தாலி கட்டுவிச்சது அவளின்ரை வேலை. என்னோடை அவள் கலந்தாலோசிக்கேல்லை."

*"அப்ப வைப்பாட்டியாக வைச்சிருப்பம் எண்டதுதான் ஆரம்பத்திலிருந்தே பிளான் என்கிறாய்?"*

"முதலிலை இரண்டு பேரின்ரையும் மகிழ்ச்சிக்காக சேர்ந்திருப்பம் எண்டுதான் நினைச்சன், பிறகு சந்தோஷத்தை விடச் சச்சரவு தான் கூடிச்சுது. அதாலை..., அவவும் யோசிச்சிருக்கத்தானே வேணும். சரி.. இனி அவவும் தன்ரை வாழ்க்கைக்குத் திரும்பிப் போகலாம் தானே?"

*"ஓ, மனோ! அந்த இளம் வயசிலை மட்டுமில்லை, இப்பவும் கூட உனக்குப் புதிசு புதிசா தேவைப்படுது. அவ்வளவுதான். அன்பு, காதல் - இவை எதுக்குமே எந்தவொரு பொருளும் உன்ரை அகராதியிலை இல்லை.*

**காற்றுவெளி** - 2016 ஜனவரி இதழ்
**சங்கப்பொழில்** - 2016

► ► ►



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# சில்வண்டு

நூல் வெளியீடு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த எங்களின் காருக்குள் புயல் வீசியது. சுனாமி வேகமாக அடித்து மூச்சுத் திணறச் செய்தது.

வீட்டுக்குள் போனதும், மீதிப் புத்தகங்களுடான அந்தக் காட்போட் பெட்டியும், அதனுள் இருந்த புத்தகங்களும் சுதர்சன் எறிந்த வீச்சிலிருந்த அந்த வெறுப்பையும் ஆத்திரத்தையும் உள்வாங்கி அவற்றின் வடிவத்தை இழந்து போயின.

தென்றலின் இனிய வருடல் பட்டது போல இலேசாகப் பறந்த என் மனசுக்குள், கற்களை வாரி வீசி விட்டது போல அங்கங்கே கீறல் பட்டுப் பலமாக வலித்தது, கனத்தது.

அந்த வெளியீட்டுக்கு இருபது பேர் மட்டில்தான் வந்திருந்தார்கள். ஆனால், அவர்கள் யாவருக்கும் என் கதைகளுடன் பரிச்சயம் இருந்தது. அதனால் அனைவரும் தத்தம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தனர். மொத்தத்தில் அது ஒரு ஆரோக்கியமான கருத்துப் பரிமாறலாக அமைந்திருந்தது. ஆறுமுகம் மாஸ்ரரின் முறை வந்தபோது, எனது கதைகள் சமூகப் பார்வையுடையவை எனத் தான் சொல்ல மாட்டேன் என்றார். என் கருப்பொருள்களை ஆதாரமாக வைத்து சிலர் அதற்கு எதிராகத் தங்கள் கருத்துக்களை முன்வைத்த போது சபை சுவாரஸ்யமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயபூர்வமான நன்றியுரையில், அத்தனை பேரையும் குறிப்பிட்டு நன்றி கூறிய எனக்கு என் குடும்பத்தவர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டுமென்ற எண்ணம் ஏனோ வரவில்லை. அப்பா, அம்மா, சகோதரர்கள், கணவர், பிள்ளைகள் உட்பட எவருமே என் எழுத்தில் ஈடுபாடு காட்டாததை மனதில் வைத்து, என் குடும்பத்தவர்கள் என் எழுத்தை என்றுமே பெரிதாக வரவேற்றதில்லை என்பதை மட்டும் கதையோடு கதையாகக் கூறியிருந்தேன். அப்படி நான் சொன்னது என் வாழ்க்கைப் படகினைத் திசைதிருப்பி முடிவில் கவிழ்த்து விடப் போகின்றது என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

அந்தக் குறிப்பைக் கேட்ட சுதர்சனின் நண்பன் ஒருவன் சுதர்சனுக்கு இட்ட தூபம்தான் அப்படிப் புகைத்துத் தள்ளியது. அந்த நச்சுப் புகைக்குள் மூச்செடுக்க முடியாமல் நாங்கள் தவித்தோம். மற்றவர்களின் அபிப்பிராயங்கள்தான் தன் வாழ்வுக்கான அங்கீகாரமென நம்பும் சுதர்சனுக்கு அது மிகுந்த ஆத்திரத்தைக் கொடுத்தது.

கண்களில் திரண்ட கண்ணீரும், மனக் கொதிப்பும், என்னைப் பிழையாகச் சொன்னேன் என மன்னிப்புக் கேட்க விரும்பாத என் அகம்பாவம் என்னையும் ஆரோகணத்தில் கத்த வைத்தன. சுதர்சன் செய்த உதவிகளுக்கு நன்றி சொல்லாதது பிழை எனச் சொல்லியிருந்தால் அது அணைந்திருக்கலாம். அதைச் செய்ய நான் தவறியதால் உருவான மோதலின் அனலைத் தகிக்க முடியாது பிள்ளைகள் மிகவும் வாடிப் போய்விடுகின்றனர்.

இதயம் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. உடம்பு நடுங்கியது. அதிலிருந்து ஒரு மாற்றம் தேடிக் கொம்பியூட்டருக்குள் தஞ்சமடைந்த நான் விமர்சனம் செய்தவர்களுக்கு நன்றி தெரிவித்து ஈமெயில் எழுதுகிறேன்.

"நல்லதொரு விமர்சகரும் எழுத்தாளருமாகிய உங்களின் இன்றைய விமர்சனமும் பாராட்டுக்களும் எனக்கு மகிழ்வையும் என் எழுத்துப் பற்றிய நம்பிக்கையையும் தந்திருக்கின்றன. உங்களுடைய விமர்சனத்துக்கும் நேரத்துக்கும் என் மனம் நிறைந்த நன்றி." எனப் பெயரை மாற்றி மாற்றி, அதே கடிதத்தை நான்காவது விமர்சகருக்கும் அனுப்பி முடித்த போது, பிரேமிடமிருந்து பதில் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள ரஜனி,

என்னுடைய விமர்சனம் உங்களுக்கு உதவியதில் எனக்கு மகிழ்ச்சி.

பாரதியின் பாடல்கள் இன்றும் நிலைத்திருப்பதைப் போன்று சமூக அக்கறை மிக்க உங்கள் எழுத்துக்களும் என்றும் நிலைத்திருக்கும். அவை புலம்பெயர் வாழ்வின் மீது புதிய வெளிச்சமொன்றைப் பாய்ச்சியிருக்கின்றன.

உங்களுக்கு வசதியானபோது, உங்களுடைய சில கதைகள் பற்றியும் ஆறுமுகம் மாஸ்ரர் அவை பற்றித் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் நேரில் கதைக்க விரும்புகின்றேன். உங்கள் வசதியைத் தெரிவியுங்கள்.

மீண்டும் வாழ்த்துக்களுடன்,
பிரேம்

அந்த ஈமெயில் அன்றிரவு எனக்கிருந்த மனநிலைக்கு மிகுந்த ஒத்தடமாக இருந்தது. இருந்தாலும், இவர் ஏன் நேரில் கதைக்க வேண்டும் என்கின்றார் என்ற கேள்வி ஒன்று எனக்குள் மெதுவாகத் தலைதூக்கியது. அதை அடுத்த நாள் என் மகளுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

ஏன் அப்படி நான் எப்பவுமே ஆண்களில் சந்தேகப்பட வேண்டும் என என்னைக் கேட்கிறாள் என் மகள். என் எழுத்துக்களைச் செப்பனிடக்கூடிய அனுபவமிக்க பிரேமின் நட்பை வளர்ப்பது எனக்கு நன்மையாக இருக்கும் என மேலும் அவள் அபிப்பிராயப்படுகிறாள். இந்த நாட்டுக் கலாசாரத்தில் வாழும் அவளின் கருத்தில் பொருள் இருப்பது மாதிரி எனக்கும் படுகின்றது. யோசித்துப் பார்த்தபோது அவரின் உடை, நடை, பாவனைகளும் நம்பிக்கையைத் தருகின்றன. எனவே எதிர்பார்ப்புடன் பதிலெழுதுகின்றேன்.

அன்புள்ள பிரேம் அவர்களுக்கு,

நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் என்பதை அறிய ஆவலாக உள்ளேன், உங்களுக்கு வசதியானபோது சந்திப்பதற்கு நான் நிச்சயமாக ஆவன செய்வேன்.

அன்புடன்,
ரஜனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள ரஜனி,

வருகின்ற ஞாயிறு மாலை ஒரு புத்தக வெளியீட்டில் பேசுகிறேன். சனி மதியம் குறும் திரைப்படவிழா இருக்கின்றது. இரு நிகழ்வுகளும் ஸ்காபோறோவில்தான் நடைபெறுகின்றன. ஞாயிறு வந்தால் என்னுடைய பேச்சையும் கேட்கலாம்.

அன்புடன்,
பிரேம்

அன்புள்ள பிரேம் அவர்களுக்கு,

திங்கள் பாடசாலை நாள் என்பதால் ஞாயிறு மாலை வருவது எனக்குக் கஷ்டம், குறும் திரைப்பட விழாவுக்கு வருகின்றேன், சந்திப்போம்.

அன்புடன்,
ரஜனி

அப்படியே, குறும்திரைப்பட விழாவுக்குச் சென்று பக்கத்தில் அமர்ந்துகொள்கின்றேன். இருந்தாலும், எங்களின் உரையாடல் அந்தப் படங்களைப் பற்றித்தான் இருந்ததேயன்றி அன்றைய கருத்தாடல் பற்றியதாக இருக்கவில்லை. முடிந்து விலகும்போது தனது தொலைபேசி இலக்கங்களைத் தந்து கோல் பண்ணுங்கோ கதைப்பம் எனச் சொல்கின்றார் பிரேம்.

அதன்படி நானும் அவரை அழைக்கிறேன். தன் மேல் உள்ள கோபத்தால், தான் சொன்ன கருத்தை மறுப்பதற்காகவே ஆறுமுகம் மாஸ்ரர் அப்படி அன்று சொன்னார் என்றும், பிரச்சாரத் தொனியைக் குறைத்துக் கலைநயத்துடன் எழுதினால் என் கதைகள் இன்னும் சிறப்பாக இருக்கும் என்றும் அவர் சொல்கிறார்.

அவருடைய விமர்சன உரை ஒன்றைக் கேட்டபோது, அதில் லயித்து, அவரது அந்தத் தமிழை நான் மிக ரசித்ததால், அவரின் பேச்சில், அவர் தமிழை உச்சரிக்கும் பாங்கில் எனக்கொரு போதை ஏற்பட்டிருந்தது உண்மையே. பின்னர், இலக்கிய விழா ஒன்றில் எமக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஒரு மேசையில் தனித்திருந்து பேசியபோது அக்கறையாக என் எழுத்துக்கள் பற்றி அவர் விசாரித்ததும் என் நூலுக்கான விமர்சகர்களில் ஒருவராக அவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கத் தூண்டியது.

பெரிதாக நெருங்கிய நண்பர்கள் என எவருமின்றி, அதுவும் எந்த ஆண் நண்பர்களுமின்றி குடும்பமும் நானும் என இருந்த நான், எங்கிருந்து சில நாட்களுக்குள் இப்படி நட்பு வந்ததோ தெரியவில்லை ஆனால் மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது எனப் பரசவித்துப் போகின்றேன். தொலைபேசி உரையாடல்களும் மின்னஞ்சல் உரையாடல்களும் தினமும் தொடர்கின்றன.

அன்புள்ள ரஜனி,

வீரகேசரியில் உங்களுடைய பேட்டி படித்தேன். மிக அழகாக உங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றீர்கள். உங்களைப் போன்ற சொல்திறனும் செயற்திறனும் மிக்க பெண்களால்தான் இந்த நானிலம் மேம்படும்.

பெண்ணின் இயல்புகள் என ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட மௌனமும் மென்மையும் கலைந்து, உங்களது மொழியின் வீச்சு மென்மேலும் பிரவாகம் எடுக்கவேண்டும்.

உங்களுடைய எழுத்துப் பயணத்துக்கு உதவிசெய்யக்கூடிய சில புத்தகங்களை நான் தெரிந்தெடுத்து வைத்திருக்கின்றேன். ரொறன்ரோவும் மாக்கமும் சந்திக்கும் வடக்குப் புறத்தில் என் குடில் அமைந்திருக்கின்றது. வசதியான போது பெற்றுக்கொள்ளுங்கள்.

அன்புடன்,
பிரேம்

என்னுடைய வளர்ச்சியில் அவர் காட்டும் அக்கறை, பாரி மன்னனின் தேர் அன்று அந்த முல்லைச் செடிக்குக் கொடுத்த தெம்புக்கு ஒத்த தெம்பை எனக்குத் தருகின்றது. ஆனால் அந்தத் தேர் பல மரங்களின் அழிவில்தான் உருவாக்கப்பட்டது என அன்று எனக்கு நினைக்கத் தோன்றவில்லை.

அன்புள்ள பிரேம் அவர்களுக்கு,

உங்கள் பாராட்டுக்கும் அன்புக்கும் உதவிக்கும் மிக்க நன்றியுடையேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அந்தப் பக்கம் வரும் போது வருகின்றேன். டவுன்ரவுண் பக்கம் வந்தால் நீங்களும் எங்கள் வீட்டுக்கு வரலாம்.

அன்புடன்,
ரஜனி

அன்புள்ள ரஜனி,

பால்பனிப் பொழிவின் போது, இருவர் கைகோர்த்து நடக்கும் சந்தோஷத்துக்கு ஒப்பானது நல்ல நண்பர்களின் நட்பு.

உங்களைவிடப் பலவயது மூத்தவனான நான் இப்படிக் கேட்பது உங்களுக்கு அசௌகரியத்தைக் கொடுக்கக்கூடும் என்றாலும் உங்களை ஒன்று கேட்கலாமா? என்னை விழிக்கும் போது பிரேம் அவர்களுக்கு எனச் சொல்லாமல், வெறுமன பிரேம் என மட்டும் எழுதுவீர்களா? என்னுடைய தங்கைச்சிமார் என்னை, டேய் தம்பி, வாடா, என்று தான் கூப்பிடுவார்கள். என் நண்பர்களும் பிரேம் என்றழைப்பதையே நான் விரும்புவேன்.

அன்புடன்,
பிரேம்

அன்புள்ள ரஜனி,

எப்படியிருக்கின்றீர்கள்?

அன்பைத் தேடி பிச்சைக்காரனான அலைந்த எனக்கு உங்களுடைய நட்பும் அன்பும் வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்துகின்றன. என்றும் உங்கள் அன்புக்கு நான் நன்றியாக இருப்பேன்.

அன்புடன்
பிரேம்

அவருக்குப் புற்றுநோய் வந்தபோது, அதற்கு ஆயுர்வேதச் சிகிச்சைதான் செய்யவேண்டுமென மனைவி அடம்பிடித்துப் பிரிந்து போயிருந்திருப்பதாக அவர் மூலம் அறிந்தபோது, தனியாக அவர் வாழும் வீட்டுக்கு எப்படி நான் வரமுடியும் என்கிறேன். அதற்கு அவர் தனது வீட்டுக்கு இப்படிப் பல பெண்கள் உதவிபெற வருவதுண்டு என இலக்கிய உலகில் எனக்குத் தெரிந்த சிலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அத்துடன் அவர் பற்றிய நல்லெண்ணமும் நானென்ன சின்னப் பிள்ளையா என்ற நினைப்பும் தலைதூக்க, சரி, விரைவில் உங்கள் வீட்டுக்கு வருகிறேன் என்கிறேன்.

நான் எழுதிக்கொண்டிருந்த கதைகளை அவரின் பின்னூட்டல்களுக்காக அனுப்புகின்றேன். படித்த பெண்ணைத் திருமணம் செய்யாததால், தன் ஆய்வை விளங்கி உதவிசெய்ய ஒருவர் இல்லை எனச் சுயபச்சாதாபம் பேசியதுடன், உதவியாளரின் அறிவையும் அக்கறையையும் பாராட்டிப் பாராட்டி அந்த உதவியாளரை நெருங்க முயன்ற பேராசிரியர் ஒருவர், பின்னர் அந்த உதவியாளரை முத்தமிட்ட சம்பவம் ஒன்று கதையில் சொல்லப்பட்டிருந்தது. அந்த பேராசிரியர் பாத்திரத்தை பெண்தாசன் என மிகவும் கோபமாக வைகின்றார், பிரேம். இன்னொரு கதையில், கோமாவில் படுத்திருக்கும் கணவனுடனும் சின்னப் பிள்ளைகளுடனும் அல்லல்படும் இளம் பெண் ஒருத்திக்கு மிக உதவியாகவும் நல்ல நண்பனாகவும் இருக்கும் ஒருவன், அவள் விரும்பினால் தான் இணையத் தயாராக இருப்பதாகச் சாடை காட்டியபோது அவனை நல்ல நண்பனாகவே அவள் பேண விரும்புகிறாள் என முடிவை நான் அமைத்திருந்தேன். அப்படியில்லாமல் அவன் அவளுக்குத் தேவைப்படுகின்றான் என்ற முடிவைத் தான் போட்டு கண்ணை மூடி மானசீகமாக யோசித்தபோது அது மிக நல்ல கதையாக இருந்தது என்கின்றார், பிரேம்.

அநீதிக்கு அவர் காட்டும் ஆவேசமும், புதுமையை வரவேற்கும் இயல்பும், சக எழுத்தாளரை ஊக்குவிக்கும் பண்பும் அவர் மேல் எனக்கு மிகுந்த மரியாதையைக் கொண்டுவருகின்றன.

இன்னொரு நாள் கதைக்கும் போது, இலவசமாக வெளிவரும் சஞ்சிகை ஒன்றின் ஆசிரியர் பெண்கள் கேட்டால்தான் பிரதிகளை வீடு தேடிக் கொண்டு போய்க் கொடுப்பாராம். அவரின் சேஷ்டையை ஒழிக்க வேணும் ஒரு நாளைக்கு அவரை நீங்கள் ரிம் ஹோட்டனுக்குக் கூப்பிடுங்கள், கொஞ்ச நேரத்திலை நான் அங்கை வாறன். அவரை அம்பலப்படுத்தலாம் என்கிறார். பச்சோந்திகளை அம்பலமாக்க விரும்பும் அவரின் அந்த ஆத்திரம் எனக்குப் பிடித்துப்போகின்றது.

ஜூன் 27 அன்று, நான் அவரின் வீட்டுக்குப் போன போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9ம் இலக்கத்தில் முக்கியமான விடயங்கள் தன் வாழ்வில் நடப்பதாகச் சொல்லிக்கொள்கின்றார். நான் முக்கியமானவர் என நினைக்கும் ஒருவர், என்னை முன்னிலைப்படுத்தி இப்படிக் கதைத்தது, ஓரிரு அங்குலங்கள் நான் இன்னும் உயர்ந்திருப்பது போன்றதொரு உணர்வை எனக்குத் தருகின்றது.

வரவேற்பறையைச் சுற்றி நோட்டமிடுகின்றேன். பேரப்பிள்ளையுடனான படமும், மகனின் திருமணப்படமும் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தன.

"தாடியில்லாமல் உங்களைப் பார்க்க ஆரோ போலிருக்கின்றது"

"யா, தாடியை எடுக்காவிட்டால் மகனின்ரை கலியாணத்துக்கு வரமாட்டன் எனப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. அது தான் வெட்டினது. தாடியில்லாமல் என்னைப் பாக்க எனக்கே பிடிக்கவில்லை. மகனுக்கும் என்ரை தாடி பிடிக்கும்... ரஜனி, உங்களுக்கு என்ரை தாடி பிடிச்சிருக்கா?"

மெல்லச் சிரிக்கின்றேன், நான். "ஓம், உங்களுக்குத் தாடி வடிவாயிருக்குது"

வரவேற்பறையிலிருந்து குசினியைப் பிரித்து நிற்கும் திரை கூட அழகாக துப்பரவாக கலைநயத்துடன் இருந்தது. பலதையும் பேசிக்கொண்டோம்.

"சுதர்சனை எனக்கு முந்தியே தெரியும். உங்களுக்கு அவருக்கும் இடையே நிறைய வேறுபாடுகளைப் பாக்கிறன்."

"என்ரை முதலாவது கதைக்கு அவர் எழுதின விமர்சனம்தான் எங்கடை கலியாணத்துக்குக் காரணமானது. ஆனால், இப்ப இலக்கியம் என்பது வேலையில்லாதவையின்ரை வேலை எண்டு அவர் நினைக்கிறார்."

"அதை மட்டும் நான் சொல்லேல்லை, ரண்டு பேரின்ரையும் குண வேறுபாட்டையும் சேர்த்துத்தான் சொல்றன்."

"ஆளுக்கு ஆள் வித்தியாசம் தானே, அதோடை ஆருக்குத்தான் பிரச்சினையில்லை, வீட்டுக்கு வீடு வாசல்படி."

"சாப்பிட்டு விட்டுப் போறியளா?" என்ற போது, "என்ன எனக்கும் சேர்ந்துச் சமைத்து வைத்திருக்கிறீங்களா?" என்கிறேன்.

"சமைக்கிறது கஷ்டமில்லை, சேர்ந்து சாப்பிடுறதுக்கு ஒருத்தர் கிடைக்கிறதுதான் கஷ்டம்," என்ற போது, என்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றைக் குளிர்விக்கும் சந்தர்ப்பத்தையும் அவருக்குக் கொடுக்கிறேன்.

பின்னர், சரி போவோம் என வெளிக்கிட்ட போது, "என்ரை அரண்மனையைப் பார்க்கப் போறீங்களா? இது தான் என்ரை ரூம். இந்த மேசையிலிருந்துதான் நான் எழுதுகிறனான், இந்தச் சாய்மனைதான் என்ரை வாசிப்பிடம், இது என்ரை புத்தக அலுமாரி. உங்களுக்கு விருப்பமானதை எடுத்துக்கொள்ளலாம்," ஏனடா தன்ரை படுக்கை அறையை இவர் எனக்குக் காட்டுகின்றார் என நான் நினைத்துக்கொண்ட போது, "இது மாலாவின்ரை அறை, வெறுமனத்தான் இருக்கு. சுதர்சனோடை சண்டை எண்டால் இங்கு வந்திருக்கலாம்," என மற்ற அறையைச் சுட்டிக் காட்டுகின்றார். என்ன தொனியில் அதைச் சொல்கிறார் என ஊகிக்க முடியாத ஒரு குரலாக அது இருக்கின்றது.

அவவின்ரை அறையா என எனக்குள் எழுந்த கேள்விக்கு, அவராகவே பதிலளிக்கின்றார்.

"சேர்ந்திருக்கேக்கையும் ஆறு வருஷமா வேறை வேறை ரூம் தான்... இரண்டாவது வேலை முடிஞ்சு சாமத்திலை வருவன்... பிறகு ஏதாவது செய்து சாப்பிட்டிட்டுப் பேசாமல் படுத்திடுவன்."

வேலையாலை வந்து, சாமத்திலை - அதுவும் பசியோடை நீங்கள் சமைக்க அவ படுத்திருப்பாவா? நான் கேட்க நினைத்த கேள்வி வாய்வரை வரவில்லை. ஆனால், அவவில் குற்றமாகச் சொல்லாமல் தன்னுடைய நிலைப்பாடாக அதைப் பிரேம் சொன்னது பிரேமின் மேல் இனம்புரியாதொரு பரிதாபத்தை எனக்குள் குவிக்கின்றது. அப்படி என்னுடைய வீட்டில் நடக்குமா என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

வாசலில், "கான் ஐ காவ் எ ஹக்?" எனப் பிரேம் கேட்ட போது என்னை அறியாமலேயே என் மூக்கால் அவரின் கன்னத்தில் முத்தமிடுகின்றேன், நான்.

அடுத்த நாள் வேலையிலிருந்து கோல் பண்ணுகின்றேன். "ரஜனி, இராத்திரி நல்லா நித்திரை கொண்டீங்களா? கன நாளைக்குப் பிறகு இராத்திரித்தான் நான் முழுசா நித்திரை கொண்டனான்."

"உங்கடை சாப்பாட்டுக்கும் உபசரிப்புக்கும் மிக்க நன்றி. நான் எதுவும் கொண்டுவரவில்லை. வந்து நீங்கள் சமைச்சுத்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டிட்டு வந்திருக்கிறன்."

"சரி, இன்னொரு நாளைக்கு நீங்கள் சமைச்சுத் தந்தால் போச்சுது. உங்களை நினைச்சுப் பாக்கிறன். உங்கடை தியாகங்களுக்காண்டி ஆராவது கோயில் கட்டிக் கும்பிடப் போயினமோ?"

"நான் என்ன தியாகம் செய்யிறன்?"

"விருப்பமில்லாத வாழ்வை நிர்ப்பந்தங்களுக்காக வாழுறது தியாகமில்லையா?"

"பிரச்சினைகள் இப்ப எவ்வளவோ குறைஞ்சிட்டுது. இனி இப்படியே வாழ்ந்து முடிக்கிறதிலை கஷ்டம் இருக்காது. பத்து வயசிலை ஒரு பிள்ளை வேறை இருக்கிறாள்."

"சுதர்சன் எவ்வளவு அதிஷ்டசாலி எண்டு அவருக்குத் தெரியுமா எண்டு நான் யோசிக்கிறன்."

அன்று மாலை மகளுடன் 'ரொய்ஸ் ஆர் அஸ்'க்குப் போனபோது பிரேமின் வீட்டில் சாப்பிட்டதையும் நான் எதையும் எடுத்துப் போகாதையும் அவரின் பேரப் பிள்ளைக்கு அவர் மியூசிக் படிப்பிக்க விரும்புவதையும் சொல்லி என்ன வாங்கலாம் என ஆலோசனை கேட்கிறேன். அவள் ஒரு பியானோவைக் காட்டுகின்றாள்.

இரண்டு நாட்களின் பின், மகளின் ஆலோசனைப்படி வாங்கிய பியானோவைக் கொண்டு பிரேமிடம் சென்ற போது டவுன்ரவுணில் இருக்கும் அவரின் பேத்தி தன்னிடம் வரும்போது மட்டுமே வீடு கலகலப்பாக இருப்பதாயும் அல்லது தான் ஃபிரிஜ் உடனும் தலையணையுடனும்தான் கதைப்பதாகவும் பிரேம் பகிடியாகச் சொன்னாலும்கூட, அந்தக் குரலிலிருந்த சோகம் என் மனதில் பதிந்துகொள்கின்றது. அது பிரேமின் மேலான கரிசனையை அதிகரிக்கின்றது. அத்துடன் பிரேமுடனான உரையாடல்கள் மனதுக்கு இதமாக இருக்கின்றன

இப்படியே சந்திப்புகள் தொடர்கின்றன. இன்னொரு நாள் எனக்குப் பிடிப்பவை உங்களுக்கும் பிடிக்குமல்லவா, அதனால் சில பாட்டுக்களை உங்களுக்காகப் பதிவுசெய்தேன், அவற்றைக் கேட்க வசதிப்படுமா எனக் கேட்டு, 'உறவுகள் ஒரு தொடர்கதை', 'அஞ்சலி,அஞ்சலி', 'நீ காற்று, நான் மரம்' போன்ற பாட்டுக்களைப் பதிவுசெய்து தருகிறார். 'என் மேல் பட்ட மழைத்துளியே இத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் எங்கிருந்தாய்', என்ற பாடல் கசெட்டின் முடிவிலும் ஆரம்பத்திலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

நீண்ட காலமாக சினிமா பார்க்காமலும் சினிமாப் பாடல்களைக் கேட்காமலும் இருந்த எனக்கு சுதர்சனுடனான எங்கள் உறவில் காதல் இல்லாமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தை அந்தப் பாடல்கள் ஏற்படுத்துகின்றன. எங்களுடைய தாம்பத்தியத்தை மேம்படுத்த ஏதாவது செய்ய வேண்டுமென்ற தாபம் எனக்கு ஏற்படுகின்றது.

வெளியில் கடும் காற்றும் மழையும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன

எங்களுடைய அலைவரிசைகள் மிகவும் எதிர் எதிரானவை என்பதற்கும் மேலாக, வாழ்க்கையில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்களின் விளைவுகளான வீழ்ச்சிகளாலும், சில செயல்களால் உருவான இடைவெளிகளாலும் வளர்க்கப்பட்ட முரண்பாடுகள் எங்கள் இருவரையும் வேற்றுக்கிரக வாசிகளாகவே மாற்றியிருந்தது.

விட்டிட்டு ஓடிடு என மனசுக்குள் துருதுருத்திக் கொண்டிருந்த அந்த உச்சஸ்தாயிலிலான அபசுரம், காலம் போகப்போக ஓங்கி ஒலித்த நிலையிலிருந்து முனகிக் கொள்ளும் நிலைக்கு மாறியிருந்தால், இனி இந்த வாழ்க்கையை இப்படியே வாழ்ந்து முடித்து விடலாம் என மனம் அமைதி நிலை ஒன்றை அடைந்ததன் விளைவுதான் அந்த சிறுகதைத் தொகுப்பு எனலாம். இரண்டு வருடங்களுக்குள் இருபது சிறுகதைகளை நான் எழுதியிருந்தேன். அவரும் பலவகைகளிலும் அந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்குத் தோள் கொடுத்திருந்தார்.

"சிவானியின் ஈமெயில்களும் கரிசனைகளும்தான் என்னை இந்த ரண்டு வருஷமா வாழவைத்தன. அதோடை, ஊரிலையிருக்கும் பழைய காதலி ஒருத்தியிடமிருந்து நடுச் சாமத்திலை கோல் வரும் எடுக்காமலிருக்க முடிவதில்லை. அவள் போனுக்குள்ளாலை முயங்குவாள். இன்சினியர் பெண்சாதி ஒருத்தி தன்ரை புருஷனுக்கு எதுவும் விளங்குதில்லை என எனக்குச் சொல்லும் போது கேட்காமல் இருக்க முடிவதில்லை. இப்ப என்ரை வாழ்க்கைக்குள்ளை நீ வந்ததிலை எல்லாமே தேவையில்லாமல் போய்ச்சுது".

அப்படி வெளிப்படையாகச் சொல்பவருக்கு என்ன சொல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தெரியாமல் அவரின் அந்த மயக்கும் விழிகளைப் பார்க்கிறேன். நான். பாவமாக இருக்கின்றது.

வெளியில் இடிமுழக்கத்துடன் மழை பலமாகக் கொட்டுகின்றது, மழைத் துளிகள் அந்தக் கண்ணாடி யன்னலில் வந்து வேகமாக முட்டி முட்டி மோதுகின்றன. எப்படியாவது உள்ளுக்குள் வந்துவிட முயற்சிக்கும் அவசரம் அந்த சத்தத்தில் தெரிகின்றது.

"நீ ஒரு எழுத்தாளர் எண்டபடியால் என்னை உன்னாலை விளங்கிக்கொள்ள முடியும். அதாலை மனிசிட்டை சொல்லாததுகளைக்கூட உன்னட்டைச் சொல்ல முடியுது. உன்னை என்ரை தாயா, சினேகிதியா, கடவுளா... எல்லாம பாக்கிறன்," எனச் சொன்னவர், என்னை மெதுவாக முத்தமிடுகின்றார். நான் மிகவும் விலகி நின்று அது எனக்கேற்படுத்திய அசௌகரியத்தைச் சொல்கிறேன்.

பின்னர், இன்னொரு நாள் முதுகை வருடித் தந்தபோது, பின்னுக்கு விலகிய நான், பின் திடீரென முன்னுக்குப் போய் அவரை முத்தமிடுகின்றேன். உடனடியாக அடுத்த நிலைக்கு அவர் தயாரானது கூட எனக்குத் தெரியாமல் போய்விடுகின்றது, என்ன நடக்கின்றது என்ற சுயநினைவின்றிய உடல் முழுவதுமான வருடல்களுக்குப் பின் வீட்டுக்குப் போய் உரஞ்சி உரஞ்சிக் குளிக்கின்றேன்.

இது நல்லதல்ல எனச் சொல்ல வேண்டுமென்ற நினைப்புடன் அடுத்த நாள் வீட்டுக்கு சென்றபோது, என் கையைக் கோர்த்துக் கொண்டு இலக்கியக் கூட்டங்களில் முன்வரிசையில் உட்கார்ந்திருக்க வேண்டுமென ஆசையாக இருக்கின்றது என்கிறார். உலக அழகிகள் கூட தன் மனதைச் சலனப்படுத்துவதில்லை என்றும், ஆனால் என்னுடன் ஏதோவொரு பூர்வ ஜென்ம பந்தத்தை உணர்வதாகவும் சொல்கின்றார். எனக்கு வாயடைத்து விடுகின்றது.

நீ என் மனைவி என உலகமெல்லாம் ஓங்காரமிட்டுச் சொல்லவேணும் போலிருக்கு என்றபோது அவருக்குள் என்னை நான் இழக்கின்றேன். நான் பொம்பிளை இல்லை, எனக்கு எந்தவித ஆசையும் இல்லை என என்னை நம்ப வைத்த நிகழ்வுகளைச் சவாலாக்கும் ஆசை எனக்குள் முகிழ்கின்றது. முடிவில், உடல் சுகம் மிக ரம்மியமானது என்பது தெரியாமல் வாழ்ந்த என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புகளை மீட்டிய அவர் பெரும் வித்துவானாக எனக்குத் தெரிகின்றார். அவர் மீட்டிய இசைக்குள் அடிமையாகின்றேன் நான். ருசியாகச் சமைத்து அன்புடன் ஊட்டிவிடும் போது, நான் செய்வதை ரசித்து அனுபவிக்கும் போது, அந்த ரம்மியமான தருணங்களை எல்லாம் அணு அணுவாக ரசிக்க ஆரம்பிக்கின்றேன். சலங்கை கட்டி விட்டது போன்று என் இதயம் மிகவும் ஆர்ப்பரிக்கின்றது. மனசு உயர உயரப் பறக்கின்றது.

என்னுடைய பிள்ளைகளிடம் நான் எதையும் மறைப்பதில்லை என்றபோது, ஓம் அவர்களிடமும் நம் காதலைச் சொல் என்கிறார். பிள்ளைகளும் நான் சந்தோஷமாக இருக்கவேண்டும் என ஆசைப்படுகின்றனர். அப்படியாக, எனது முதலாவது கதை மூலம் ஏற்பட்ட ஒரு உறவு, எனது முதலாவது கதைப் புத்தகத்தால் வித்திடப்பட்ட இன்னொரு உறவால் முறிவடைந்து, என்னுடைய அந்தப் புதிய சந்தோஷத்துக்கு விவாகரத்து வெகுமதியாகின்றது. அது பிரேமுக்கு மிகவும் வசதியாகப் போய்விடுகின்றது.

தன் பிள்ளை கனடாவில் வளராததால் எங்கள் உறவை விளங்கிக்கொள்ள மாட்டான், கொஞ்சக் காலம் போகட்டுமன் என்கிறார்.

ஆனால், வெளியில் நின்றால் என்னுடைய அழைப்புக்களுக்குப் பதிலளிக்காமலிருப்பது, ஃபேஸ்புக்கில் என் படங்களுக்கு லைக் போடாமலிருப்பது, சந்திப்பது மற்றவர்களுக்கு தெரியாமல் இருக்க முயற்சிப்பது போன்றவை எனக்கு கோபத்தைத் தருகின்றன. ஏன் என்று கேட்டால் அது என் பாதுகாப்புக்காக என்கிறார், படத்துக்கு மேல் பல லைக் போட்டு தனிச் செய்தி அனுப்புகிறார். சரி என்னைக் கட்டாட்டிலும் பரவாயில்லை, பிரிஞ்சிருக்கிற மனுசியை டைவோஸ் பண்ணுங்கள் என்றால், என்ன அது பற்றி நான் யோசிக்கேல்லை எண்டா நினைக்கிறாய், அதோடை ஆர் கதைக்கிறது, கேட்கிறவையோடை சண்டைக்குப் போகும். இனி நான் கோடெல்லாம் ஏறியெல்லோ அலையவேண்டும். சாகும் வரையும் நான் உனக்குத் தானடி சொந்தம், என்னிலை நம்பிக்கை இல்லையாடி என கொஞ்சம் அதிகமாகச் சரசம் செய்கின்றார்.

உந்த செக்ஸ்க்காகத் தான் என்னோடை பழகிறியளோ என எனக்கு சிலவேளைகளில் சந்தேகம் வருது எண்டால், சரி அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிடு என்பார், பிறகு திடீரென புதிசா முன்பொரு முறையும் செய்யாத விதத்தில் இன்பம் தருவார். பின்னர் அது எங்கை இதெல்லாம் படிச்சியள் எனக் கேட்டு நான் மாறி மாறி அவரின் உதடுகளையும் விரல்களையும் முத்தமிடுவதில் முடியும். கள்ளர்மாரி இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்றால், அப்ப விட்டிடுவமோ என்பார். என்ன பகிடியா விடுகிறியள் என எனக்குக் கோபம் வந்தால், கொஞ்சம் பொறு என ஆறுதல்படுத்துவார்.

இப்படியாக ஐந்து வருஷம் கழிந்த பின்னர், பென்சன்காசு எதற்கும் போதாமலிருக்கிறது, சாப்பாட்டுக்கும் இடத்துக்கும் வசதியா எங்காவது சீனியர் ஹோம் அப்பிளை பண்ணலாமோ என யோசிக்கிறன், அப்பிடி அப்பிளை பண்ணுறதெண்டால் அவளோடை சேர்ந்துதான் செய்யவேணுமாம், ஏதோ கட்டியிட்டன், மகனும் கவனிக்க மாட்டான் அதாலை இடமும் சாப்பாடும் கொடுக்கிறது என்ரை கடமை, வந்து ஒரு மூலையிலை இருந்திட்டுப் போகட்டும் என யோசிக்கிறன் என்கிறார். அப்படி அவவோடை அவர் இருக்கப் போனால் நான் எந்த உறவும் வைத்திருக்க மாட்டேன் என்கிறேன்.

"நீ என்ரை நிலைமையை விளங்கி எனக்கு உதவிசெய்யாட்டால் நான் என்ன செய்யேலும், பார்வைக்குத் தான் ஆறடி மனிசன் நான், மெல்லிய மனசடி எனக்கு உடைந்து போயிடுவனடி, என்னை விளங்கிகொள். நான் அந்த மனிசியோடை குடும்பமாக வாழப்போகவில்லை, சந்தர்ப்பம் வரும்போது நீதான் எனக்கு முக்கியமென அவளுக்குச் சொல்லுவன். என்னை நம்பு," எனக் கெஞ்சுகிறார்.

பிள்ளைகளும் நண்பர்களும் எனக்குப் பைத்தியமா, இப்பவே வெட்டிவிடு என ஏசுகிறார்கள். ஆனால் என்னால் அவரின் உறவை விட முடியாமலிருக்கிறது.

எதற்கும் கொஞ்சநாள் பிரேமைச் சந்திக்காமலிருப்பது, ஒரு முடிவெடுக்க நல்லது என நினைக்கிறேன். அதை ஈமெயிலில் எழுதுகிறேன். சந்திக்காவிட்டாலும் கதையேன் என்கிறார். நான் பதில் போடவில்லை. எங்கு நிற்கின்றாய் என கோல் வந்தது. மெற்றோவில் நிற்கிறேன் என்றதும் அங்கு வந்து வெவ்வேறு நிறங்களில் வேறுபட்ட தலைப்புகள் எழுதிய சில பைல்களைக் கொண்டுவந்து தருகிறார். அன்றைக்கு ஏதோ பில்லைக் காணேல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு தேடினாய், இந்த பைல்களிலை தனித் தனிய எல்லாத்தையும் அடுக்கிவை என்கிறார், எனக்கு மனம் கசிகிறது. வீட்டுக்கு மீள அழைக்கிறேன்.

காதல் உள்ள ஒருவர் இப்படி மனிசியோடை திரும்பப் போக மாட்டார். ஏமாந்து போகப்போறாய் கவனமாயிரு என மகள் எனக்கு அட்வைஸ் பண்ணுவதைச் சொல்லி பிரேமின் மார்பில் முகம் புதைத்து அழுகின்றேன். அவரின் அன்பு வேணும் என அவரிடம் யாசிக்கிறேன். அவளுக்கு எங்கே எங்கள் காதல் விளங்கப்போகுது, என என் தலையைக் கோதிக் கண்ணீரைத் துடைத்து விடுகிறார், பிரேம். அவர் என்னை கைவிட மாட்டார் என்ற என்னுடைய நம்பிக்கை எனக்குள் மீண்டும் வலுப்பெறுகின்றது.

ஆனால், மனிசியுடன் குடியிருக்கப் போனபின், வருகிறேன் எனச் சொல்லிவிட்டு வர முடியவில்லை என்னும்போது எனக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை என ஆர்ப்பாட்டம் செய்கிறேன். அவ வீட்டிலிருந்தால் கதைக்கேலாது என்றபோது, அப்ப மனிசியிட்ட சொல்லு அல்லது நான் வந்து சொல்கின்றேன் என அடம் பிடிக்கிறேன்.

அவர் வாழும் விதம் பற்றிக் கேள்விகள் கேட்ட பொழுது, சில விடயங்களைச் செய்யவேண்டி நிர்பந்தப்படுத்தப்படுவதாக சொன்னபோது அது என்னவாயிருக்குமென என் கற்பனை ஓடியது. அவரை மேலும் மேலும் விசாரிக்கத் தூண்டியது. அதனால் சந்திக்கும் பொழுதுகள் எல்லாம் சண்டைதான் மிஞ்சியன.

ஆனால் காலம்தான் ஓடியதை தவிர அவரில் எந்த மாற்றமும் இல்லை. விடுமுறைக்கு ஹாவாய்க்குப் பிள்ளைகளுடன் போய் மூன்று வாரம் கழித்து வந்தபோது, எனக்கு முடிவு வேணும் என மீண்டும் நான் கேட்கிறேன். கிட்ட வராதை கொஞ்சிப் போடுவன் என்கிறார், அவர். அந்தக் கொஞ்சல் என்னை இறுதிவரை கொண்டுசெல்லும் என்பது புரிந்த தப்பித்தலுக்கான அவரின் ஆயுதம் என எனக்குப் புரிந்ததால் நான் அன்று கிட்டப் போகவே இல்லை.

அது நடந்து நான்கு நாள் கழித்து, நான் அவரைத் தொந்தரவு செய்கிறேனாம், எவ்வகையிலும் இனி நான் அவருடன் தொடர்புகொள்ளக்கூடாதாம் என பொலிசிலிருந்து எனக்கொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கைச் செய்தி வருகிறது. அதைத் தொடர்ந்து ஃபேஸ்புக்கையும் புளாக் பண்ணுகிறார் அவர்.

என்ன நடந்தது என்பது எனக்குப் புரியவேயில்லை. உலகமே அழிந்தது போல ஒப்பாரி வைக்கின்றேன் நான். சரி, காதலித்தார், பிறகு பிடிக்காட்டால் விடுகிறதிலை என்ன பிழை என்கின்றனர் சிலர், இன்னும் சிலரோ அவர் இளமையிலிருந்தே அப்படித்தான் என உதாரணம் சொல்லி பொம்பிளை நான் அல்லவா யோசித்திருக்க வேண்டும் என்கின்றனர். என்னதான் செய்ய முடியும், பேசாமல் மறந்துவிட வேண்டியதுதான் எனப் புத்திமதி சொல்லவும் ஒரு சிலர் மறக்கவில்லை. எப்படி உங்களை அவர் ஏமாத்தியிருப்பார் எண்டு என்னாலை சொல்லேலும், நான் நினைச்சாலும் இப்படிச் செய்யமுடியும் என ஒருவர் தன்ரை கெட்டித்தனம் சொல்ல, இன்னொருவரோ நாங்களும் இருக்கிறம், எங்களிட்டை ஒருத்தரும் வருகினம் இல்லையே எனப் பச்சாதாபம் கொட்டுகின்றார்.

வாழ்க்கையிலை சாத்திரம் கேட்காத நான் அதற்காகவும், பிராயசித்தங்களுக்காகவும் செலவுகள் செய்வதையும், அவர் பச்சோந்தியானதைச் சொல்லிச் சொல்லி அழுது புலம்புவதையும், துரோகத்தைத் தாங்க முடியாமல் படும் அல்லலையும், மறக்க முடியாமல் காத்திருந்து தவிப்பதையும் பார்த்து எனக்காகக் கலங்கிய என் சினேகிதி வினோ, பிரேம் தானாக அவளிடம் விழுந்த தருணத்தை இறுகப் பற்றிக் கொள்கிறாள்.

ஃபேஸ்புக் செய்திகள், ஈமெயில்கள், பின் அவற்றை அழித்து விட்டாளா எனச் செக் பண்ணல்கள், தனிமையில் சந்திப்புகள், புரிந்துணர்வற்ற மனைவி மாலா என்ற பச்சாதாபங்கள், இரண்டு அறை வாழ்க்கை என்ற புலம்பல்கள், பரிசு வழங்கல்கள் என அவருடைய லீலைகள் அத்தனையையும் எனக்காகச் சகித்து, ஏன் எனக்கு இப்படித் துரோகம் செய்தார் என அறிய வினோ விளைந்த போது, அதே "கான் ஐ காவ் எ ஹக்?" என அவர் கேட்டாராம். அவளுக்கு அது உச்சியில் அடிக்க மேலும் அவளால் நாடகம் போட முடியவில்லை. நாலு கேள்வி நறுக்காய் கேட்டுவிட்டு கொடுத்த பரிசுகளையும் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறாள்.

அப்போதும்கூட அவள் கைகளைப் பற்றி தன் கைகளுக்குள் வைக்க முயற்சித்தாராம் என அவள் எனக்குச் சொன்னபோது,

ஐம்பதைத் தள்ளிய சூடு காய முதல் இருபத்திஐந்தா என என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால் அதுதான் கற்பனை உலகிலிருந்து நிஜத்துக்கு என்னைக் கொண்டுவந்தது. பொறுப்பான ஒரு தொழிலைச் செய்யும் நான், பிள்ளைகளை வழிநடத்திய நான், அதுவும் எனது ஐம்பதாவது வயதில் இப்படி ஒரு பொறுக்கியிடம் ஏமாந்திருக்கின்றேன் என்பது தெளிவாகப் புரிந்தது. என்னை என்னாலேயே மன்னிக்க முடியவில்லை.

சரி, இப்படி ஏமாந்தேன் என இன்னும் ஒருவர் சொல்லாமல் என்னால் காப்பது நடக்கக்கூடிய ஒரு விடயமல்ல, உலகிலுள்ள அத்தனை பேரின் முகமூடிகளையும் கழற்றவும் என்னால் முடியாது. ஆனால் பிரேமிடம் ஏமாந்தேன் என இன்னொருவர் நோகாமலிருக்க என்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என முடிவெடுத்துக் கொள்கின்றேன், நான். மனதில் சற்று அமைதி வருகின்றது, முகத்தை நன்கு கழுவித் துடைத்துவிட்டு கொம்பியூட்டரின் முன்னால் போய் இருக்கின்றேன், நான்.

**ஞானம்** - 2017 பெப்ரவரி

▶ ▶ ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L. 17745

பதிவுகள் :

கொக்குவில் பொது நூலகம்
ந... ...சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25/06/22
894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பட்டதாரியான ஸ்ரீரஞ்சனியின் 'நான் நிழலானால்' என்ற சிறுகதைத்தொகுதி ஏற்கனவே வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்றது. ஸ்ரீரஞ்சனியின் கதைகளின் சமூகப் பெறுமானம் யாது என்று நோக்கினால், மனித அவல விடுவிப்புத்தான் உண்மையான கலை இலக்கியத்தின் தேடற்பொருளாகும். ஸ்ரீரஞ்சனியின் கதைகள் பலவும் இவற்றையே எமக்கு எடுத்து இயம்புகின்றன. இத்தொகுப்பு தமிழிலக்கியத்திற்கு ஒரு சிறந்த வரவு என்பதில் ஐயமில்லை.

**-டாக்டர். தி. ஞானசேகரன்,**

*எழுத்தாளர், ஞானம் சஞ்சிகை ஆசிரியர், இலங்கை*

அடிமனக் கனவுகள், தேடல்கள், சீறல்கள், விகாரங்கள், மனித நேயங்கள் பற்றி நிதர்சனமாகவும் யதார்த்த சூழல் மத்தியிலும் கதைகளை ஸ்ரீ ரஞ்சனி ஆக்கியிருக்கிறார். எனது உள்ளங்கவர்ந்த கதை 'உதிர்தலில்லை இனி'.

**-சுதா குமாரசாமி,**

*உளவியல் ஆற்றுப்படுத்தலாளர், கவிஞர், விமர்சகர், கனடா*

9 789554 041127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org